ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 4—0 |

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

| | | |
|---|---|---|
| மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி௵ புரட்டாசி௴ 4 உ (20—9—1931) | மலர் 21 |



சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் சிங்காரம் அவர்களின்

# மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருதலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

## சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

## மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் காகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், நாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

## அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

## குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,
தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!! முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டு௴த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

## சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

**குடி அரசு புத்தகசாலை, ஈரோடு**

இனும்! இனும்!! இனும்!!!

முந்துங்கள்! 1000 முந்துங்கள்!!

மக்களால் வாசிக்கப்பட்ட

## ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்களை

படித்து எளிதில் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொள்ளுங்கள். (முதல்பதிப்பில் சொற்ப கோர்ஸ்கள் தான் கைவசம்)

தமிழ் வாசிக்க தெரிந்த யாவரும் 1.7 கோர்ஸ்களடங்கிய பாடங்களை தபால் மூலம் 30 நாட்களில் வாசித்துக் கொள்ளலாம். வியாபாரிகள், தொழிலாளிகள், ஆபீஸ் சிப்பந்திகள், கிராம உபாத்திமார்கள், பாடசாலை மாணவர்களுக்கு அதிக பிரயோஜமானது. ஏழை மக்களுக்கென்றே எழுதப்பட்டது. பீஸ் ரூ. 5—0—0 புதுவாழ்க்கை ஜீவரஹஸ்ய புஸ்தகங்கள் சொற்ப காலம்வரை இனாம்,

அபிப்பிராயங்களில் சில.

1. கே. முத்துச்சாமி, திருப்பூர். ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்கள் பாஸான சர்டிபிக்கேட் பெற்றதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன்.

2. என். மனோரஞ்சனிதேவி சென்னை. உங்களின் கோர்ஸ்களை நான் பார்த்துள்ளேன். வெகு சுலபமான முறையில் நீங்கள் கற்றுக்கொடுப்பது பாராட்டத்தக்கதே.

3. முகமது முகைதீன், செய்கோன். தாங்கள் திருத்தி அனுப்பின கோர்ஸ்களுக்கும், பாடங்களுக்கும் அதி நன்றி செலுத்துகிறேன்.

N B. அயல்நாட்டு மக்கள் காலதாமதமாகாதபடி ரிஜிஸ்டர் மூலம் தொகை அனுப்பவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்

இன்ஸ்டிடியூட் ஆறுமுகநேரி S. I. R.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

### "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தேன் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், சென்னை

பி. எம். சி. லிங்கத்தின்

## சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0

விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—

திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,

செவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்

## சுயமரியாதைச் சமத்துவப் பாடல்கள்.

சுயமரியாதைக் கொள்கைகளை நன்கு விளக்கி அவைகளின் முன்னேற்றத்தினாலேயே சுயராஜ்யத்தையுமடைய முடியும் என்ற விவரத்தைப்பல பாடல்களாலும் வசனங்களாலும் விளக்குவதிது. விலை அணா 0—2—6 ஒரு பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## குடிகாரர் மகாநாடு.

ஹாஸ்யமுறையில் மதுவிலக்கின் அவஸ்யத்தை வற்புறுத்துவதிது. விலை அணா 1½ ஒரு பிரதி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி.

சமத்துவப் பிரசுர நிலையம், தெற்குமாசிவீதி, மதுரை.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ் மாதப்பத்திரிகை.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.

வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர் (நாவலூற்று)

சி. சுவாமி சிவநேசம்,

"சன்மார்க்கன்" பழனி.

## சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது ஒரு முறை பரீட்சியுங்கள்.

புட்டி 1க்கு ரூ. 1—0—0

டஜன் 1க்கு ரூ. 10—0—0

ஏஜண்டுகள் தேவை

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி.பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழனி S.I.

# கல்வியும், மதமும்.

## முற்கால போதனாமுறை.

(Dr. R. P. பராஞ்சிபே எழுதியது)

### மிக அருமையான விஷயம்.

[ பம்பாய் கல்விமந்திரியாயிருந்தவரும், லண்டனின் இந்தியா கவுன்சில் மெம்பராயிருப்பவருமான Dr. R. P. பராஞ்சிபே M. A., D. SC., அவர்கள் இந்தியப் பிரச்சினையின் முக்கியாம்சம் என்னும் நூலில் இந்தியக்கல்வியைப்பற்றி எழுதியிருக்கும் அபிப்பிராயம். இவர் பர்கூசன் காலேஜ் பிரின்ஸிபலாய் வெகு காலம் இருந்தார். ]

### போதனாமுறை.

உலகத்தில் அறிவாளிகளாயிருப்பவர்கள் எவரும் ஒவ்வொரு துறையிலும் முற்போக்கு ஏற்பட வேண்டும் என்பதில் கவலையும், கருத்தும் உடையவர்களாக இருப்பார்களே யொழிய பிற்போக்காளர்களாக இருக்கவே மாட்டார்கள். ஆதலால் மக்கள் ஒவ்வொருவரும் தற்காலம் தாம் இருக்கும் நிலைமையையே கிரமமானநிலைமை என்றும் தமது எண்ணங்களும், நம்பிக்கைகளுமே சரியானவைகளென்றும் கருதிக்கொண்டு இராமல் அறிவுக்கும், அனுபவத்திற்கும் ஒத்துவராத விஷயங்களை தைரியமாய் புறக்கணித்து பகுத்தறிவுக்கு ஏற்றதை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும். ஆனால், மனிதர்களுடைய வைதீக சம்பந்தமான (பிடிவாத) குணமானது அறிவின் சுதந்திரத்திற்கு தடையாகவே இருந்து வருகின்றது.

அன்றியும், சிறு பிராயமுதலே மக்களுக்குள் புகுத்தப்பட்டதான எவ்விதமான உணர்ச்சியும் மக்களைப் புதிய தோற்றங்களுக்கு தக்கவாறு நடந்து கொள்ளவிடாமல் தடைப்படுத்துவதுடன் பல கஷ்டங்களுக்கும் ஆளாக்கியே தீருகின்றது. ஆதலால், குழந்தைப் பிராயத்திலிருந்தே சிறுவர்களுக்குச் சரியான மனப்பான்மை ஏற்படும் பொருட்டு எந்த விஷயத்திற்கும் அவர்களுடைய அறிவையும், ஆராய்ச்சியையுமே பிரதானமானதாய்க்கருதி அதன் மூலம் எந்த முடிவையும் அடைய இடம் கொடுத்து தாங்களாகவே ஒரு முடிவுக்கு வரும்படியான மாதிரியில் அவர்களுக்கு விஷயங்களை போதித்து வந்தோமேயானால் அவர்களது பிற்கால வாழ்வில் முற்போக்கடைய வேண்டிய விஷயத்தில் எவ்வித தடையும், கஷ்டமும் ஏற்பட இடமில்லாது போய்விடும்.

ஆகவே, மேல்கண்ட இந்தக்காரணங்களால் குழந்தைகளின் கல்விமுறையானது முக்கியமானதாகக் கருதவேண்டியதாகும். அதாவது கல்வி விஷயத்தில் குழந்தைகளின் மனதில் அவர்களால் நன்றாய் ஆராய்ந்ததும், அனுபவத்தை ஒட்டியதுமான விஷயங்களே பதியும்படியாகவும் எப்படிப்பட்ட எண்ணமானாலும், நம்பிக்கையானாலும் நிர்ப்பந்தத்தின் மூலமும் குருட்டு நம்பிக்கையின் மூலமும் புகுத்தப்படாமலும், ஏற்பட விடாமலும் ஜாக்கிரதையாய்ப் பார்த்து, கல்வியின் போதனாமுறையை அமைக்கவேண்டும். அப்படிப்பட்ட முறைதான் சரியான போதனாமுறையாகும்.

### கல்வியில் மதம்.

ஆனால், இதற்கு நேர்மாறாக கல்வி விஷயங்களில் மதங்கள் வந்து மக்களின் குழந்தைப் பருவத்திலிருந்தே கல்வி போதிக்கும் சாக்கின் வழியாய் புகுந்துகொண்டு தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும், வளர்க்கவும் பாடுபடுகின்றன.

உலகத்தில் உள்ள எல்லா மதங்களிடமும் இந்தக்குணம் இருந்து தான் வருகிறது. நவ நாகரீக தேசம் என்று சொல்லப்படும் இங்கிலாந்து தேசத்திலும்கூட கல்வி போதனா முறையின் சீர்திருத்தமானது பள்ளிக்கூடங்களில் மத ஆதிக்கத்தை ஒதுக்கித்தள்ளி விட்டு கல்வி கற்பிக்க முடியாமல் இருப்பதோடு கிறிஸ்துவ மதத்தில் ஏற்பட்டுள்ள பல பிரிவுதாரர்களால் பலதடைகளும் ஏற்பட்டு வருகின்றன. உதாரணமாக சமீபகாலத்தில் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்துத் தீரவேண்டிய கட்டாய வயதை இப்போது இருப்பதைவிட இனியும் சற்று உயர்த்த வேண்டும் என்கின்ற ஒரு பிரச்சினை அங்கு கல்வி இலாகாக்காரர்களால் கொண்டுவரப்பட்ட காலத்தில், அங்குள்ள மத சம்பந்தமான பல பிரிவார்கள் அதாவது ரோமன் கத்தோலிக் கூட்டத்தார்களும், சர்ச்சுமென் நான்கன் பர்மிஸ் கூட்டத்தாரும் தங்களுக்குள் ஏற்பட்ட தகராறுகளினால் அப்பிரச்சினையைசட்டசபையில் தோற்கடித்து விட்டார்கள். இதற்கு உள்ள காரணம் என்னவென்றால் அதிக வயதுவரை பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமானால் பள்ளிக்கூடங்களில் இனியும் கொஞ்சம் அதிகமான சௌகரியங்களும், இடவசதிகளும் தேவையிருக்கும்.

ஆகவே, அதற்கு சக்தியும், சௌகரியமும் இல்லாதவர்கள் சௌகரியம் இருக்கின்றவர்களைக்கூட நடத்தவிடாமல் செய்து விட்டார்கள். ஏனெனில், எந்தப் பள்ளியில் அதிகப் பிள்ளைகள் படிக்க நேரிடுமோ அந்தப் பிள்ளைகளின் மீது அந்தப்பள்ளிக்குச் சம்பந்தப்பட்ட மதமே ஆதிக்கம் பெற்று விடும். ஆதலால் அந்தக் காரணத்தாலேயே அதிக வயதுவரை பிள்ளைகள் படிப்பிக்கப்பட வேண்டிய சட்டத்தை தடுத்து விட்டார்கள். இதனால் மதத்தகராறால் பிள்ளைகளின் கல்வி சௌகரியம் பாதிக்கப்பட்டு விட்டது என்பதோடு மதத்திற்காகவேதான் கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதும் விளங்குகின்றது.

ஆகவே, கல்வியுடன் மதம் புகுத்தப்பட்டு விடுகின்றதால் கல்வி தடைப்படுவதுடன் கல்வியின் உண்மையான பயன் விளையாமலும் போய் விடுகின்றது. மதத்திற்கு முக்கிய ஸ்தானத்தை ஒப்புக்கொள்ளாதவர்களான அறிவு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் குழந்தைகளின் கல்விமுறையில் ஒவ்வொரு குழந்தையும் தன் தன் பகுத்தறிவை எப்படி தாராளமாய் உபயோகப்படுத்தச் செய்வது என்பதில் கவலை செலுத்தி குழந்தைகளைத் தாங்களாகவே விஷயங்களை தெரிந்துகொள்ளச் செய்ய முயற்சிக்கின்றார்கள்.

### கல்வியின் லக்ஷியம்.

இதுபோலவே உலகில் ஒவ்வொரு தேசத்தாரும் கல்வியின் மூலம் தங்களுக்கிஷ்டமான ஒருவித லக்ஷியத்தையே புகுத்த பாடுபடுகின்றார்கள். இட்டாலிதேசத்தில் கல்வியின் லக்ஷியம் அந்நாட்டு மக்களுக்குக் குழந்தைப்பருவத்திலேயே 'பாஸிஸ்ட்டு' என்பதான [முதலாளி தத்துவ] கொள்கைகளை கல்வியின் வழியாய் புகுத்தி அதன் மூலம் ஆக்கந்தேடுவதையே லட்சியமாய் கொண்டிருக்கிறது. அதேமாதிரி ருஷிய தேசத்திலும் போல்ஷ்விஷம் என்னும் [தொழிலாளிகளின் ஆதிக்க] கொள்கையை மக்களுக்குள் புகுத்துவதை லட்சியமாய்க் கொண்டு கல்வி கற்பிக்கப்படுகிறது இன்னும் பல தேசங்களிலும் 'தேசியம்' என்னும் பேரால் ஏராளமான ஜனங்கள் சேனைகளில் சேர்ந்து பீரங்கிக் குண்டுகளுக்கிரையாவதற்கு குழந்தைப்பருவத்திலேயே தைரியம் உண்டாகவேண்டுமென்ற லட்சியத்தைக்கொண்டு கல்வியை பயன் படுத்தப்படுகிறது.

இன்னும் சில தேசங்களில் பொது ஜனங்களின் பகுத்தறிவை அலட்சியம் செய்து அதை வளரவிடாமலும் தடுத்து புரோகிதக்கூட்டத்தாரின் ஆதிக்கத்திற்கு பலந்தேட கல்வி முறை பயன் படுத்தப்படுகிறது.

ஆகவே, இம்மாதிரியாக ஏதோ ஒரு கொள்கையை பிரசாரஞ்செய்வதற்கு அனுகூலமான உள் எண்ணத்தின்மீதே கல்வியை கற்பிக்கப்படும் போதனாமுறையை கண்டிக்க வேண்டியது மிகவும் அவசியமென்றே நாம் கருதுகின்றோம்.

சிறுவர்களின் அறிவானது சுதந்திரமாகவே வளர்ச்சி பெற்று அது நாளாவட்டத்தில் வலுவடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தைத்தான் கல்வி போதிப்பதின் லக்ஷியமாய்க் கொள்ள வேண்டும்.

### பழைய முறை.

இந்திய தேசத்தில் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதாயுள்ள பல மதங்கள் இருந்து வருவதால் மத போதனை என்பது வெகு சிக்கலான பிரச்சினையாக இருந்து வருகின்றது.

தற்காலம் இருந்துவரும் போதனாமுறை ஏற்பட்டுசுமார் 75 வருஷமாகின்றது. அதற்கு முன் மக்களில் ஒரு பிரிவினராகிய வெகு சிறு வகுப்பாரேதான் கல்வி கற்க முடிந்தது. அவர்களும் எழுதப்படிக்க கணக்குக்கூட்ட மாத்திரம் தான் தெரியக்கூடியவர்களாயிருந்தார்கள். இந்தக் காலங்களில் பிள்ளைகளுக்குக் கற்பிக்கப்படும் அநேக விஷயங்கள் அந்தக்காலத்தில் வெகு பேருக்கு அடியோடு தெரியவே தெரியாது. அவை அக்காலத்தில் போதிக்கப்படுவதே வெகு அருமையான காரியமாகும். ஆனால் இந்துக்களுக்குள் உயர்ந்த ஜாதியாரென்று சொல்லப்பட்ட வகுப்புப் பிள்ளைகள் சமஸ்கிருத பாஷையில் ஏற்பட்ட சில நூல்களை மாத்திரம் குருட்டு உருப்போட்டு மனப்பாடம் செய்து வைப்பார்கள்.

புரோகித வகுப்பைச் சேர்ந்தவர்களோ வேத சாஸ்திரங்களை அதன் அர்த்தத்தைப்பற்றிய கவலையில்லாமல் அதன் சப்தத்தை மாத்திரம் மனப்பாடம் செய்து வருவார்கள். இந்த மாதிரியான மனப்பாடம்செய்யும் (அத்தியாயன) கல்வி முடிவுபெற ஒரு மாணாக்கனுக்கு 12 வருடம் பிடிக்கும்.

வைத்தியத் தொழிலில் ஈடுபடவிரும்புகின்றவர்கள் ஏதாவது ஒரு சமஸ்கிருத நூலைப்படித்து விட்டு ஒரு வைத்தியரிடமிருந்து அனுபோகம் பெற வேண்டும். வைத்திய போதனாமுறை என்பதாக ஒரு தனிமுறை கிடையாததால் அநேக போலி வைத்தியர்கள் சுலபமாகக்கிளம்பி விடுவார்கள்.

சாஸ்திரிகளாகவும், வித்வான்களாகவும் இருக்க விரும்புகின்றவர்கள் ஏதாவது ஒரு குருவினிடமிருந்து புராண இதிகாசங்களை சமஸ்கிருத பாஷையில் பாடம் கேட்பார்கள்.

போதனாமுறை என்பதை தனித்தனி தொழிலுக்கு தனித்தனி முறை என்பதாக பாகுபடுத்தி அமைக்கப்படாததால் ஒரு படிப்பையே எல்லாத்தொழிலுக்கும் உபயோகப்படுத்திவரநேர்ந்தது.

### "நிபுணர்கள்"

ஒரு சாஸ்திரி எனப்படுபவன் அவசியத்திற்கும் சமயத்திற்கும் தகுந்த மாதிரி எல்லாம் அதாவது ஜாதகம் கணிக்கவும், ஜோசியம் கூறவும், நாள் பார்க்கவும், வைதீகச்சடங்குகள் செய்யும் புரோகிதனாகவும், புராணப்பிரசங்கம் செய்யும் பண்டிதனாகவும், மதசமூக பழக்க வழக்கங்க

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# கர்ப்ப ஆக்ஷி முறை.

## ஓர் சந்தேகம்.

நமது நண்பர் ஒருவர் கருப்பத் தடையின் அவசியத்தைத்தான் ஒப்புக்கொண்ட போதிலும் அனுஷ்டிக்கப்படவேண்டிய முறையைப்பற்றி அடியிற்கண்டவாறு ஆக்ஷேபிக்கிறார்:— அதாவது.

"கர்ப்ப உற்பத்திக்கு ஹேதுக்கள் சுக்கிலம் சுரோணிதம் என்று கூறப்படுவனவேயாகும். கலவி காலத்தில் ஆடவனிடமிருந்து சுக்கிலமும், ஸ்திரீயினிடமிருந்து சுரோணிதமும் வெளியாகிறது. கர்ப்ப உற்பத்திக்கு சுக்கில ஸ்கலிதம் தான் அவசியமானதேயொழிய சுரோணித ஸ்கலிதம் அவசியமல்ல. உதாரணமாக ஒரு ஸ்திரீ பத்துக்குழந்தைகள் பெற்றிருக்கலாம். அவளுக்கு சுரோணிதமே ஸ்கலிதமாகாமலிருக்கலாம். அதாவது புருஷ இச்சையே பூர்த்தியடையாமலிருக்கலாம்.

ஸ்கலிதமான சுக்கிலம் கருப்பையின் வாயிலை நோக்கி நழுவிப் போகும்போது, நிதம்பத்தின் வரைகளில் தங்கியிருக்கும் சுரோணிதக் கிருமிகள், சுக்கிலத்திலுள்ள ஆண்சினைகளிடம்ஸ்வீகரித்துக்கொண்டு கருப்பையில் பிரவேசிக்கிறது. உடனே கருப்பை வாய் மூடிக்கொள்ளுகிறது. அதிலிருந்து மாதவிடாய் நின்று கர்ப்ப உற்பத்தி உண்டாகிறது. இதுகாறும் கூறியவற்றிலிருந்து சுகில சுரோணித கிருமிகள் கருப்பையில் பிரவேசித்தால்தான் கர்ப்பம் ஏற்படும் என்பது புலனாகிறது. கிருமிகளை கருப்பையில் புகவிடாமல் செய்தாலும், அல்லது அவற்றை சக்தியிழந்துபோகும்படி சொய்தாலும், அழித்து விட்டாலும் கர்ப்பம் தரிக்காது.

### தடைமுறை.

சக்தியை இழந்து விடும்படி செய்வதோ அல்லது அழிந்து விடும்படி செய்வதோ, ஸ்திரிகளுக்கு கெடுதலை உண்டுபண்ணும். ஆதலின் செக்பெச்சாரி (Check Pessay) என்று சொல்லப்பட்ட ஓர் ரப்பர் கருவியைப் பெண்களுக்கு அணிவித்து போகித்தால் ஸ்கலிதமான விந்து உள்ளே பிரவேசியாமல் ரப்பர் பையிலேயே தங்கி விடுகிறபடியால்கர்ப்பந்தரிக்கமுடியாது என்று சொல்லிவிடலாம். இந்த முறையைத்தான் அநேகமாக ஸ்ரீமதிகார்மைக்கேல், மேரிஸ்டோப்ஸ் உள்பட யாவரும் கூறுகிறார்கள். உலகில் பெரும்பாலான இடங்களில்அனுஷ்டானத்தில் இருப்பதும் இதுதான். இதைத்தவிர கர்பத்தடை மருந்துகள் என்று சில போலி ஆசாமிகள் செய்து விற்கும் மருந்துகளால் யாதொரு பயனுமில்லை என்று நிச்சயமாய்க் கூறலாம். மற்றப்படி கருப்பச்சிதைவுண்டு பண்ணும் மருந்துகள் உளவென்று ஒப்புக்கொள்ளலாமேயொழிய கர்ப்பத்தடை மருந்துகள் என்று ஒரு மருந்தும் கிடையவே கிடையாது. ஆதலால் யாரும் ஏமாந்துபோகக்கூடாது.

"நிற்க, ஷெரப்பர்கருவியைஉபயோகிப்பதால் கர்ப்பத்தடை பெற்றுவிடும் என்பது உண்மையே. அதனால் ஆண், பெண் இருபாலரும் அனுபவிக்கும் இன்பம் எத்தகையது என்று ஆராயப்புகின் ஒருக்காலும் அத்தகைய கருவியை எவரும் உபயோகிக்கமுற்படார் என்பது திண்ணம். ஸ்திரியின் ஜனனேந்திரியம் வெகு நுட்பமானதும் ஸ்பரிச உணர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளது மாகும். அத்தகைய நுட்பமான இந்திரியத்தில் பிரவேசிக்கும் இயல்பையுடையதும் பிரவேசித்தால் இன்பத்தையன்றி இடரையளிக்காததுமான இந்திரியம் ஆண் உறுப்பொன்றே யாகும். இரண்டு இந்திரியங்களும் வெகு நுட்பமானவை. எலும்பில்லாமல் வெறும் தசை நரம்புகளாலானவை. உணர்ச்சியை மூளைக்கு அறிவிப்பது நரம்பு. ஆகவே வெறும்நரம்புத் தொகுதிகளாலான ஓர் அங்கத்திற்கு எத்தகைய நுட்பமான உணர்ச்சி உண்டு என்பதை வாசகர்களே தெரிந்து கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட கருவிகள் ஒன்றோடொன்று பொருந்தினால் ஏற்படும் இன்பம் எத்தகையது என்பதையும் பெண் உறுப்பின் தசையின் மிருதுத்தன்மைக்கு எவ்விதத்திலும ஒவ்வாத ரப்பரை அணிந்துகொண்டு அதுவும் ஆண் உறுப்புக்கும் ஏற்படும் சேர்க்கையின்பம் எத்தகையது என்பதையும் அனுபவிகளே கூறமுடியும். ஒரு முறை இத்தகைய ரப்பர் கருவியை உபயோகித்தவர் மறுமுறை அதை உபயோகிக்க மனம் ஒருப்படார் என்பது திண்ணம்.

இந்த ரப்பரை யணிந்து கொள்ளும் ஸ்திரீகளுக்குபோககாலத்தில் அத்யந்தப் பிரியமாவது உல்லாசமாவது ஏற்படாது என்பதுடன் அநேக மருங்குகளில் முதலில் உறைசலை உண்டு பண்ணிவிடும். ஸ்திரீ புருஷ ஜனனேந்திரியங்களின் கூட்டுறவால் ஏற்படும் இன்பத்தில் அனுவளவும் இத்தகைய கருவியால் எதிர்பார்க்கமுடியாது. மேலும் ஆண் உறுப்பின் இயற்கையும் நாளடைவில் மாறி விடவும் கூடும். போக காலத்தில் பஞ்சேந்திரியங்களும் தத்தம் சுவாதீனத்தை யிழந்து இன்பக்குவட்டின் மிசை அமரும் தன்மை இத்தகைய ரப்பர் கருவியால் தடையுறும் என்பது திண்ணம்"

இந்தப்படி எழுதிய நண்பரின் ஆக்ஷேபனையில் சில உண்மைகளிருந்த போதிலும் கர்ப்ப ஆக்ஷி ரப்பர் கருவிகளை உபயோகிப்பதில் அவர் நினைக்கிற அளவு கஷ்டமிருக்கவில்லை. கருவியை அனுபவத்தில் பரீக்ஷித்துப் பார்த்தால் அவருக்குத் தோன்றிய சந்தேகங்களுக்கு ஆதாரமில்லை என்பது தெரியவரும்.

இயற்கையாய் ஏற்பட்டதல்லாமல் மனிதன் செய்கையாய் ஏற்படுத்திக்கொள்ளும் எந்த சாதனங்களையும் கையாளுவதில் ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் தோன்றுவது சாதாரணம். உதாரணமாக, பல் விழுந்த ஒருவர் செயற்கைப்பல்லை செய்து வைத்துக்கொண்டால் ஆரம்பத்தில் சிறிது வலியும், பெருத்த மனக்கஷ்டமும் ஏற்படுவதுண்டு. மூக்குக் கண்ணாடி போட்டுக்கொள்ளுவதிலும முதலில் சிறிது சிரமமேற்படுவதியல்பு. ஆனால் சிறிது நாட்கள் கழிந்தபின் செயற்கைப்பல் வைத்திருப்பவரும், மூக்குக் கண்ணாடி யணிந்திருப்பவரும, அம்மாதிரி ஒரு செயற்கை சாதனந்தைத்தான் அணிந்திருப்பதையே மறந்து விடுகிறார்கள். அதே மாதிரி ஒரு ரப்பர் கருவியை மிருதுவான ஒரு பாகத்தில் அணிந்து கொள்ளுவதில் ஆதியில் கொஞ்சம அருவருப்பும், சிரமமும் தோன்றலாம். ஆனால் கொஞ்சகாலம் பொருத்துக் கொண்டிருப்பதால் அந்த உணர்ச்சி தானாகவே மறைந்து போகின்றது.

நமது நண்பர் கருதுவதுபோல் ரப்பர் கருவியானது எவ்வித தடங்கலையும் உண்டாக்கக்கூடியதல்ல. உறுப்பில் உணர்ச்சியுள்ள பாகத்தை அது தடைப்படுத்தவில்லை. கருப்பையானது உள்ளே பதிந்து கிடக்கின்றது அதிலுள்ள சிறு துவாரத்தையே இந்த கருவி மறைக்கின்றதே அல்லாமல் நிதம்பத்தில் மற்ற பாகங்களுக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. ஒருவிரலில் அங்குஸ்தான் தரிப்பது போல் கருப்பையின் மேல் இக்கருவி தரிக்கப்படுகிறது. கலவிபோகத்தில் கருப்பை சம்பந்தம் இல்லை. போக உறுப்புகள் முன்பாகத்திலேயே இருப்பதால் நண்பர் நினைக்கும் தடங்கல் ஏற்படக்காரணமில்லை. அப்படிப்பட்டத் தடங்கலிருந்தால் அமெரிக்காவிலும்,ஐரோப்பாவிலுமுள்ளலட்சக்கணக்கானமக்கள் இக்கருவிகளை உபயோகிக்கமாட்டார்கள். ஆனால், இக்கருவிகளை உபயோகிக்கும் மாதிரியை பிசகில்லாமல், முடியுமானால் டாக்டர்களின் மூலமே, அறிந்து கொள்ளவேண்டும்.

---

## குறவர், வலையர் மகாநாடு.

13-9-31ந்தேதி கோவை குறவர், வலையர் மகாநாடு கோவை சாரதா பெண் பாடசாலையில் திரு. எஸ். சின்னப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பலபிரமுகர்கள் பல அரியவிஷயங்களைப்பற்றி பேசி பலதீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## மைலாப்பூர் நாடார்சங்கம்.

இச்சங்கத்தின் ஆரம்பவிழா 30—8—31-ந் தேதி அம்பட்டன் வாராவதியில் திரு. வி. பி. நயினார் நாடார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. திரு. துரைராஜபாண்டிய நாடாரும், திரு. முத்துபாண்டிய நாடாரும் பிரசங்கங்கள் செய்தனர். திரு. துரைராஜபாண்டிய நாடார் திரு. த. தங்கவேல் நாடார் இருவரையும் காரியதரிசிகளாகவும், திரு. முத்துபாண்டிய நாடாரை பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. மூலைப்பொழி திரவிய நாடாரால் வந்தனோபசாரம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

# இந்தியத்தாய்

## இரண்டாவது புஸ்தகம்.

### இந்துக்களின் பாலிய மணமென்றால் என்ன?

(T. D. கோபால்)

முன் தொடர்ச்சி.

**நா**ன்கு நாட்களுக்குப்பிறகு, அதாவது 19-9-1927ந் தேதியன்று இந்து அங்கத்தினரிலொருவர் பதினேழு பெயர்களடங்கிய ஒரு செலக்ட் கமிட்டியை நியமனம் செய்ய வேண்டுமென ஓர் தீர்மானத்தை பிரேரேபித்தார். அத்தீர்மானமானது எல்லா அங்கத்தினர்களாலும் ஆமோதிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டது. இந்தப்பதினேழு பெயர்களடங்கிய கமிட்டியில் இந்துக்களில் பதினொருவரும், முஸ்லீம்களிலிருவரும், இங்கிலிஷ்காரர்களிலொருவரும், வைசிராய் அவர்களின் ஆலோசனைசபையின் அங்கத்தினர்களிலொருவராகிய கனம் ஜேம்ஸ் கிரிரார் அவர்கள் ஒருவரும், ஆங்கிலோ-இந்திய வகுப்பினர்களிலொருவரும், ஐரோப்பியவகுப்பினர்களிலொருவருமாக அங்கம் வகித்தார்கள். இந்திய சட்டசபை அங்கத்தினர்களில் பெரும்பான்மையான அங்கத்தினர்களுக்கு குறித்த இக்காரியத்திலுடனே இறங்கிவேலை செய்யவேண்டுமென ஓர் அவாபெரிதுமிருந்துவந்ததாகக் காணப்பட்டதினால் புதியதாக நியமிக்கப்பட்ட இக்கமிட்டியானது உடனே தன்னுடைய வேலையை ஆரம்பிக்கக் கூடுமெனக்கருதவேண்டியிருக்கின்றது.

ஆனால், இந்திய கவர்ன்மெண்டாரோ, செப்டம்பர் மாதம் 15ந் தேதி நடைபெற்ற விவாதத்தின் பயனாலேற்பட்ட அபிப்பிராயபேதங்களை மட்டும் கவனித்ததாகக்காணப்படுகின்றார்களேயல்லாமல், ஓர் சட்டத்தை இயற்றவேண்டுமென்கின்ற எண்ணமவர்களுக்கு இருந்ததாகவே காணப்படவில்லை. ஏனெனில், கவர்ன்மெண்டாரின் அத்தகைய நடவடிக்கையானது பெரும்பான்மையான ஓட்டுகளால் கண்டிக்கப்பட்டிருந்தும், அவர்கள் சட்ட சபையின் கௌரவத்தை சிறிதும் லக்ஷியம் செய்யாமலே, சட்டசபையின் தீர்மான முடிவை நிராகரித்ததுமல்லாமல், தங்களுக்கிருக்கும் எதேச்சாதிகாரத்தினுதவியால் அந்தப்பாலிகைகளின் விவாகத்தடுப்புமசோதாவை ஏனைய மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு அனுப்புவதெனவே தீர்மானித்து விட்டார்கள். அக்டோபர் 1927ல் இம்மாதிரியாகச் செய்யப்பட்டு, அதனுடைய முடிவானது அடுத்த பிப்ரவரி மாதத்தில் 'வெள்ளைக்கடிதம்' எனக்கூறப்படுவதின் மூலம் பிரசுரிக்கப்பட்டது.

எப்படியிருந்தபோதிலும், இடையில் சென்ற இந்த நான்கு மாத காலத்திலும், பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியல் வகுப்பில் ஒருபெரிய புயல்காற்று அடித்துவிட்டதெனவே கூறப்படவேண்டும். மனோவிகற்பங்களும், குற்றம் சாட்டுதலும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றம் சாட்டியவர்களையே குற்றவாளிகளெனக்கூறுதலும், கோபமும், பகையும், குரோதமும், மனத்தாங்கலும், அதட்டுதலும், அச்சுறுத்தலும், பயமுறுத்தலுமாகிய செய்கைகள் அப்புயலில் கலந்து, திடீரெனவீச ஆரம்பித்தது. இச்செய்கையானது சட்டசபை அங்கத்தினர்களைமட்டும் பாதித்துவிட்டு அமர்ந்துவிடவில்லை. ஆனால், ஹிந்துமத வைதீகத்தைப்பாதுகாப்பதற்கென, சட்டசபைக்கு வெளியே காவல் புரிந்துவரும் மதவெறியர்களுக்குள்ளும் இச்சுழல் காற்றானது சுழன்றுகொண்டேயிருந்தது எதிர்பாராதபடி நேர்ந்த இத்தகைய தொந்தரவினாலும், குழப்பத்தாலும் மிகவும் சாவதானமாகவும், எச்சரிக்கையாகவும், அடியெடுத்து வைக்கவேண்டுமென கருதிக்கொண்டிருந்த வைசிராய் அவர்களின் கவர்ன்மெண்டானது, தாங்கள் முதலிலெண்ணியதுபோல இப்பொழுது திருப்தியடைந்துவிட முடியவில்லை. பாலிய விவாஹச்சட்டத்தை நிறைவேற்றி, நிறைவேற்றுவதற்கு மிக்க ஆர்வமுள்ள ஒருவகுப்பாரைத் திருப்தி செய்வதற்கு முன்னாலேயும், அச்சட்டத்தை நிறைவேற்றுவதால் பிறிதொரு வகுப்பார் கோபமூட்டப்படுவதற்கு முன்னாலேயும், இப்பொழுது மிக்க உக்கிரத்துடனும், மும்முரமாகவும் விவாதத்திலிருக்கும் விஷயத்தை தேசத்திலுள்ள எல்லாமக்களின் அபிப்பிராயத்திற்கும் விடுத்து இதுவரை ஒருவருக்கும் புலப்படாமலும், அறியக்கூடாமலும் மறைந்திருக்கப்பட்ட விஷயங்களை வெளியெடுத்து, எல்லாருக்கும் தெரியும்படியாக பகிரங்கப்படுத்த வேண்டுமென கவர்ன்மெண்டாரும் முடிவு செய்து கொண்டார்கள். அதுதான் சிறந்தமார்க்கமென்பதை அவர்களும் உடனே கைக்கொண்டார்கள். ஆகையினால் மாகாண கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயங்களையும், எதிர்த்து நிற்கும் மக்களின் அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்ளுவதினால் மட்டும் ஒருவித பிரயோஜனமுமேற்பட்டு விடாதென்பது இப்பொழுது புலப்பட்டது. இவ்விஷயமோ இந்துக்களையே அதிமுக்கியமாகப் பாதிக்கக் கூடியதாயிருப்பதால், பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எல்லா இந்துமக்களின் பழக்கத்தையும், போக்கையும் நிலைமையையும், தன்மையையுமறிந்து கொள்ள வேண்டுமென்பதுடன், அவர்களுடையப்பழக்க வழக்கங்களையும், அப்பியாசங்களையும், அபிப்பிராயங்களையும் அவசியம் விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆகையினாலே, 1928 வருஷம் பிப்ரவரி மாத ஆரம்பத்தில், இந்திய கவர்ன்மெண்டார் தாங்களே 'சம்மத வயது கமிட்டி' யென ஒரு கமிட்டியை நியமிப்பதாகவும், அக்கமிட்டியார் இப்பொழுது விவரிக்கப்பட்ட விஷயத்தை மேற்போட்டுக்கொண்டு வேலை செய்வார்களெனவும் பிரசித்தப்படுத்தும்படியாக நேர்ந்தது.

இக்கமிட்டியானது கடைசியாக உருவாக்கப்பட்டபொழுது இதில் பத்து பெயர்களடங்கியிருந்தார்கள். அந்தப்பத்துபெயர்களிலும் நான்கு பேர்கள் சட்ட நிரூபண சபையின் அங்கத்தினர்களாவார்கள். ஓர் ஆங்கிலேய லேடி டாக்டரைத்தவிர்த்து ஏனைய அங்கத்தினர்கள் யாவரும் இந்தியர்களேயாவார்கள். நியமனம் செய்யப்பட்ட ஒன்பது இந்தியர்களில் அறுவர் இந்துக்களும் மூவர் முஸ்லீம்களுமாவார்கள். ஆறு இந்துக்களிலும் சிலர் பிராமணர்களாயிருந்தார்கள். சிலர் அவ்வகுப்பை விடத்தாழ்ந்த வகுப்பினர்களாயிருந்தார்கள். ஆனால் ஒரே மாகாணத்திலிருந்து மட்டும் இரண்டு அங்கத்தினர்கள் ஏககாலத்தில் நியமிக்கப்படவேயில்லை. ஏனைய மூன்று முகமதிய அங்கத்தினர்களோவெனில் பஞ்சாபிலிருந்தும், கத்தியவார் தீபகல்பத்திலிருந்தும், ஐக்கிய மாகாணத்திலிருந்தும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இந்திய சட்டசபையைச் சார்ந்த பைனான்ஸ் கமிட்டி (*The Standing Finance Committee*) யானது இக்காரியத்திற்காக செலவிடப்படவேண்டிய, மிக்க அடக்கமுள்ள ஓர் தொகையை, தாங்கள் புரிவது இன்னதென அறிந்துகொள்ளாமலும், மிக்கப்பொறுப்பற்றதன்மையிலும் அனுமதிக்க மறுத்துவிட்டது. எப்படியிருந்தபோதிலும் இவ்விஷயத்திற்கு அவசியமாய் வேண்டியிருந்த தொகை முழுவதும் கவர்ன்மெண்டாரால் அனுமதிக்கப்பட்டு, புதிதாக நியமனஞ் செய்யப்பட்ட "சம்மத வயது கமிட்டி" யானது அதற்கு நியமிக்கப்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட வேலையை 30-6-28ந் தேதியன்றுசெய்ய ஆரம்பம் செய்தது. விரிவாகக் கூறவேண்டுமானால், 1925ல் இயற்றப்பட்ட பினல் கோடு ஆக்டை பரிசீலனை செய்து, அது நடைமுறையிலெவ்வாறு அனுஷ்டிக்கப்பட்டு வேலை செய்து கொண்டு வரப்பட்டதென்பதைஅறிவிக்கவேண்டுமென்பதே இக்கமிட்டியின் முழுநோக்கமாயிருந்தது. அப்பொழுதியற்றப்பட்ட அச்சட்டத்தின் கீழ், ஒரு மனைவியின் சம்மத வயதென்பதானது பதினைந்தெனக்குறிக்கப்பட்டிருந்ததானது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாமென்று கருதுகின்றோம். பொது மக்களின் நன்மையை யுத்தேசித்த இச்சட்டத்திலேதாகிலும் இப்பொழுது மாறுதல் செய்யவேண்டிய அவசியமாவென்பதையும் இக்கமிட்டியானது அறிவிக்கவேண்டியிருந்தது.

இக்கமிட்டியார், முதன் முதலாக தாங்கள் விசாரணை செய்யவேண்டிய விஷயங்கள் யாவையும் ஒன்றாகத்திரட்டி, இருபத்தியொரு கேள்விகளாகத்தொகுத்துக்கொண்டார்கள். இவர்களால் இவ்வாறு தயாரிக்கப்பட்ட அக்கேள்விகள் யாவையும் அவர்கள் எல்லா இந்தியப்பத்திரிகைகளிலும் பகிரங்கப்படுத்தினதுமல்லாமல், தாங்கள் யார் யாரைச்சந்தித்து நேரில் பேசவேண்டுமென விரும்பியிருந்தார்களோ அவர்கள் யாவருக்கும் அக்கேள்விகளடங்கிய ஜாபிதாவை முன்னதாகவே தபாலின் மூலமாக அவர்களுக்கு அனுப்பியும் விட்டார்கள்.

15-9 1928ந் தேதியன்று கமிட்டியானது விவாதத்திலிருந்து வரும் விஷயத்தின்மீது நாட்டம் வைத்து, நேருக்கு நேராக அறிந்து கொள்ளுவதற்காகப்பிரயாணம் செய்யத்துடங்கியது. அது அவ்வாறு பிரயாணம் செய்யும் பொழுது வடக்கிலிருந்து தெற்கேயும், கிழக்கிலிருந்து மேற்கேயும் உள்ள பிரதேசங்களையெல்லாம் பார்வை யிட்டதுமன்றி, இருபது முக்கிய நகரங்களையும், கணக்கற்ற கிராமங்களையும் பார்வையிட்டது. எல்லாவித அபிப்பிராயங்களையும், மனப்பான்மையையும் கொண்ட எல்லா சமூகங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான சாக்ஷிகளை அக்கமிட்டி விசாரணை செய்தது. வைத்தியர்கள், வக்கீல்கள், அரசியல்வாதிகள், நீதிபதிகள், சட்டநிரூபணஸ்தர்கள்முதல் ஏழைக்குடியானவர்கள் வரையிலும், இந்து சந்நியாசிகள் முதல் அறிவுள்ள நாஸ்திகர்கள் வரையிலும், பிராமணர்கள் முதல் தீண்டப்படாதவர்கள்வரையிலும், கலாசாலைப்பட்டங்கள் பெற்று, விடுதலையடைந்த பெண்கள் முதல் புர்தா என்னும் திரைமறைவில் மறைந்து கொண்டிருக்கும் வைதீகப் பெண்கள் வரையிலும் விசாரணை செய்யப்பட்டார்கள்.

இக்கேள்வியின் பயனாய் கடிதத்திலேற்பட்ட முடிவென்னவெனில், சுமார் 4500 பெரிய பக்கங்களில் சிறிய எழுத்துக்களடங்கிய சுருக்கெழுத்து சாக்ஷியங்கள் ஒன்பது பாகங்களும், அதைத் தொடர்ந்தாப்போல் வந்த 353 பக்கங்களடங்கிய ஏகமனதான அறிக்கை ஒரு பாகமுமேயாகும். இந்த புஸ்தகங்கள் யாவும் முக்கியமாய் இந்திய சட்டசபை அங்கத்தினர்களின் உபயோகத்திற்கென்று தயாரிக்கப்பட்டமையால், பழைய சமஸ்கிருத வாக்கியங்களடங்கிய

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

### கத்தோலிக்கர்களே!

# யோசித்துப்பாருங்கள்! கோபியாதீர்கள்!!

(ஞானானந்தன் எழுதுவது)

சுவிசேஷத்திற்கு இரண்டாவதாய்ச் சொல்லக்கூடியதும், மனிதன் கைபால் எழுதிய நூல்களிலெல்லாம் மேலானதும், கி. பி. 1419-ல் தோமஸ் அக்கெம்பிஸ் (Thoms a Kempis) என்ற குருவானவரால் எழுதப்பட்ட "தி இமிற்றேஷன் ஆப் கிறைஸ்ட்" (The Imitation of christ) என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்புமான கிறிஸ்து நாதர் அநுசாரத்தில், முதற்காண்டம் 17-ம் அதிகாரத்தில்,

'நடையுடைபாவனையினாலும், குருப்பட்டத்தினாலும் யாதொரு பிரயோசனமுமில்லை. ஆனால் நடக்கையின சீர்திருத்தமும், ஆசாபாசங்களின் முழு ஒறுத்தலுமே ஒருவனை மெய்யான சந்நியாசியாக்குகின்றன' என்றும்,

'சர்வேசுரனையும், தன் ஆத்தும ஈடேற்றத்தையும் தவிர, மற்றொன்றைத் தேடுகிறவன் இடையூறும், துன்பமும் அடைவானேயன்றி மற்றெதையும் காணப்போகிறதில்லை'' என்றும்,

'எல்லாரிடத்திலும் தாழ்ந்தவனாகவும் இருக்கப்பிரயாசைப்படாதவன் சமாதானத்தில் வெகுகாலம் நிலைத்திருக்கமாட்டான்' என்றும்'

'அதிகாரம் செலுத்துவதற்கல்ல ஊழியம் செய்வதற்காக வந்தாய் சாவகாசமாகக் கதை பேசிச் சோம்பலாய்க் காலங்கழிப்பதற்கல்ல, வருந்தியுழைத்துப்பாடுபடுவதற்காகவே நீ அழைக்கப்பட்டாய் என்று அறிந்திரு!'' என்றும் கூறப்பட்டிருப்பதைச் சந்நியாசி அந்தஸ்தைப் பெற்றிருக்கும் நம் குருக்களில் பலர் உணர்ந்து அதன்படி நடந்து வருகிறார்களா? அல்லது அவற்றிற்கு மாறாக நடந்து வருகிறார்களா? அங்ஙனம் மாறாக நடந்துவரும் குருமார்களை சந்நியாசிகளாக மதிக்கலாமா? என்பதைச் சற்று பொறுமையுடன் யோசித்துப் பாருங்கள்.

இன்னும், மேற்படி நூலில் 18-ம் அதிகாரத்தில்

'அர்ச்சியசிஷ்டவர்களும் கிறிஸ்துநாதருடைய நேசர்களும் தாகத்திலும், குளிரிலும் வஸ்திரவறுமையிலும், பிரயாசையிலும், இளைப்பிலும், விழிப்பிலும், உபவாசத்திலும், ஜெபத்திலும், தியானங்களிலும், அநேக இடையூறுகளிலும், துன்பங்களிலும் ஆண்டவருக்கு ஊழியம் பண்ணினார்கள்'' என்றும்,

"அப்போஸ்தவர்கள், வேத சாக்ஷிகள், ஸ்துதியர்கள், கன்னியாஸ்திரிகள், இன்னும் கிறிஸ்து நாதரைப் பின் செல்ல மனதாயிருந்த மற்றெல்லோரும் எத்தனையோ கணக்கற்ற கடின துன்பங்களை அனுபவித்தார்கள்'' என்றும்,

"ஆஸ்தி, உத்தியோகம், கீர்த்தி, சிநேகிதர், பந்துக்கள் முதலிய சகலத்தையும் வெறுத்து விட்டிருப்பார்கள், உலகத்திற்குச் சொந்தமான யாதொன்றையும் ஆசித்தவர்களல்ல, உயிரைக் காப்பாற்றுவதற்கு அவசியமானதை மிகச் சொற்பமாய் உண்பார்கள்: சரீரத்திற்கு அவசியமாயிருக்கப்பட்டது எதுவேனும் கொடுப்பது அவர்களுக்குப் பிரியமே இல்லை'' என்றும் கூறியிருப்பதை நன்றாய் அறிந்திருந்தும், அவற்றிற்கு மாறாகப் பல குருமார்களும் இக்காலத்தில் நடந்து வருகிறார்களே! ஏழை மக்கள் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருளையெல்லாம் தம் கைக்குள்ளாக்கி அவர்களை அடிமை வாழ்விலாழ்த்தி வைத்திருக்கிறார்களே! இத்தகைய தன்மை வாய்ந்தவர்கள் உண்மைச் சந்நியாசியாவார்களா? ஆட்டுத்தோலைப் போர்த்த ஓநாய்கள்போல் வேடந்தரித்து, ஏழைகளின் பணத்தைக்கொண்டு உயிர்வாழ்ந்து, அப்பாமர மக்களுக்குப் பலவித மான துன்பங்களைச் செய்துவருகின்ற துர்க்குணம் வாய்ந்த குருமார்களை மதத்தலைவர்கள் கவனித்துத் தண்டிக்க வேண்டாமா? குருமார் பதவியை விட்டு நீக்க வேண்டாமா? என்பதை ஆத்திரப்படாமல் சற்று யோசித்துப் பாருங்கள்!

தவிர, மேற்படி நூலில் நான்காம் காண்டம் 5-ம் அதிகாரத்தில்

"மேற்றிராணியார் உன் பேரில் கைகளை நீட்டி உனக்கு யாருடைய அலுவலைக் கொடுத்தாரென்று கவனித்து யோசனை செய்'' என்றும்,

"இதோ! நீ குருவானவராய் பூசை செய்ய அபிஷேகம் செய்யப்பட்டாய். தக்க ஆதரத்தோடும், விசுவாசத்தோடும் பக்தியோடும் சர்வேசுரனுக்குப் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கவும், மாசற்றவனாய் நடந்து கொள்ளவும் இப்போதே கவனித்துப் பார்'' என்றும்,

'உன் சுமை குறைவானதல்ல. ஆனால், உத்தம ஒழுங்கின் பந்தனத்தால் அதிக நெருக்கமாய்க்கட்டப்பட்டாய், புண்ணிய சாங்கோபாங்கத்தில் அதிகமாய் வர்த்திக்கக் கடமைப் பட்டிருக்கிறாய்'' என்றும்,

குருவானவர் சகல புண்ணியங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, மற்றவர்களுக்கு நல்லொழுக்க மாதிரிகை காண்பிக்கவேண்டியது'' என்றும்,

'அவருடைய நடத்தை மனிதருடைய சாதாரண மாதிரிகையாக இருக்கத்தகாது ஆனால், பரலோகத்தில் சம்மனசுகளுடையவும், பூமியில் உத்தம புண்ணியவான்களுடையவும் நடத்தை மாதிரியாக இருக்கவேண்டியது'' என்றும், கூறியிருப்பதை குருமார்கள் உணர்ந்திருந்தும், அவற்றிற்கு மாறாக சில குருமார்கள் இக்காலத்தில் நடந்து வருகிறார்களே! அத்தகைய குருமார்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாவார்களா? கிறிஸ்துவின் ஒழுக்கத்திற்கு விரோதமாக நடந்து வரும் போலிக் குருமார்களை நல்வழியில் நடக்க மதத்தலைவர்கள் புத்திகூற வேண்டாமா? அங்ஙனம் புத்திகூறியும் தம் மனம் போனவாறு ஒழுங்கீனமாய் நடப்பவர்களைத் தண்டிக்கவேண்டாமா? குருஸ்தானத்திலிருந்து நீக்கிச் சொந்த வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டாமா? மத ஒழுங்கிற்கு மாறாக நடந்து வரும் போலித் துறவிகளைப் பகுத்தறிவுடைய மக்கள் மதிப்பார்களா? என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்! தற்கால முறைக்கேற்ற சீர்திருத்தம் பெற முன் வாருங்கள்! மத அதிகாரிகளின் சீர்கேட்டைத் தொலைக்கச் சலியாது உழையுங்கள்! உழையுங்கள்!!

---


## குறைந்த சார்ஜ்! நிறைந்த லாபம்!!

சகுனவியாபாரம்.

நல்ல சகுனம் வேண்டியவர்களுக்கு ஒரு நல்ல சமயம். உங்களுக்கு என்ன மாதிரியான சகுனம் எந்தவிடத்தில் எப்போது வேண்டும்? தயவு செய்து தெரிவிப்பீர்களேயானால் அந்தந்த சகுனங்கள் அந்தந்தவிடத்தில் ஏற்படும் படி செய்யப்படும்.

உங்கள் எதிரிகளுக்கு கெட்ட சகுனங்கள் ஆகச் செய்யவேண்டுமானாலும் அதுவும் செய்யப்படும். சார்ஜ் விபரம் சகுனத்தையும் சமயத்தையும் பொறுத்தது.

விலாசம்:— சகுன வியாபாரம்,
பலவான்குடி.

---

## மேல் உலகத்திற்கு ஆகாய கப்பல் சர்வீஸ்.

காலம் சென்று மேல் உலகத்தில் இருக்கின்ற உங்கள் பெற்றோர்களுக்கு ஏதாவது சாமான் அனுப்பவேண்டுமானால் ஆகாயக் கப்பல் மூலம் அனுப்ப வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அனுப்பவேண்டிய சாமான்கள் விபரமும் இத்தனை பேருக்கு என்கின்ற விபரமும் தெரிவித்தால் சார்ஜ் விகிதம் தெரிவிக்கப்படும். அநேகமாய் இப்போது மனிதன் (பார்ப்பான்) மூலமாய் அனுப்புவதற்கு உங்களால் கொடுக்கப்படும் சார்ஜைவிட சற்று குறைவாகவே செய்யப்படும். பரீக்ஷார்த்தமாய் இரண்டொரு ஆர்டர்கள் கொடுத்துப்பாருங்கள். மாதிரிக்கு இலவசமாய் அனுப்பப்படும்.

விலாசம்:-மேல் உலக சர்வீஸ்,
கீழ் உலகம்.


---

## சித்திரபுத்திரன்.

### காசில்லாமல் நடத்தலாம்.

ஐயா! உங்கள் கலியாணத்திற்கு மந்திரம் வேண்டுமா? பார்ப்பான் வேண்டுமா? மந்திரம் பிரதானமானால் மந்திரத்தை ஒரு கிராமபோன் ரிகார்ட்டில் பிடித்து வைத்துக்கொண்டால் தாலி கட்டுகின்றபோது கிராமபோன் வைத்து தாலிகட்டிவிடலாம். பார்ப்பான் வேண்டுமானால் ஏதாவது ஒரு பார்ப்பானை போட்டோகிராப் பிடித்து அதை மணவறையில் வைத்து தாலிகட்டிவிடலாம். இரண்டும் வேண்டுமானால் இரண்டையும் வைத்து தாலிகட்டிவிடலாம். வாத்தியம் வேண்டுமானாலும் கிராமபோனிலேயே மதுரைபொன்னுச்சாமி வாத்தியம் வைக்கலாம். ஒன்றும் வேண்டாம், பெண்டாட்டியும் புருஷனும் ஆனால் போதும் என்றால் விரலில் மோதிரத்தை மாட்டி கழுத்தில் மாலைபோட்டு கையை பிடித்து அழைத்துக்கொண்டு போகலாம்.

# கடலூரில் சுயமரியாதைக்கூட்டம்.

## திரு. எஸ். இராமநாதன் தலைவர்.

## ஈ. வெ. இராமசாமி உபன்யாசம்.

கடலூர் பழைய டவுனில் வீரபத்திரசாமி கோவில்வீதி துரோபதையம்மன் கோவிலுக்கு பக்கத்தில் போடப்பட்டிருந்த பெரிய பந்தலின் கீழ் 13-9-31தேதி மாலை ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது, சிறிது மழைபெய்துகொண்டு இருந்ததோடு தரையெல்லாம் ஈரமாயிருந்தாலும் பந்தல் நிறைய சுமார் 1000 பேர்களுக்கு மேலாகவே ஜனங்கள் வந்து கூடியிருந்தார்கள். முதலில் திரு அ. பொன்னம்பலனார் அவர்கள் சுயமரியாதைப்பாட்டுபாடியபின் கூட்டத்திற்கு திருஎஸ். இராமநாதன் எம். ஏ பி.எல். அவர்கள் தலைமைவகிக்கவேண்டுமென்று திரு பி. பெருமாள் அவர்கள் பிரேரேபித்து மற்றொருவர் ஆமோதிக்க பெருத்தகரகோஷத்திற்கிடையில் திரு இராமநாதன் தலைமைவகித்து பேசிய முன்னுரை;—

திரு இராமசாமி இதற்கு முன் ஒத்துழையாமையின்போது பல தடவை இந்த ஊருக்குவந்து உங்கள் முன் பேசியிருக்கிறார். தற்போது அவரது அனுபோகத்தை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் சார்பாய் பிரசாரம் செய்து வருகின்றார். இந்த இயக்கத்தின் கொள்கையை ஒட்டித்தான் இன்று திரு பெருமாள் அவர்கள் வீட்டில் திருமணம் நடந்தது. இத்திருமணத்திற்கும் மற்ற திருமணங்களுக்கும் உள்ள வேற்றுமை முக்கியமாக சிக்கனமும் ஆடம்பரமின்மையும்சடங்கு இன்மையுமாகும். நம்மில் பெரும்பாலோர் தங்கள் பணக்காரர்களானாலும் சரி, ஏழைகளானாலும் சரி, கல்யாண காலங்களில் அவரவர்களுடைய நிலைமைக்கு அதிகமாகவே ஏராளமாய் கடன் வாங்கி வீண் ஆடம்பரச் செலவுகளில் பணத்தை வீணாக்கி பிறகு அந்தக்கடனை திருப்பிக்கொடுக்க் சக்தி இல்லாமல் வறுமையுற்று கஷ்டப்படவேண்டியதாகின்றது. தொழிலாளிகளும் தாழ்த்தப்பட்டவர்களும்கூட மற்ற வகுப்பார்களைப் போல் நடக்கப்பிரயத்தினப்பட்டு வீண்ஆடம்பரங்களில் ஈடுபடுகின்றார்கள். கிராமத்தில்வேலைசெய்யும் ஏழை மக்கள்—தாழ்த்தப்பட்டவர்கள் கடன் படுவதற்கு முக்கிய காரணம் அனேகமாய் கல்யாணச்செலவே யாகும். கல்யாண காலத்தில் பட்ட கடனுக்கு ஈடாக அவர்களது வாழ்நாளின் உழைப்பையெல்லாம் ஒப்படைத்தும் கடன அடையாமல் பின் சந்ததிகளுக்கும் கடன் வைத்துவிட்டு போகிறார்கள். இப்படி கடன் பட்டு அவதிப்படுவது மிருகவாழ்க்கையை விட அடிமைத்தனமானதல்லவா? சுயமரியாதைத் திருமணத்தின் முக்கிய அம்சமெல்லாம் கண்மூடித்தனமாய் பழய சாஸ்திரங்கள் என்பதின் பேராலும் பழக்க வழக்கங்கள்பேராலும் பின்பற்றிவரும் சடங்குகளை ஒழிப்பதென்பதேயாகும். சடங்குகளின் வெளிப்படையான தோற்றத்தை நீங்கள் யாவரும் அறிவீர்கள். எவ்வளவு பணக்காரனாய் இருந்தாலும், எவ்வளவுதான் படித்த அறிவாளியாய் இருந்தாலும், அறிவும், ஒழுக்கமும் இல்லாத ஒரு புரோகிதப் பார்ப்பனன் முன் மண்டியிட்டு வணங்கி சடங்குகள் செய்வதில் யாரும் வெட்கமடைவதில்லை. சடங்குகளில் ஏற்படும் பணச்செலவைக் காட்டிலும் அதனால் வரும் மான நஷ்டமே மனிதனின் சுயமரியாதையை மிகவும்பாதிப்பதாய் இருக்கின்றது.

நம்முடைய நாடானது உண்மையிலேயே விடுதலைபெற வேண்டுமானால் நமது மக்கள் முதலில் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். நமது மானத்தை பங்கப்படுத்தும் பழக்க வழக்கங்களை நாம்கைக்கொண்டுபின்பற்றிவரும்வரையில்எவ்வளவு தூரம்தேசியமென்பதற்காககாங்கிரசுகள் கூட்டினாலும்,மேடைப்பிரசாரங்கள் செய்தாலும், சத்தியாக்கிரகங்கள் என்பது செய்தாலும், கதர் கட்டினாலும், நமக்கு எவ்வித பயனும் ஏற்பட்டு விடாது.

மானத்தைக் காப்பாற்ற கற்றுக் கொண்டோமேயானால் உண்மை சுதந்திரம் கிடைக்க தானாகவே வழி ஏற்பட்டுவிடும். இதுதான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையான தத்துவம். இன்றைய தினம் திரு. பெருமாள் அவர்கள் வீட்டில் நடைபெற்ற திருமணத்தில் ஆடம்பரத்தையும், செலவையும் அதிகமாக குறைத்துக் கொள்ளாவிட்டாலும் சுயமரியாதையை பங்கப்படுத்தும் சடங்குகள் பெரிதும் ஒழிக்கப்பட்டதானதுபயன் படக்கூடியதேயாகும். சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையும், திட்டத்தையும் பற்றி இங்கு விஜயம் செய்திருக்கும் திரு. ஈ. வெ. இராமசாமியார பேசுவார்.

ஈ. வெ. இராமசாமி,

தலைவரவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

சுயமரியாதை இயக்கம் என்பதைப் பற்றி பேசவேண்டுமென்பதாக நண்பர் பெருமாள் அவர்களால் இக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கின்றது. நாங்கள் திரு. பெருமாளின் குமாரத்தியின் திருமணத்திற்கு என்று அழைக்கப்பட்டு இங்கு வந்தோம். இந்தச சந்தர்ப்பத்தில் இந்த ஊரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசவேண்டுமென்றஆசை அநேகநண்பர்களுக்குஇருந்ததாலானாலும் இந்த சந்தர்பபத்தை வீணாக்காமல் சிறிது பேசலாமென்றே கருதுகின்றேன்.

சுயமரியாதை இயக்கத்தின் தீவிரமான கொள்கைகளையெல்லாம் இப்போது உங்களுக்கு எடுத்துச்சொல்வது என்பது சற்று கஷ்டமானதாயிருக்குமென்றே கருதுகின்றேன்.

ஏனென்றால் இதற்கு முன் இங்கு இந்தப்பிரசாரம் நடத்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அதன் தீவிரக்கொள்கைகளை நீங்கள் முதல் முதலாக கேட்கும்போது அது உங்களைத் திடுக்கிடச்செய்யும். அவற்றின் உண்மையை அறிவதுஎன்பதுஇன்றே சுலபத்தில் புலப்படக்கூடியதாகாது. ஆதலால் உங்களுக்கு சிறிது நிதானமான முறையில் தான் பேசவேண்டியவனாயிருக்கிறேன். அதாவது இந்த நான்கு, ஐந்து வருஷங்களுக்கு முன் கிராம ஜனங்களின் முன் நான் எந்த நிலையில் பேசினேனோ அது போல் முதல் பாடத்திலிருந்து பேசவேண்டியவனாகயிருக்கிறேன். ஏன் இந்தப்படி சொல்லுகிறேன் என்றால் திரு. பெருமாள் வீட்டுக் கல்யாணத்திற்கு பார்ப்பான் வரவழைக்கப்படாததாலேயே இவ்வூரார் அவர்மீது மிகுந்த கோபமாய் இருப்பதாகவும், நான் கோவில் குளங்களைப்பற்றி குற்றம் சொல்லுகின்றவன் என்பதாகவும் ஜாதிகளை யெல்லாம் ஒன்றாக்க வந்திருக்கின்றேன்என்பதாகவும்குற்றம் சொல்லி இந்தக் கூட்டத்திற்குயாரும் போகக்கூடாதென்று சிலர்பிரசாரம் செய்தார்களாம். இப்படிப்பட்டமுயற்சிக்காரர்கள்முன்னால் பார்ப்பனர்களின் கூட்டத்தையும் கோவில்குளங்களினுடைய தொல்லையையும் எடுத்துச் சொன்னால் எப்படி அது உங்களால் நடுநிலையில் கிரகிக்கப்படும் என்பதை நீங்களே நினைத்துப்பாருங்கள். புதிய சங்கதி எதுவானாலும் காதை மூடிக்கொள்ளவே நமது மக்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள். சிறு குழந்தைப்பருவத்தில் நமக்குப் புகுத்தப்பட்ட விஷயங்களையேஆராய்ச்சியின்மூலம் அறிவின் மூலம்கண்டமுடிவென்று கருதி அதற்குத் தலைகொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். நமது உள்ளத்தில் எது எது பதிக்கப்பட்டு விட்டதோ அதெல்லாம் தேர்ந்த ஞானிகளாலும் தெய்வத்தன்மை பொருந்திய அவதார புருஷர்களாலும் சொல்லப்பட்ட உண்மைகள் என்ற உறுதியுடனே புகுத்தப்பட்டிருக்கின்றோம். ஆகையால் புதியநோக்கங்களையும் தோற்றங்களையும்காண சகிக்காதவர்களாக இருக்கின்றோம். உலகப் போக்கை நாம் தெரிய நேர்ந்தாலும், பார்க்க நேர்ந்தாலும் அதன் அனுபவத்தின் மேன்மை அடையவும் பாராட்டிப்பேசவும், தயாராய் இருக்கின்றோமே அல்லாமல் அதை நமது வாழ்க்கையுடன் நமது நாட்டு எண்ணங்களுடன் பொருத்திப்பார்ப்பதற்கு சிறிதும் எண்ணுவதே கிடையாது. நமது மக்களின் இந்தமாதிரியான நிலையைப் பார்த்துப்பார்த்து மனம் கஷ்டப்பட்டதால்தான் நாங்கள் இந்த துறையில் இறங்கி தொண்டு செய்யவேண்டியவர்களானோம்.

சுயமரியாதை,

சுயமரியாதை இயக்கம் என்பதின் முக்கிய கொள்கைகள் என்பவை ஒன்றும் புதிதானதோ அல்லது ஏதாவது அதிசயமானதோ என்று நீங்கள் மலைக்கவேண்டியதில்லை. அது மனிதன் அறிவுபெறவும் சமத்துவம் அடையவும்சுதந்திரம் பெறவும்பாடுபடுகின்றது. அறிவுக்கும் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் எதிராயும் தடையாயும் இருக்கும் எதையும் அடியோடு ஒழிக்க தைரியம் கொள்ளுகின்றது. இந்த நிலையில் மக்களின் மூடத்தனத்தினாலும் தாழ்வினாலும், அடிமைத்தனத்தினாலும் பயனடைந்து வாழ்கின்றவர்களுக்கு சுயமரியாதை இயக்கம் ஒரு கோடாலியாய் காணப்படுவதனால் அதிசயமொன்றுமில்லை. எங்களைக் கண்டால் துவேஷமும், வெறுப்பும் ஏற்படத்தான் செய்யும், எங்களையும் தொல்லைப்படுத்தவும் அவரவர்கள் மனம் தூண்டத்தான் செய்யும். இவ்வியக்கத்தை கையாளுகிறவர்களுக்கு அவற்றையெல்லாம் சமாளிக்க சக்தி இருந்தால்தான் இவ்வியக்கத்தால் ஏதாவது பலன் ஏற்படமுடியும். எதிர்ப்புக்கும் தொல்லைக்கும் பயந்தால் ஒரு காரியமும் நடவாமல் போவதோடு பிற்போக்கும் ஏற்பட்டுவிடும்.

சாதாரணமாக நாங்கள் இந்த ஊர் பொது ஜனங்களின் பாராட்டு தலையும் வணக்கத்தையும் மரியாதையும் பெற்று கொஞ்சம் பணமும் சம்பாதித்துக் கொண்டுபோகவேண்டுமானால்எங்களால்சுலபத்தில்முடிந்துவிடும். நமது ஜனங்களின் முட்டாள்தனம் எங்கு, எங்கு இருக்கின்றது என்பது எங்களுக்குத் நன்றாய்த்தெரியும்.

உதாரணமாக நாங்கள் தேசபக்தர்களைப் போல கதர் வேஷம் போட்டு கையில் கொடியைப் பிடித்துக்கொண்டு பாரதமாதாவுக்கு ஜே! சுயராஜியத்திற்கு ஜே! மகாத்மாவுக்கு ஜே! என்று கூறிக்கொண்டோ, அல்லது பெரிய கடவுள் பக்தர்கள் போல் வேஷம்போட்டுக்கொண்டு மஞ்சள் உடையோ, காவி உடையோ கட்டிக் கொண்டு பட்டைநாமம் போட்டுக் கொண்டு குடை, சேகண்டி இவைகளுடன் நாராயண மூர்த்திகோவிந்தா கோவிந்தா என்றோ சொல்லிக்கொண்டு பஜனைகோஷ்டியுடனோ கூட்ட

(தொடர்ச்சி 13-ம்பக்கம்பார்க்க)

# ஈரோடு நவஜவான் மகாநாடு.

ஈரோட்டில் இம்மாதம் 11, 12, 13 தேதிகளில் நவஜவான் மகாநாடு நடைபெற்றது. குறிப்பிட்டபடி சுபாஸ் சந்திரபோஸ் வரவில்லை ஆதலால் தலைமைவகிக்க யதீந்தர்தாஸ்சகோதரரான கிரந்தாஸ்என்கின்றவாலிபரும், கொடியேற்றுவிழாநடத்ததிருஜே.எஸ். கண்ணப்பரும், திறப்புவிழாவாற்ற திருமதி துர்க்காபாயும், பெண்கள் மகாநாட்டு வரவேற்பு தலைமை வகிக்க திருமதி பத்மாவதி ஆஷரும், அதற்குதலைமைவகிக்க உதகல்திருமதிசாரளாதேவிஎன்கின்ற மாதும் 11ந் தேதி காலை ஈரோடு வந்து சேர்ந்தார்கள். அன்று மாலை இவர்கள் ஊர்வலமாக பந்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். முதல் நாள் காலை திரு. கண்ணப்பரால் கொடியேற்றலும், பகல் வரவேற்புத்தலைவர் திரு. கேசவலால் காளிதாஸ் அவர்கள் உபன்யாசமும், திறப்புவிழா வாற்றிய திருமதி துர்க்காபாய் உபன்யாசமும் நடந்தது.

அடுத்த நாள் தலைவர் உபந்யாசமும், பெண்கள் மகாநாட்டு வரவேற்பு தலைவர், தலைவர் ஆகியவர்கள் உபந்யாசமும் நடந்தது.

மூன்றாவது நாள் இரு மகாநாடுகளிலும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன அவையாவன:-

நிறைவேறிய தீர்மானங்கள்.

1. பகவத்சிங் கொலை வழக்கில் அவர் எதிர் வழக்காட மறுத்ததை முன்னிட்டும், அவருடைய மரண தண்டனையை ஜன்ம தண்டனையாக மாற்றும்படி தேசமக்கள் கேட்டிருந்தும், சர்க்கார் அதை கவனிக்காமல் பகவத்சிங்கை தூக்கிலிட்டதை இம்மகாநாடு கண்டிப்பதுடன், பகவத்சிங்கையும், அவர் கூட்டாளிகளையும் இம்மகாநாடு வாழ்த்துகிறது.

2. இந்தியா, பிரிட்டிஷ் சம்பந்தத்தை விட்டு பூரண சுயராஜ்யம் பெறாத எந்த அரசியல் அமைப்பு இந்தியாவிற்கு வந்தாலும், அதை நவஜவான்கள் ஒப்புக்கொள்ளமுடியாதென இச்சபை தீர்மானிப்பதோடு லட்சியத்தை யடையும் வரையில் போராடியே தீருவதென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

3. திரு. எம். என். ராயை ஜாமீனில் விடுவிக்க மறுத்துவிட்டதைக் குறித்து இம்மகாநாடு கண்டிப்பதோடு, அவருக்காக எங்கும் டிபன்ஸ் கமிட்டிகளை நியமித்து வழக்காட உதவி செய்யும்படியும் இம்மகாநாடு ஜனங்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

4. சிறைபட்டிருக்கும் ராஜீயக் கைதிகள் விஷயத்தில் இம்மகாநாடு அனுதாபங் கொள்வதோடு, அவர்கள் கஷ்டம் தீருவதற்காக பாடுபடும்படியும் நவஜவான்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. "இந்தியா" பத்திரிகை இம்மகாநாட்டுத் தலைவர் திருகிரான் தாஸ் பிரசங்கத்தைப் பிரசுரிக்க மறுத்து விட்டதைக் குறித்து அப்பத்திரிகையை இம்மகாநாடு கண்டிப்பதுடன் பகிஷ்கரிக்கிறது.

6. வங்காள வெள்ளக்கஷ்ட நிவாரண நிதிக்கு தாராளமாகப் பணவுதவி செய்ய வேண்டுமெனவும், புதிதாகக்கொண்டு வரும் பத்திரிகை பசோதாவைக் கண்டிப்பதாகவும் தீர்மானிக்கிறது.

7. கதர் உடையையும், சுதேசிசாமான்களையும், ஆதரிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

மகாநாட்டிற்குப் பல ஊர்களிலிருந்து வாலிபர்கள் பலர் வந்திருந்தார்கள் என்றாலும் திரு. சுபாஸ்சந்திரபோஸ் அவர்கள் வரவில்லை என்கின்ற தகவல் எட்டியவுடன் வந்திருந்தவர்களில் அனேகர் ஏமாற்றமடைந்து உடனே திரும்பிப்போய்விட்டார்கள்.

மகாநாட்டினால் ஏற்பட்ட பலனென்ன என்பது ஒரு புறமிருந்தாலும் அதில் பங்கெடுத்துக் கொண்ட பார்ப்பன முக்கியஸ்தர்களுக்கு சுயமரியாதை கூட்டத்தாருக்கு விரோதமாய் இந்த ஊரிலேயே ஒரு மகாநாடு நடத்தப்பட்ட தல்லவா என்கின்ற திருப்தியே போதுமானதாயிருந்தது.

பந்தலில் சுயமரியாதை இயக்கத்தையும் அதில் சம்பந்தப்பட்டவர்களை தாக்கிப்பேசும் போதெல்லாம் ஈரோடு முனிசிபல் சேர்மனாயிருந்த திரு. சீனிவாச முதலியார் கைதட்டி ஹியர், ஹியர் என்று சத்தக்குரலில் மகிழ்ச்சியடைந்துகொண்டிருந்தார் என்றாலும் மற்றபடி அம்மகாநாட்டு நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கும் போதே பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி ஏற்பட்டு பார்ப்பனர் யார் பேச எழுந்தாலும் உட்கார்-உட்கார் என்ற சப்தம் கிளம்பிக்கொண்டே இருந்தது. இதன் பயனாய் நவஜவான் கமிட்டியில் இருந்த பார்ப்பன பிரமுகர்கள் சிலர் ராஜீனாமா செய்துவிட்டதாகவும் தெரியவருகின்றது. காரணம் கேட்டதற்கு எங்களை டிஸ்மிஸ் செய்யுமுன்பு நாங்களே விலகிக்கொள்ளுகின்றோம் என்றார்களாம். வகுப்பு உணர்ச்சியை ஒழிக்க ஏற்பட்ட சங்கங்கள், அதிலும் 'நவஜவான் பாரதசபை' போன்றது களில்கூட பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி புகுந்து பார்ப்பனர் ராஜீனாமா கொடுக்க நேரிட்டதென்றால் வகுப்பு உணர்ச்சியை அவ்வளவு சுலபமாக அலட்சியம் செய்து விட முடியாது என்பது இதிலிருந்து விளங்குகிறது. சந்தர்ப்பத்தை உத்தேசித்து பார்ப்பனர்களை ஆதரிக்கவோ அவர்களுடன் சேரவோ சில பார்ப்பனரல்லாதார்களுக்கு அவசியம் ஏற்பட்டாலும் இயற்கை உணர்ச்சியானது எப்படியும் பிரித்து வைத்தேதான் தீரும் என்பதும் இதிலிருந்து விளங்கி விட்டது.

(பெண்கள் மகாநாட்டுத்தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.) நிருபர்.

---

## கொடுமை! கொடுமை!! குழந்தைப்பாலில்லாக் கொடுமை!!!

திருப்பூரையடுத்த வாவிபாளையம் என்னும் ஊரில் 10-9-31ந் தேதி வேளாளர்களுக்கும், செங்குந்தர்களுக்கும், சக்கிலியர் சாமி எடுத்துப்போதல் என்னும் மூடப்பழக்கத்தால் கலகம் உண்டாகி போலீஸாருக்குரிப்போர்ட்டுசெய்து அவர்கள் இருதரப்பினரையும் விசாரித்து ஒருவாறு அனுமதி உண்டாக்கிவிட்டுச் சென்றனர். வேளாளர்கள், இந்த அற்ப விஷயத்தை முன்னிட்டு செங்குந்தர்களுக்குப்பால், தயிர், நெய் முதலியவை விலைக்கு விற்கக்கூடாதென்று மூட்டுக்கட்டுப்பாடு செய்திருப்பதால் "பச்சைக் குழந்தைக்குப் பாலுமில்லை, அதன் பட்டினியழுகைக் கேட்கவில்லை" என்று ஓர் சுயமரியாதை அன்பர் பாடியபடி தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பாலில்லாமல் அலைகின்றனர். மற்ற வகுப்பினர் ஒருவரும், செங்குந்தர்களுக்கு யாதொரு ஊழியமும் செய்யக் கூடாதென உத்திரவிட்டுள்ளனர். அதனால் கூலிக்காரர்களுக்கும் நஷ்டம், நெசவுகாரர்களுக்கும் கஷ்டம். ஆ! என்ன ஒற்றுமை! இந்த லக்ஷணத்துக்கு சுயராஜியமும் ஒரு கேடா! வடநாட்டில் இந்து முஸ்லீம் சண்டை, தென்னாட்டில் பிராமணர்-பிராமணரல்லாதார் வேற்றுமை, கோவை ஜில்லாவிலுள்ள கிராமங்களில், வேளாளர்-அல்லாதார் கலகம், இதற்கிடையில் காந்தி, ராமராஜியம் கொண்டுவர இங்கிலாந்துக்குச் சென்று விட்டார். இதுதான் ஒற்றுமையின் லக்ஷணமா? கோவை ஜில்லாவிலுள்ள பிரபல சமூகத்தார் இவைகளை எப்பொழுது கவனிப்பார்களோ? தெரியவில்லை என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## இராசிபுரத்தில் ஓர் அனுதாபக்கூட்டம்.

இவ்வூரில் சுயமரியாதை சங்கத்தின் சார்பாக 11-9-31தேதி மாலை 5-மணிக்கு என். கே. அங்கமுத்து அவர்களின் தலைமையின் கீழ் சுயமரியாதைஇயக்கத்தை இவ்வூரில் தீவிரமாகப் பரப்பினவரும், பிரபலஸ்தரும், ஷை சங்கத்தின் காரியதரிசியுமான திருவாளர் காவேரி அவர்களின் தமையனார் ஒருவாரம் கோய்வாய்பட்டு காலமானதைப்பற்றி அவருக்கும் அவர்குடும்பத்தாருக்கும்ஷை சங்கத்தின் மூலமாய் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டனர் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## — மதுரை முனிசிபல் எம்ப்ளாயர்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி தேர்தல்

ஷை சொஸைட்டி டைரக்டர்கள் தேர்தல் முனிசிபல் சம்பந்த மூர்த்தி பாடசாலையில் 6ம் தேதி ஞாயிற்றுக்கிழமை 3 மணிக்கு உயர் திருவாளர் எம். ஐயாசாமி தலைமையின் கீழ் நடைபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

# கணவன் தேவை.

பெண்ணின் யோக்கியதை;— 16 வயதுள்ள அழகியபெண், தமிழ் நன்றாய் எழுதப்படிக்கத் தெரியும், சங்கீதத்தில் இராகம் பல்லவி பாடக்கூடிய ஞானமுண்டு, நல்ல குணமும் உயர்ந்த நடையும் அளவுக்கு மீறிய ஒழுக்கமும் உடையது- விவாகமில்லாச்கன்னிப்பெண். புருஷனுக்கு இருக்கவேண்டிய யோக்கியதை:- வாலிபராகவும், கல்வி அறிவுஉடையவராகவும், தகுந்த செல்வமுடையவராகவும், அழகியதோற்றமும், வியாதிஇல்லாத சரீரமுடையவராகவும் இருக்க வேண்டும். பெண்ணின் தாய் தந்தையர்களுக்கு பெண்ணின் கல்விச்செலவும், சங்கீதம்பயிற்றுவதற்குப்பிடித்த செலவும் கொடுக்கவேண்டியிருக்கும்.

சுயமரியாதை
C/o "குடி அரசு" ஈரோடு.

## கடலூரில்

### திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், அ. பொன்னம்பலம்.

13-9-31 தேதி கடலூர் திருவாளர் பா. பெருமாள் அவர்கள் குமாரத்தி திருமணத்தை முன்னிட்டும், சுயமரியாதைப்பிரசாரத்தை முன்னிட்டும் ஈரோட்டிலிருந்து திருவாளர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் காலையில் கடலூர் வந்து சேர்ந்தார்கள். ஸ்டேஷனிலேயே பல கனவான்கள் வரவேற்று தண்மார்க்குசைலி வியாபாரியான திரு. இராமலிங்கம் அவர்கள் வீட்டுக்கு அழைத்துச்சென்று சிற்றுண்டி முடிந்ததும் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக திரு. பெருமாள் அவர்கள் வீட்டுக்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். தெரு முழுவதும் தோரணங்களும், வளைவுகளும் கட்டப்பட்டிருந்ததுடன் அங்கு திருமண வீட்டிலும் சுமார் 50, 60 அட்டைகள் வரை சுயமரியாதை வாக்கியங்கள் எழுதி கட்டித்தொங்க விட்டிருந்தன. திருமணத்திற்கு அவ்வூர் பிரமுகர்கள் உள்பட சுமார் 400, 500 பேர்களுக்கு மேலாகவே விஜயம் செய்திருந்தார்கள். பந்தலில் போடப்பட்டிருந்த ஆசனத்தில் திரு. பெருமாளின் குமாரத்தி திருமதி இரங்கம்மாளும், அவரது மைத்துனர் திரு. ராஜு நாயுடு குமாரர் திரு. விஜயமும், திரு. பெருமாளின் சகோதரர் குமாரத்தி திருமதி பேபி அம்மாளும், திரு. முனுசாமி நாயுடு குமாரர் வெங்கடசாமியும் ஆக இரண்டு ஜதை மணமக்கள் சாதாரண கதர் உடையுடன் வந்து உட்கார்ந்தார்கள். பிறகு திரு. பெருமாள் அவர்கள் எழுந்து சபையோரை வரவேற்று திருமண நிகழ்ச்சிக்கு தலைமை வகிக்கும்படியாக கடலூர் முனிசிபல் கவுன்சிலர் திரு. வே. தண்டபாணி செட்டியார் அவர்களைத் தலைமை வகிக்கும் படிகேட்டுக்கொள்ள அவர் தலைமை வகித்து திருமணம் என்பது பற்றி திரு. ஈ. வெ. இராமசாமியை சில வார்த்தைகள் பேசும் படி கேட்டுக்கொண்டார்.

திரு ஈ. வெ. இராமசாமி.

சகோதரர்களே! சகோதரிகளே!! மணமக்களே!!! புதியமுறையான திருமணம் இப்பகுதிக்கு இதுபுதியதுபூசைமேடுகோவிந்தசாமிதிருமணம் முன்நடைபெற்றது. அதன்பின் இன்றுஇங்குவந்திருக்கிறோம். தலைவர் முனிசிபல் கவுன்சிலர் புதியமுறையில் திருமணம் நடைபெறுமென்று கூறியபடி சுயமரியாதை திருமணம்என்றால்என்ன? நான் இங்கு வந்ததும் உறவினர், தோழர் முதலியவர்களின் அதிருப்தி ஏற்பட்டதாகக் கேள்விப்பட்டேன். அதன் காரணம் பகுத்தறிவில்லாமையே. மதம், புராணம்,பழக்கம், வழக்கம், மோக்ஷம், நரகம், கற்பிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதிருப்தியும், பயமும், நடுக்கமும்தான் தோன்றும். நன்கு யோசித்து திரு பெருமாள் அவர்கள்போல் துணிவுடன் செயதால்தான் வருங்கால உலகிற்கு பயன் தரும். இதுபோன்ற திருமணங்கள் பலவிடங்களில் நடந்துகொண்டு வருகிறது. சில விடங்களில் விளம்பரத்திற்காக சிறிது ஆர்ப்பாட்டத்துடன்சுயமரியாதை இயக்கதுதிருமணம்நடைபெறுகின்றது நான்கூறுவது சிலருக்கு வியப்பாகத்தோன்றினும் தோன்றலாம். உங்கள் அறிவுப்படி கொள்ளவும் தள்ளவும் உரிமை உங்கட்கு உண்டு. பழமை, புதுமை என்றபாகுபாடின்றி பகுத்தறிந்து முடிவுப்படி செய்யுங்கள். திருமணம் என்பது ஒருபெண்ணும்,ஒருஆணும்வாழ்க்கைக்கு அடிகோலும் ஆரம்ப நாளே திருமணம் என்பதாகும். பலசடங்குகளுக்கும் விழாக்களுக்கும் தத்துவார்த்தம் வேறாகயிருக்கலாம். ஆண் பெண் கூடி வாழ இச்சைக்காக, சந்தோஷத்திற்காக ஒன்றுகூடும் ஜதை சேர்தலே திருமணமாகும். திருமணம் ஆணும் பெண்ணும் தங்களுக்குள் நேரில்சம்மதம் பெற்று இருவரும் இன்பத்தோடு ஒன்றுபடுதலே எல்லாநாட்டாராலும் கையாளப்படுவதாகும். நம்நாட்டிலோ தாய் தகப்பன்மார்களின் வியாபாரமாக 'ஜதை' சேர்க்கப்பட்டு முடிவு கூறப்படுகிறது. திருமணம் என்பது ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழ்வது 'தெய்வீக'மென்பதாகவும், மறு உலகில்இடம் பெறுதற்கான காரியங்கட்கு இங்குவாழ்வதாகவும்,காலயினை,பொருத்தம்,முடிச்சு நமது கடமை, தேர்தல், முயற்சி என்றகாரணத்தையுமறக்கின்றோம்.ஜாதிக்கொவ்வொருவிதமாக பழக்கவழக்கமென்றகாரணத்தால் சடங்கு, பணக்கேடு, நேரக்கேடு, மக்கள் ஊக்கக்கேடு ஆகிய கஷ்டத்தோடுதான் திருமணம் நடத்துகிறோம். மாற்றமடைவதில் நாம் பெரியார்கட்குபயந்துபழைமையையே குரங்குப்பிடியாகப் பிடித்து கொள்கிறோம். ஆண் பெண்ணுரிமையைப்பற்றியோவெனில் ஆண் இச்சைக்கும்,வேலைக்கும், ஏவுதலுக்கும் என்றே பெண்கள் சேர்க்கப்படுகிறது. சொத்துரிமை சமஉரிமை பெண்கட்கு வழங்கப்படுவதில்லை. புதியமுறை என்பது ஒவ்வொருவரும் சிந்திக்கவும், ஆராயவும் வேண்டுவதுதான் இத்திருமணம் நிகழ்ச்சியாகும். இதுபற்றி மாலை பொதுக்கூட்டத்தில் விரிவாகப் பேசுவோம். இங்கு நடைபெறும் நடைமுறை நிகழ்ச்சிகள் பெரிதும் பெண்கட்கு பயமாகத் தோன்றலாம். காரணம் அடுப்பூதவும், வேலை செய்யவும் அடிமைஎன்று பழக்கியும் வந்ததோடு 'கல்வி' அறிவு போதாக்குறைதான். செலவுசுருக்கம், நாள் குறை, வேலை குறை, பெண்கள் உரிமை, மணமக்கள் சம்மதம் கடன்படல், பின்கடன் தீர்க்கப் பாடுபடல் ஆனால் இன்று நடக்கும் திருமணத்திற்கு ஏன் இவ்வளவு பேர் என்று கேட்கலாம். அது ஒரு சாட்சிக்காகத்தான். ஒருகடைவைப்பவன் மற்றகடைக்காரர்களை அழைப்பதும், புதுபேரேடு போடுவதும், அவர்களது ஒப்பந்தத்தைஎடுத்துரு ஜூப்பிக்க பேசுவதும்சாட்சிக்காகத்தான். ஆகவே சாட்சிமுறை அவசியம். நமக்கு ஆதாரம்சாட்சிதான். முகம்மதியர் ஒருபுத்தகத்தில் கையொப்பம், கிறிஸ்துவர்கள் கோவில் முன்பாக ஒப்பம், நாம் அதற்காகவே இங்கு சாட்சியாகவே கூடியிருக்கிறோம். சாட்சியில்லாததால் சமீபத்தில் ஒரு'கல்யாணம்' தள்ளுபடியாயிற்று. ஆதலால்தான் நாம் கூடி சாட்சியளிக்கின்றோம். பெண் அடிமைப் படுத்துதல் ஒப்பந்தத்தில் சமஉரிமையுடன் திட்டம் காணல் வேண்டும். வீணாகபழைய சென்மப்பலன், தலைவிதிஎன்று கட்டாயப்படுத்தி வருவதால் பெண்கள் இனிகட்டுப் பட்டுவாழாது. நம்மில் ஒருவர் வியாபாரியிடம்முதல்கஷ்டப்பட்டுப்பாடுபட்டுபின் சுதந்திரம் பெற்று தனித்து வியாபாரியாகுவதைபார்க்கிறோம் புருஷன் தாசி வீட்டிற்கு போதல், கள் குடித்து அடித்தல் போன்ற காரணத்தால் கஷ்டப்படும்பெண்கட்கு விடுதலை வேண்டுவதாகும். நாங்கள் ஏன் இங்கு வந்தோம்? புரோகிதம் செய்யவா இல்லை. ஆரம்பத்தில்பலருக்கு விளங்காததால் நாங்கள் வந்து இம்முறையை விளக்கவேண்டுமென்று திரு பெருமாள் விரும்பியதற்காக வந்தோம். இன்னும் 10-வருஷங்களில் புருஷன் பெண்சாதி தேர்ந்தெடுப்பதுகூட எவருக்கும் தெரியப்போவதில்லை. பிறஎல்லா நாட்டுநாகரீகங்களைப்பற்றி மட்டும் நாம் கூற தேவையில்லை. அவரவர்கள் அறிவுப்படியே அறிவுவளர்ச்சிப்படியே இத்திருமணம்நடைபெறும். மற்றும் மாலை விரிவாகப்பேசுவோம்.

### மணமக்கள் சம்பந்த ஒப்பந்தம்.

உறுதிமொழி

உலகெல்லாம் வாழ்க.

நான் தங்களுடன் சகல சுதந்திரத்தோடு நீண்ட ஆயுளுடன் புத்திர பௌத்திரர்களுடன் இம்வாழ்க்கை நடாத்தும் அறிகுறியாக இச்சபையோர் முன்பாக இம் மண மாலையைச் சூடுகின்றேன்.

என்பதாக இரண்டு பெண்களும் இரண்டு மாப்பிள்ளைகளும் சொல்லி மாலை யிட்டு தாலிகட்டினார்கள். பிறகு வெத்திலைபாக்கு வழங்காமல் ஆரஞ்சுப்பழம் வழங்கினார்கள்.

### திருமணத்திற்கு வந்திருந்த முக்கியமானவர்கள்.

வக்கீல் ஆனந்தரங்கம் பிள்ளை, துரை ரங்கம் பிள்ளை, உ. கோ தண்டபாணி செட்டியார் முனிசிபல் கவுன்சிலர், எாசி. வைத்திலிங்க செட்டியார், புதுவை. சுந்திரராஜலு செட்டியார், புதுவை. கோவிந்தசாமி செட்டியார், புதுவை. தாமோதிர நாயுடு வாத்தியாயர், நெல்லிக்குப்பம். உ. து. ராஜரத்தின செட்டியார், புதுப் பேட்டை சிதம்பர செட்டியார், பூஜைமேடு ஆர். துரைசாமி நாயுடு, ஆலக்கிராமம் ஏ. வி. தாதாசாமி, ஏ. வி. இராமலிங்க செட்டியார், க. சு. முனுசாமி செட்டியார், கோசளம இராமலிங்க செட்டியார், கோசளம் தியாகராஜலு செட்டியார், கொ. மு. சுப்புராய செட்டியார், முகம்மது மொய்தீன் மரைக்காயர், வடிவேல் பிள்ளை, மன்னு சின்னசாமி செட்டியார், இரத்தின உடையார், மளிகை அய்யாசாமி நயினர், அம்மையப்பன், சீனிவாச செட்டியார், புதுவை அ. வைத்தியநாத செட்டியார், கொத்தமங்கலம்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க.)

குடி அரசு

ஈரோடு 1931 செப்டம்பர் 20உ

# சுயமரியாதை இயக்கமும் இராமாநந்த சட்டர்ஜீயும்.

சமீபத்தில் விருதுநகரில் நடந்த 3-வது சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களில் மதங்களைப்பற்றிச்செய்யப்பட்ட தீர்மானத்தைப்பற்றி அதாவது, "மதத்தின் பேரால் அனுஷ்டிக்கப்படும் பழக்கங்களும் பயிற்சிகளும் சமூக சீர்திருத்தத்திற்கு தடையாயிருந்து வருவதால், மதங்கள் ஒழியவேண்டும் என்றும் மதங்கள் ஒழியாமல் சகோதரத்துவம் ஏற்படாதென்றும் மதச்சண்டை ஒழியவேண்டுமானால் மக்களுக்குள் மதத்தைப்பற்றிய உணர்ச்சி ஏற்படுவதை நிராகரிக்க வேண்டுமென்றும், செய்யப்பட்டதீர்மானத்தின் மீது வங்காளத்தில் வெகு காலமாய் நடைபெற்றுவரும் 'மாடர்ன்ரிவ்யூ"என்னும்பிரபலபத்திரிகையின் ஆசிரியராகிய உயர்திரு இராமானந்த சட்டர்ஜீ அவர்கள் மேற்படி பத்திரிகையில் சில ஆக்ஷேபணைக்குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

அதன் சாராம்சமாவது:

"மக்களுக்குள் எப்பிரிவினராயினும் சுயமரியாதையைப் பெற விரும்புவரேல் அதற்கு ஒவ்வொருவரும்ஆதரவளிக்கவேண்டியது அவசியமாகும். ஆனால் சுயமரியாதைக்காரர்களின் தீர்மான விஷயத்தில் நாம் பின்வருமாறு நினைப்பது தவராயிருந்தால் திருத்தவேண்டுமாய் கோருகிறோம்.

தென்னிந்திய சுயமரியாதை இயக்கத்தார் சொல்லும் எல்லாக் கொள்கைகளிலும் நியாயமிருக்கின்றதென்று நம்மால் ஒப்புக்கொள்ள முடியவில்லை.

விருதுநகர் மகாநாட்டின் தலைவர் திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பேசியதாக நமக்கு எட்டிய செய்தியில்,

இந்தியாவில் மதம் என்று சொல்லப்படும் பலம் பொருந்திய ஸ்தாபனம் மக்கள் முற்போக்கிற்கு தடையாகயிருந்து வருகின்றது" என்று பேசியிருக்கின்றார்.

இதை அனுசரித்து மதங்கள் மறையவேண்டும் என்பதாக ஒரு தீர்மானமும் அம்மகாநாட்டில் செய்யப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து சுயமரியாதைக்காரர்களின் நோக்கம் தெளிவாக விளங்குகின்றது.

திரு. ஷண்முகம் இந்தியாவின் நிலையை பற்றி பேசியதால் இந்தியாவின் பண்டை கால மத நிலையைப்பற்றி சற்று ஆராய்வோம்' என்று ஆரம்பித்து,

முற்காலத்தில்

'வேதங்களை ஏற்படுத்திய ரிஷிகளும் அது யாருக்கு ஏற்படுத்தப்பட்டதோ அவர்களும் பிறவியில் பிராமணர்களாயில்லாமலிருந்தும் அனைவராலும் பிராமணர்கள் என்றே கருதப்பட்டிருக்கின்றார்கள்.

பிரம்மத்தை வழிபடுபவர்கள் என்ற காரணத்தாலே பலர் பிராமணரானார்கள். கீதாச்சாரியாரும் கீதைகேட்டவரும்பிராமணராகக்கருதப்பட்டார் ஆதலால்மக்கள்சீர்திருத்தமடைய அக்காலத்தில்மதம்தடுக்கவில்லை.

மத்தியகாலத்தில்

புத்தரால் "புத்த மதம் ஜாதி முறையைத் தகர்த்தது. நானக்கரும் குரு கோவிந்தரும் தாழ்ந்தோர்களை உயர்த்தி அவர்களைச் சகோதரர்களாக்கினார்கள். வங்காளத்தில் சைதன்னியர் முஸ்லீம்கள் உள்பட பலரை ஜாதிமத பேதமின்றி சிஷ்யராக்கிக்கொண்டார். கபீர்தாஸ் பல உயர்ந்த உபதேசங்களைச் செய்திருக்கிறார்.

தற்காலத்திலும்.

ராஜாராம் மோகனராய் பிரம்ம சமாஜத்தை உண்டாக்கினார். கேசப் சந்திரசேனர் அதை விர்த்தி செய்தார். ஜாதியை விடவேண்டுமென்றும் சொன்னார். தயானந்த சரஸ்வதி ஆரிய சமாஜம் உண்டாக்கினார். ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர் விதவாவிவாகத்தை புகுத்தினர். வீரேசலிங்கம் பந்துலு சமூக சீர்திருத்தம் செய்தார். விவேகானந்தர் அறிய உபதேசங்களைச் செய்தார். மகாத்மா காந்தி பிராமணர் பிராமணரல்லாதாருக்கும் ஒரே மாதிரி போதிக்கிறார். ரவீந்தர நாதர் ஒரு பெரியார். இவர்கள் எல்லோரும் செய்த காரியங்கள் மதவுணர்ச்சியை நீக்கி செய்யப்பட்டவைகளல்ல. இப்படியிருக்க இனி மத நம்பிக்கையில்லாதவர்கள் செய்தகாரியம் என்ன என்பதையோசனைசெய்து பார்க்கட்டும். சுயமரியாதைக்காரர்ருஷியாவைப் பின்பற்றுவதாகத்தெரிகின்றது அங்கும் மதம் அடியோடு அற்றுப்போகவில்லை"

என்பவை கருத்தாகஎழுதியிருக்கிறார்.

இவற்றிற்கு நாம் சமாதானம் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். திரு. இராமாநந்த சட்டர்ஜீ அவர்கள் ஒருஉண்மை சீர்திருத்தவாதி என்பதாகவேநாம் கருதி இருக்கின்றோம் சுயமரியாதைமகாநாட்டுக்கு அவரைத் தலைமைவகிக்கச்செய்யவேண்டுமென்றஒரு பிரச்சினைகூட இருந்துவந்தது யாவருக்கும்தெரிந்ததேயாகும் ஆகவே அவரது நல்லெண்ணங்களில் நமக்கு சந்தேகம் கொள்ள இதுவரையில் எவ்விதத்திலும் இடமில்லை.

ஆனால் திரு. சட்டர்ஜீ அவர்களால் சொல்லப்பட்ட விஷயங்கள்மக்களுக்குள் ஒருசெல்வாக்குப்பெற்ற அபிப்பிராயமும்சிறிதும் யோசித்துப்பார்க்காமல்சப்த மாத்திரத்திலேயேஒப்புக்கொள்ளக் கூடிய அளவுக்குபழக்கமும்விளம்பரமும் கொண்டதாகும்.

ஆதலால் அவ்வபிப்பிராயங்கள் கொள்கின்றவர்களுக்கெல்லாம் உள் எண்ணம் கற்பிக்க முடியாது என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம்.

ஆனால்,

முற்காலம்.

திரு. சட்டர்ஜீ அவர்கள் காட்டிய முற்கால கதைகளை அப்படியேஒப்புக்கொண்டு பார்த்தாலும் கூட முற்காலத்தில் ரிஷிகள், தீர்கதரிசிகளான பெரியார்கள், கீழ் ஜாதியிலிருந்து பிராமணர்களாகப் பாவிக்கப்பட்டவர்கள் என்பவர்கள்எல்லோருமேமதத்தினாலேயே அந்நிலையை அடைந்தார்கள் என்றாலும் தனித்தனி மனிதர்கள் என்கின்ற முறையில் தனித்தனியான 'தெய்வீக' அதாவதுமனித சக்திக்கு மீறியதான காரியங்கள் செய்தவர்கள் என்கின்ற நம்பிக்கை காரணத்தினால் தான் பெரியவர்களானார்கள்என்பதோடு அந்தமாதிரி தெய்வீகசக்தி என்பது அவர்களிடம் இருக்கின்றது என்று பாவிக்கப்பட்ட காரணமே அவர்கள் பெரியவர்களாவதை-ஆனதையாராலும்தடுக்கமுடியாமல் செய்து விட்டதே தவிரமற்றபடி யெல்லோருக்கும் அந்தமுறைபயன்பட்டதாகஇல்லைஎன்றும் இப்போதும் எல்லோருக்கும்பயன்படாதென்றும்சொல்லுகின்றோம்.

மத்தியகாலம்.

மத்தியகாலத்தில் பல பெரியார்கள், பல சீர்திருத்தங்கள் செய்திருக்கின்றார்கள் என்றால் அவற்றுள் புத்தர் ஒருவர் செய்த சீர்திருத்தத்தால் தான் இன்றுஅநேகமக்கள்ஒன்றுபட்டிருப்பதை காணலாம். ஆனால் புத்தர்ஒருகடவுளையோஒருமதத்தையோ ஆதாரமாய் வைத்துக்கொண்டு தனது சீர்திருத்தத்தைச் செய்தார் என்று சொல்லிவிடமுடியாது. ஆதலாலேயே அவர் சுயமரியாதைக்காரர்கள் போல் இந்துக்கள்முதலிய எல்லா மதக்காரர்களாலும்இந்துக்களின் புராண இதிகாசங்களாலும், நாஸ்திகர் என்றும், மதமற்றவர் என்றும் இன்றும் சொல்லப்பட்டே வருகிறார்.

மற்றபடி நானக், குருகோவிந்தர், கபீர், சைதன்னியர் முதலியவர்களும் சீர்திருத்தம் செய்யப்புறப்பட்டவர்கள் என்றுசொல்லிக்கொள்ளலாமே தவிர அவர்களது உபதேசங்கள், முயர்ச்சிகள் ஆகியவைகள் மக்களில் சிறு சிறு கூட்டம் கொண்ட பல பல பிரிவுகளை உண்டாக்கிற்று என்பதைத்தவிர இந்திய பொது மக்களுக்கு என்ன சீர்திருத்தம் செய்தது என்பது நமக்கு விளங்கவில்லை.

ஒவ்வொரு பெரியார் என்பவர்களின் பேரால் ஒவ்வொரு கூட்டம் தனித்து இருந்துகொண்டு மற்றக் கூட்டத்தினிடம் அதிருப்தியுடன் வாழ்ந்து வருகின்றன என்பதை பிரத்தியக்ஷமாய்க் காணுகின்றோம்.

தற்காலத்திலும்.

ராஜாராம்மோகன் ராய் அவர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தத்தின் பயனாய் சிற்சில இடங்களில் மாத்திரம் பிரம்ம சமாஜம் என்னும் பேரால் சில லக்ஷம் பேர்களும், தயானந்த சரஸ்வதி அவர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தத்தின் பயனாய் ஆரிய சமாஜத்தின் பேரால் சில இடங்களில் சில லக்ஷப்பேர்களும் ஒரு தனித்தனிப் பிரிவினராக இருந்து வருகிறார்கள்,

விவேகாநந்தர்உபதேசம் எவ்வளவு மேன்மையானது என்று சொல்லப்பட்டாலும் அது பெரும்பாலும் தர்க்கவாதத்திற்கு இந்தியப் புராதனப்பெருமையை பேசுகின்ற சந்தோஷ சமயத்திற்கும் மாத்திரம் பயன் படுவதன்றி காரியத்தில் என்ன பயன் ஏற்பட்டது என்பதை சென்னை மைலாப்பூரில் இருக்கும் ராமகிருஷ்ண ஹோமை போய்ப்பார்த்தால் விளங்கும்.

அதாவது, ஊராரிடம் பணம்

பறித்து பிள்ளைகளுக்கு பட்டை நாமமும், சாம்பலும் பூசப்பட்டு தனித்தனி அறைகளில் உட்கார வைத்து சாப்பாடுபோட்டு, ஜாதி வித்தியாசம் கற்பிக்கப்பட்டு உயர்வு தாழ்வு நிலை நிறுத்தப் பட்டுவருகிறது. திரு. காந்தி அவர்கள் பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் செய்யும் உபதேசம் தென்னிந்திய பிராமணரல்லாதாரால் எப்படி கருதப்படுகின்றது என்பதும், காந்தி அவர்கள் மக்களை எந்தக்கால உலகத்திற்கு கொண்டுபோக பாடுபடுகின்றார் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் தென்னிந்தியாவில் உள்ள காந்தி சிஷர்களில் பார்ப்பனர் தவிர மற்றவர்கள் திரு. காந்தியை மத சம்பந்தமான விஷயங்களில் ஏற்றுக்கொள்ளுகின்றார்களா? என்பதும் நடு நிலைமை விசாரணை செய்துபார்த்தால் உண்மை விளங்கும்.

அன்றியும் அவரது சீர்திருத்த உபதேசம் இன்றைய கெடுதிகளில் எதை மாற்றக்கூடியதாயிருக்கின்றது என்ற விஷயத்தை முடி செய்ய திரு. சட்டர்ஜீ அவர்களுக்கே விட்டு விடுகின்றோம்.

ஆகவே, முற்காலம்-மத்தியகாலம்-தற்காலம் என்று சொல்லப்பட்டகாலங்களில் எத்தனையோ பெரியார்கள் ஏற்பட்டு மதத்தின் பேரால் அல்லது மதத்தை தள்ளிவிடாமல் மத உணர்ச்சியால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் என்னப்பட்டவைகள் செய்த காரியங்கள் என்னவாய் இருந்த போதிலும் இச்சீர்திருத்த வாதிகள் தோன்றுவதற்கு முன் இந்தியா இருந்த நிலைமையைவிட இன்று என்ன துறையில் எவ்வித மாறுதல் அடைந்திருக்கின்றது என்கின்றதான பிரத்தியக்ஷ அனுபவங்களைக் கொண்டுதான் நாம் மதத்தை சேர்த்து செய்யப்படும் சீர்திருத்த வேலைக்கும் மதத்தை நீக்கி செய்யப்படும் சீர்திருத்த வேலைக்கும் வித்தியாசங்கள் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

திரு. சட்டர்ஜீ அவர்கள் எடுத்துக்காட்டிய பெரியார்களின் வாக்கை-கொள்கையை இன்று ஒப்புக்கொண்டு நடக்கும் மக்கள் எத்தனைபேர்கள் இந்தியாவில் இருக்கின்றார்கள் என்பதை கவனிக்குமுன், இப்பெரியார்களை பெரியார்களாக, தெய்வாம்சம் பொருந்தியவர்களாக கருதி வணங்கும் மக்களில் ஆயிரத்தில் ஒருவராவது அவர்களது கொள்கையை ஒப்புக்கொண்டு நடக்கிறார்களா என்று கேட்கின்றோம். இதற்குக்காரணம் மதமா? அல்லது அப்பெரியார்களின்மீதுள்ள அலட்சிய புத்தியா? அல்லது மனிதனின் முட்டாள்தனமா? என்றும் தெரியவிரும்புகிறோம்.

முற்கால மத்தியகால தற்கால தெய்வீகப் பெரியார்கள், தீர்க்கதரிசிகள், சுவாமிகள் மகாத்மாக்கள் ஆகியவர்கள் மதத்தின் பேரால் செய்துவந்த சீர்திருத்த வேலையின் பலனை ஒரு வாக்கியத்தில் அடக்கவேண்டுமானால் இந்தியாவில் இந்து மதத்தின் பேரால் எத்தனை ஆயிரம் ஜாதிகள்? எத்தனை லட்சம்? பிரிவுகள், எத்தனை-கோடி தீண்டக்கூடாத கிட்டவரக்கூடாத-கண்ணில் தென்படக்கூடாத மக்கள், எத்தனை பத்துக்கோடி கீழ் ஜாதி, 'சூத்ர ஜாதி' மக்கள்? எத்தனை பத்துக் கோடி தற்குறிகள்? என்பவற்றை கவனித்து பார்க்கும்படி திரு சட்டர்ஜீ அவர்களை வணக்கமாய்க்கேட்கின்றோம்.

திரு சட்டர்ஜீ அவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட பெரியார்களில் யாராவது நாம் சொல்லும் மதத்தை அடியோடு ஒழித்து வேலை செய்திருப்பார்களானால் அப்பெரியார்கள் வேலை வெற்றி பெற்று இருக்குமானால், வெற்றி பெற அறிஞர்கள் உதவி இருப்பார்களானால் இன்று நாம் மேல் எடுத்துக்காட்டியதான இத்தனை ஆயிரக்கணக்காகவும் லட்சக்கணக்காகவும் கோடிக்கணக்காகவும் பத்துக் கோடிக்கணக்காகவும் வித்தியாசங்களும் மேல் கீழ் படிகளும், மாச்சரியங்களும் இழிவுகளும், கொடுமைகளும், காட்டுமிராண்டித்தனமான உணர்ச்சிகளும் இருந்துவருமா? என்று பின்னும் பின்னும் வணக்கமாய் கேட்கின்றோம். மதத்தில் ஆழ்ந்திருக்கும் எண்ணமானது அதன்பயனாய் ஏற்பட்ட இவ்வளவு பயங்கரமான பலன்களையும் அலட்சியமாய் எண்ணியிருக்கும்படி மனதை அவ்வளவு இரும்பாக்கிவிட்டது.

மேலும் திரு சட்டர்ஜீ அவர்கள்மதத்தில்நம்பிக்கை அற்றவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள்? என்று ஒரு கேள்வி கேட்கின்றார். அது மிகவும் சரியான கேள்வியேயாகும். ஆனால் மத நம்பிக்கை அற்றவர்களின் வேலையானது எப்படி இருந்த போதிலும் மதநம்பிக்கை உள்ளவர்கள் வேலையின் பயன் அவர்கள் செய்யும் வேலையின் சௌகரியத்தைப் போல அவ்வளவு சுலபமான வேலையாயில்லை.

ஏனெனில் முற்சொன்னவர்களது வேலையானது திரு ராமானந்த சட்டர்ஜீ போன்ற பெரியார் முதல் கொண்டு அதிர்ப்திபடவேண்டியதும் சங்கடப்படவேண்டியதுமான ஒரு எதிர் நீச்சவேலையாய் இருக்கின்றது. இவ்வேலை செய்பவர்களோ, பெரியார்கள், சீர் திருத்தக்காரர்கள் அறிஞர்கள், கற்றவர்கள், செல்வவான்கள், ஏழைகள், 'பெரியஜாதியார்கள்' 'இழிமக்கள்' என்று சொல்லப்பட்டவர்கள் எல்லோராலும் வெறுக்கப்படவேண்டியவர்களாகவும் எதிர்க்கப்படவேண்டியவர்களாகவும் இருக்கவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். மதத்தினால் தங்கள் தங்கள் யோக்கியதைக்கு மீறின சௌகரியமும், மேன்மையும் அடைந்துவருகின்றவர்கள் மாத்திரமல்லாமல் கஷ்டமும் இழிவும் அடைகின்றவர்களும் தங்களை இக்கெதிக்கு ஆளாக்கியதின்பயனை அனுபவிக்கின்றவர்களுடன் சேர்ந்துகொண்டு நம்மை நமது வேலை நடக்கவொட்டாமல் தடுக்கின்றார்கள். என்றால் மதத்தின் கொடுமைக்கு வேறு எதை சமானமாகச் சொல்லலாம் என்பதும், இப்படிப்பட்ட கொடுமைக்கு ஆதாரமான மதத்தை ஒழிப்பது என்பதானது தீர்மானம் செய்யப்பட்ட மறுநாளே பலன் பார்க்கக்கூடியதா என்பதும் திரு. சட்டர்ஜி அவர்களால் தர்ம சிந்தனையோடு கவனிக்கப்படவேண்டியதாகும்.

மதமற்றவர்களால் ஏற்பட்ட நன்மைகள் என்ன என்பதை கணக்கு பார்க்க இன்னமும் காலம் வரவில்லை என்று தான் சொல்லுகின்றோம். மதத்தின் பேரால் கட்டிப்போடப்பட்டிருக்கும் மக்களுக்கு சுயஞானம் ஏற்பட்ட பிறகும் மதத்தின்பேரால் பயனடைந்து வருகின்றவர்களுடைய எதிர்ப்புகளை சமாளிக்க சௌகரியம் செய்துகொண்டபிறகும் தான் மதநம்பிக்கை அற்றவர்களின் வேலையை கணக்குப்பார்க்கவேண்டும் என்று வணக்கமாய் தெரியப்படுத்திக் கொள்ளுகின்றோம்

மதநம்பிக்கை அற்றவர்கள் தங்கள் வேலையில் வெற்றிபெறுவார்களா? என்கின்ற விஷயத்தில நாம் உறுதிகூற துணியவில்லை. ஆனால் நாம் கூறும் மத நம்பிக்கை அற்றால்தான் அதன்போல் இழிவுபடுத்தப் பட்ட-பிரிவுபடுத்தப்பட்ட-சூழ்ச்சி செய்து ஏமாற்றப்பட்ட மக்கள் விடுதலைபெற்ற சமத்துவமடைந்து உலக சகோதரத்துவம் கொண்டாட முடியும் என்பதில் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை என்பதோடு இதுவே வைரம் போன்ற நமது உறுதியான எண்ணமாகும் என்றும்தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தவிர "தென் இந்திய சுயமரியாதைக்காரர்கள் ரஷியாவை பார்க்கிறார்கள்" என்று எழுதி இருப்பதைப்பற்றி சுயமரியாதைக்காரர்கள் அவமான மடையவில்லை. ஏனெனில் ரஷியா எவ்வித இழிவான வேலையையும் மகாபாதகமான வேலையையும் செய்வதாக நாம் கருதவில்லை. ஒரு சமயம் ரஷியா முட்டாள்தனமான வேலை செய்வதாக வேண்டுமானால் சொல்லிக்கொள்ளட்டும். முட்டாள்தனமானகாரியம்சூழ்ச்சியானவேலையைவிட கெட்டகாரியமாகிவிடாது.

திரு ராமானந்த சட்டர்ஜீ அவர்கள் தென்இந்தியாவை, தென் இந்தியப்பார்ப்பனரைக் கொண்டும், அவர்களது பத்திரிகையைக் கொண்டும், அவர்களது அரசியல் இயக்கங்களைக்கொண்டும் பார்க்காமல் வாழ்க்கையில் சகல துறைகளிலும் கீழ் ஜாதியார்களாகவும் சூத்திரர்களாகவும், நால்தீகர்களாகவும், தேசத்துரோகிகளாகவும், பிராமணத்துவேஷிகளாகவும், சர்க்கார் தாசர்களாகவும், பெயர்சூட்டி ஒதுக்கித் தள்ளி வைத்திருக்கும் மூன்றே முக்கால்கோடி மக்களின் மூலமாக பார்ப்பாரேயானால் ருஷியாவைப்பற்றிய அபிப்பிராயம் அந்த நாட்டுக்கு சரியென்றோ, தப்பென்றோ பட்டாலும் தென்இந்தியாவுக்கு அவசியம் என்று உணருவதோடு ருஷியாவுக்கு வழிகாட்டக்கூடிய சக்தியைக்கூட பெற்று விடுவார் என்றே கருதுகின்றோம்.

---

## ரஷ்யாவுக்கும், இந்தியாவுக்கும் ஆகாசதந்தி.

---

ரஷ்ய கவர்ன்மெண்டார் ரகசியமாய் கம்பியில்லாத்தந்தி பரப்பும் ஸ்தாபனம் ஒன்று நோவே இபிரிஸ்க் என்ற இடத்தில் கட்டிவருகிறார்கள் அதிலிருந்து இந்தியாவுக்கு கம்பியில்லாதந்திச்செய்திகள் சுலபமாக அனுப்ப முடியும். நூறு கிலோவாட் பவருடன் வருகிற மழை காலத்திலே

யே வேலை ஆரம்பிக்கும். இந்தியாவிலுள்ள பல்வேறு பாஷைகளிலும் செய்தி பரப்புவதற்கென்று மாஸ்கோ, பெட்ரோகிராட் முதலிய சர்வகலாசாலைகளில் அநேகருக்குப் பயிற்சியளிக்கப்பட்டுவருகிறது.

—டெயிலி மெயில்.

---

# சுயமரியாதை தொண்டர்கள் சங்க நிர்வாகக்கமிட்டி கூட்டம்.

16, 17-9-31ந் தேதி புதன், வியாழக்கிழமைகளில் ஈரோட்டில் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மாளிகையில், சென்னை மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் சங்கத்தின் நிர்வாகக்கமிட்டி கூட்டம் நடைபெற்றது. இரண்டு நாள் நடவடிக்கைகள் முழுமையும் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களும், தோழர் எஸ். இராமநாதன் எம் ஏ.பி.எல். அவர்களும் கவனித்து வந்தார்கள். கூட்டத்திற்கு விஜயம் செய்த தோழர்கள் ஈ. வெ. இராமசாமி, எஸ். இராமநாதன், கே. வி. அழகர்சாமி, கோவை ஏ. ஆர். சிவானந்தம், ஏ.பொன்னம்பலம், எத்தாப்பூர் ஒய்.எஸ் அருணாசலம் சேலம் ஆர். எஸ். அருணாசலம், திருச்செங்கோடு எஸ். சி. ரெங்கசாமி, ஈரோடு எல்லநாயகம், மாயவரம் சி. நடராஜன், நாகை காளியப்பன் முதலியவர்களும் மற்றும் உள்ளூர் வாலிபர்கள் பலரும் விஜயமாயிருந்தார்கள்.

அங்கத்தினர்களுக்குள் ஒவ்வொரு தீர்மானத்தைப்பற்றியும், நன்கு விவாதிக்கப்பட்டு, பின்பு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன. சங்கத்தலைவர். கே. வி. அழகர்சாமி அவர்கள் கூட்டத்திற்குத்தலைமை வகித்தார்.

தீர்மானங்கள்.

1. ஈரோட்டிலேயே மாகாண சுயமரியாதைத்தொண்டர்கள் சங்கக்காரியாலயம் இருக்கவேண்டுமென்றும், அதன் வேலைகள் யாவும், ஈரோடு காரியாலயமூலியமாகவே நடைபெற வேண்டுமென்றும் இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

2. மாகாண சுயமரியாதைச் சங்கத்திற்கு, மாகாணம் முழுதும் அங்கத்தினர்கள் சேர்க்கவும், ஜில்லா, தாலூகா, கிளைச்சங்கங்களை யேற்படுத்தவும், வேண்டிய வேலைகளை செய்ய வேண்டுமென்று இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

(a) கிளைச்சங்கங்களையேற்படுத்தவும், அங்கத்தினர்களைச்சேர்க்கவும் கீழ்கண்ட தோழர்களை அந்தந்த ஜில்லாவின் அமைப்புக் காரியதரிசிகளாய் நியமிக்கிறது.

| ஜில்லா. | பெயர். |
| --- | --- |
| சேலம். | Y. S. அருணாசலம் |
| | S. C. ரங்கசாமி |
| கோவை. | A. R. சிவானந்தம் |
| | கனகராஜன் |
| வட ஆற்காடு. | V. பார்த்தசாரதி |
| புதுவை. | ராஜகோபால் |
| சென்னை. | T. சுப்பிரமணியம் |
| தென்னாற்காடு. | இராமலிங்கம் |
| தஞ்சை. | C. நடராஜன் |
| | K. ராமையா |
| திருச்சி. | ச. ம. சி. பரமசிவம் |
| | வாசுதேவன் |
| செட்டிநாடு. | சு. ப. சுப்பையா |
| | ப. சிவானந்தம் |
| மதுரை. | காரியதரிசி, பார்ப்பனரல்லாதார் சங்கம், |
| திருநெல்வேலி. | S. குற்றாலலிங்கம் |
| | M. வைகுண்டம் |
| காரைக்கால். | கோவிந்தசாமி ஷாப் |
| ராமனதபுரம். | மாரியப்பன் |
| செங்கல்பட்டு. | நாஸ்திக குப்புசாமி, காஞ்சிபுரம் |
| திருவனந்தபுரம். | ராமையா, காரியதரிசி, சுயமரியாதைச்சங்கம். |

(b) சகல ஜில்லாக்களிலும் சென்று சங்கங்களைப்பலப்படுத்த அடியிற்கண்ட தோழர்களை சுற்றுப்பிரயாணம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறது.

1 தலைவர் K.V. அழகர்சாமி
2. அ. பொன்னம்பலம்
3. N. B. காளியப்பன்
4. A. R. சிவானந்தம்
5. அ. இராகவன்.

(c) அங்கத்தினர்களைச் சேர்க்க மாகாண சுயமரியாதைச்சங்கத்தினிடம் ரசீது புஸ்தகங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

(d) வசூலிக்கப்படும் சந்தாத்தொகையில் பாதியை, கிளைச்சங்கங்கள், மாகாண சுயமரியாதைச் சங்கத்திற்கு உடனே அனுப்பிவிடவேண்டும்.

(e) ஜில்லாக்களில் சங்கங்களை யேற்படுத்துவதிலும் சந்தா வசூலித்து மாகாண சங்கத்திற்கு அனுப்புவதிலும், அமைப்பு யேற்படும் வரையில் அந்தந்த ஜில்லாக்களின் அமைப்புக்காரியதரிசிகளின் கூட்டுறவின் பேரிலேயே செய்யவேண்டும்.

உற்சவங்களில் பொதுஜனங்கள் கூடாமலுயவீண் செலவுசெய்யாதிருக்குமாறும் உணவுச்சாலைகளில் வகுப்பு வித்தியாசத்தைக்காட்டக்கூடிய தடைகளை நீக்குமாறும் பலமாக பிரசாரம் செய்ய இக்கமிட்டி தீர்மானிக்கிறது.

ரயில்வே உணவுச்சாலைகளில் உள்ள "பிராமணர்" "பிராமணரல்லாதார்" "சூத்திரர்" என்ற வித்தியாசமுள்ள போர்டை (விளம்பரத்தை) எடுக்குமாறும் அங்குள்ள வித்தியாசங்களை அகற்றுமாறும், ரயில்வே ஜங்ஷன்களிலும் கோர்ட்டுகளிலுமுள்ள மதச்சின்னங்களான விநாயகர், அநுமார் முதலிய விக்கிரகங்களை உடனே அப்புறப்படுத்துமாறும், அதிகாரிகளுக்கு அறிவிக்கவேண்டுமென்று, மாகாண சுயமரியாதைச் சங்க காரியதரிசியை இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

சங்கராச்சாரிகள், சாமியார்கள், சாமியாடிகள் தெய்வீக மகத்வம் பொருந்தியவர்கள் என்று சொல்லிக்கொண்டு பொது மக்களை யேமாற்றி பணம் பறிக்க புறப்பட்டிருக்கும் ஆசாமிகளின் யோக்கியதையைமக்களுக்கு வெளிப்படுத்தியும், சாமியார்களின் ஏமாற்றத்தில் ஏமாறுதிருக்கவும் இப்புரட்டுகளை வெளிப்படுத்தி, அதை அடியுடன் ஒழிக்கவும் பஜனை முதலிய அநாகரீக காரியங்களை தடுக்கவும், மற்றும் அல்லாசாமி பண்டிகை மாரியம்மன் பண்டிகை போன்ற கூடு கொடி கொண்டாட்டங்களுக்காக வேஷம் போட்டு திரிவது முதலிய காட்டுமிராண்டி காரியங்களை நிறுத்த இக்கமிட்டி தனது முழு சக்தியை செலவிடவேண் மென்றும், ரயில்வே ஸ்டேஷன்களிலும், முனிசிபல் நகரங்களிலும் லைசென்சு பெற்றுள்ள - ஹோட்டல், சாப்பாட்டு விடுதி இவைகளில் உள்ள 'பிராமணர்' 'பிராமணரல்லாதார்,' என்ற பிரிவினைகளை கற்பிக்கும் மாதிரியில் உள்ள வேற்றுமைகளை ஒழிக்கவும், இக்கமிட்டி சகலயேற்பாடுகளும் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறது.

மேற்கண்ட விஷயங்கள் சம்பந்தமாய் பத்திரிகைகட்கும், துண்டுபிரசுரங்கள் எழுதி வெளியிடவும், தோழர்கள் அ. ராகவன், சாமிசிதம்பரனார் இவர்கட்கு அதிகாரமளிக்கிறது.

3. நிர்மாண வேலைகளுக்காக மாகாண சுயமரியாதைச் சங்கத்தை இக்கமிட்டி ரூ. 500 ஆரம்ப சிலவிற்கு கொடுத்துதவவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறது.

கமிட்டித் தீர்மானங்கள் யாவும், அக்டோபர் மாதம் முதல் தேதியிலிருந்து ஆரம்பிக்கப்படும். கிளைச்சங்கங்களை யேற்படுத்தவும், பிரசாரம் செய்யவும், மற்றும் இவை சம்பந்தமான சகல விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

சுற்றுப்பிரயாணக்காரர்களை வரவழைக்க விரும்புகின்றவர்கள் ஆபீசுக்கு எழுதலாம்.

இங்ஙனம்,
S. V. லிங்கம்,
ஆபீஸ் காரியதரிசி.

விலாசம்,
மாகாண சுயமரியாதை
தொண்டர்கள் சங்கம், ஈரோடு.

---

(9ம் பக்கத்தொடர்ச்சி)

ச. முருகேச பிள்ளை, மாயூரம் எஸ். நவநீதம் செட்டியார், நாராயணசாமி செட்டியார், இருபாலையூர் இராஜகோபால்நாயுடு, கண்டரை முனுசாமி செட்டியார், வக்கீலும் கவுன்சிலருமான பொன்னம்பல செட்டியார் பி.ஏ., பி.எல், கூடலூர் டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் முனுசாமி செட்டியார், ஈரா லால் சேட், விழுப்புரம் முருகேசம், நெல்விகுப்பம் எம். என். முத்துக்குமாரசாமி பாவலர், பாசக் இரத்னம் பிள்ளை, புதுச்சேரி சைவாஸ் வியாபாரம் வைத்திலிங்க செட்டியார், புதுப்பேட்டை எஸ். எஸ். கிருஷ்ணசாமி செட்டியார் முதலியோரும் மற்றும் பல பிரபலஸ்தர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

திறப்புவிழா.

மேலப்பாளையம் கனேச புரம் ஆதிதிராவிட எலிமெண்டரி பாடசாலைத் திறப்புவிழா 14-9-31ந் தேதி திருநெல்வேலி டிப்டி இன்ஸ்பெக்டர் திரு. சி. இரகுநாதன் அவர்கள் தலைமையில், திருநெல்வேலி டிப்டிகலெக்டர் திரு. ராமதாஸ் அவர்கள் திறந்து வைப்பார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

சில்க் அங்கவஸ்திரம்.

தூய்யவெள்ளை உடல்திக்கான பட்டு தினசரி துவைத்து உபயோகிக்கலாம். சலவையும் செய்யலாம். வருஷக்கணக்கில் உபயோகிக்கக்கூடியது. சம்பி அல்லது குண்டஞ்சுகரையுள்ளது

| | | 1க்கு ரூ. அ. |
| --- | --- | --- |
| $2\frac{1}{2}$ வீதி 5 முளம்பட்டு | ,, | 1-10. |
| டிஷ டசன் | ,, | 17-0. |
| $2\frac{1}{4}$ 5 முளம் பட்டு | ,, | 1-6. |
| டிஷ டசன் | ,, | 15-0. |
| 3 வீதி 8 முளம்வேஷ்டி | ,, | 3-8. |
| டிஷ டசன் | ,, | 40-0. |

மானேஜர் S. K. R. வீவிங்
பாக்டரி, கோட்டார்,
திருவிதாங்கூர், தென் இந்தியா.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

மாய் வந்தோமானால் நீங்கள் நம்பிட்டு காசு கொடுத்துவிட்டுப் போவீர்கள் என்பது எங்களுக்கு நன்றாய்த் தெரியும். இதற்காக ஒரு துரும்பைக் கிள்ளிப் போடவேண்டிய அவ்வளவு சிறிய கஷ்டம்கூட நாங்கள் படவேண்டியதில்லை.

ஆனால் நாங்களோ இன்று அப்படி சொல்லி வயிறு வளர்ப்பதனுடைய புரட்டுகளை எடுத்துச்சொல்லுகின்ற வேலையை மேற்போட்டுக் கொண்டிருக்கின்றோமாதலால் சோம்பேறிப் பிழைப்புக்காரர்களுடைய கோபத்திற்கும் பழிதீர்த்துக்கொள்ளும் வஞ்சகத்திற்கும் ஆளாகவேண்டியவர்களாக இருக்கின்றோம். இந்திய நாடு சூழ்ச்சிக்காரருடைய ஆட்சிக்கு உட்பட்டகாலம் முதலே எங்களைப்போல் ஒரு கூட்டம் பல தடவை தோன்றி சூழ்ச்சிகளை வெளிப்படுத்தி வந்திருக்கின்றதானாலும் சூழ்ச்சிக்காரர்களின் சாமர்த்தியமானது, அவற்றை லக்ஷியப்படுத்தக் கூட முடியாமல் செய்துகொண்டே வந்திருக்கின்றது. இன்றைய தினம் அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் சுதந்திரத்திற்கும் விரோதமான காரியங்கள் என்று எதை எதை நாங்கள் கருதுகின்றோமோ அவற்றையெல்லாம் எங்களுக்கு முன்னும் அநேக பெரியார்கள் கருதி வெகு கடினமாக கண்டித்து பேசி இருக்கின்றார்கள்.

உதாரணமாக ஜாதி மதத்தை கண்டித்தும் வேத சாஸ்திரங்களைக் கண்டித்தும் கோவில், குளம், கல்லுருவம் தாம்பர உருவம் ஆகியவைகளை கண்டித்தும் பூஜை, உற்சவம், சடங்கு ஆகியவைகளைக் கண்டித்தும் எத்தனையோ பெரியார்கள் பேசியிருக்கின்றார்கள். 'சாஸ்திரத்தைச் சுட்டு சதுர்மறையைப் பொய்யாக்கி சூத்திரத்தைக்கண்டு சுகம் பெறுவதெக்காலம்' என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். ஒரு பெரியவர் 'கல்லையும் செம்பையும் வணங்கும் கசடர்காள்' என்று சொல்லியிருக்கின்றார். சாதி மத பேதமெல்லாம் சூழ்ச்சியால் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லியிருக்கின்றார். இன்னும் எவ்வளவோ சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் நம் மக்களோ அப்பெரியார்களையெல்லாம் தெய்வீகத் தன்மை கொண்டவர்கள் என்றும், ஞானிகள் என்றும் சித்தர்கள் என்றும் கருதி இன்றும் வணங்குகின்றார்கள். ஆனால் அப்பெரியார் சொன்னவைகளை கவனித்துப்பார்க்கும்படி யாராவது சொன்னால் மாத்திரம் அவர்கள் மீது மிருகப்பாய்ச்சல் பாய்கின்றார்கள். இது ஒன்றே போதாதா நம் மக்களின் அறிவின் திறத்தை அளந்துபார்ப்பதற்கு என்று யோசித்துப்பாருங்கள். இந்த மாதிரியான பாமர உணர்ச்சியும் பயங்காளித்தனமும் வைத்ததைச் சுமக்கும் மிருக சுபாவமும் இந்நாட்டு மக்களின் உயர்குணங்களாகப் பாவிக்கப்பட்டு வருவதாலேயே உலகத்தில் இந்திய நாடு மாத்திரம் வெகுகாலமாகவே அடிமை நாடாகவே, கூலி நாடாகவே சுயமரியாதையும் அறிவும் ஞானமும் அற்ற நாடாகவே இருந்து வருகின்றது. இதற்குக் காரணம் இன்னது தான் என்பதை கண்டுபிடிக்க நம்மவர்களுக்கு இன்னமும் அறிவு ஏற்படவில்லை. ஒரு நாய் வளர்த்துகின்றவன் தன் நாயை மற்றவன்மேல் ஏவி விடுவது போல் நம்மை யார் ஆட்சி செய்து இக்கதிக்கு ஆளாக்கினார்களோ அவர்களேதான் அச்சூழ்ச்சியை ஒழிக்க வரும் ஆட்கள் மேல் நம்மை உசுப்படுத்தி விடுவதால் உண்மையை உணர கவலை கொள்ளாமல் அவர்கள் கைகாட்டின பக்கம் திரும்பிக்கொண்டு கத்துகின்றோம்.

நமது நாட்டு அடிமைத்தனம் எத்தனை காலமாய் இருந்து வருகின்றது என்பதை நினைத்துப் பாருங்கள். தர்மராஜ்யம், இராமராஜ்யம், சத்தியகீர்த்தி அரிச்சந்திரராஜ்யம் முதலிய அவதார ராஜ்யம் முதல் தெய்வீகத்தன்மை பொருந்திய மூவேந்தர் முதலிய சரித்திர ராஜ்யம் வரை இந்திய மக்கள் நிலைமையை சற்று ஞாபகப்படுத்தி ஆராய்ச்சி செய்து உண்மையைகண்டு பாருங்கள். அந்த நிலைக்கு இந்த நிலை மேலானதா? கீழானதா? என்று சுயமரியாதைக்கண்ணாடி மூலம் பாருங்கள். ஞானக்கண்ணாடி மூலம் பாருங்கள். சுதந்திரம், சமத்துவம் என்கின்றதான கண்ணாடிகள் மூலம் பாருங்கள்.

நீங்கள் எந்த பார்ப்பனர்களையும் கேட்டுப்பாருங்கள். தங்கள் நிலை 'இன்றையைவிட அன்று அதாவது அவதார ஆட்சியிலும் மூவேந்தர் ஆட்சியிலும் மேலாயிருந்தது ஆனால் இன்று கீழாயிருக்கின்றது' என்றுதான் சொல்லுகின்றார்கள். ஆனால் அவர்கள் தவிர மற்ற மக்களாகிய "சூத்திரர்கள்" பெண்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியார்கள் என்று இழிவுபடுத்தி இருக்கிற நம்மில் 100க்கு 99 ஜனங்களை கேட்டு பாருங்கள் நெஞ்சில் கையை வைத்து நினைத்துப்பாருங்கள். அன்றைக்கு இன்று எவ்வளவு மேலான நிலையில் இருக்கின்றோம் என்பதை ஒவ்வொரு துறையாய் ஆராயுங்கள். உண்மை காண்பீர்கள். இதோடு நின்றுவிடாமல் இந்த நிலையோடு திருப்தி அடையாமல் இன்னும் மேலே போகவேண்டுமென்று சொல்லுங்கள். எவ்வளவு மேலே போகவேண்டுமானாலும் நானும் கூடவே வர பாடுபடுகின்றேன் ஆனால் பழைய நிலைமைக்கே மேல் அதற்கே போகவேண்டும் என்று சொன்னால் அதை சகிக்க முடியவில்லை அரை நிமிஷம்கூட அதை ஆதரிக்க முடியாது. உலகம் அறிவு பொருள் முதலிய அகத்திலும் புறத்திலும் சமத்துவத்தையும் பூரண சுயேச்சையையும் அடைய தீர்மானித்து விட்டது. இந்தியா மாத்திரம் மூடர்களாய், அடிமைகளாய் இழிமக்களாய் இருக்கும் அவதார ராஜ்யத்திற்கு போகவேண்டுமென்றால் இந்நாடு அடியோடு அழிந்து போவதே மேலானகாரியமல்லவா?

நண்பர்களே உலகத்தை ஒருகண்ணில் பார்த்து இந்தியாவை ஒரு கண்ணில் பார்த்து, இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை உணருங்கள். நம் கல்வி, செல்வம் வாழ்வு விவசாயம் வீரம், மானம், அறிவு ஆராய்ச்சி, முற்போக்கு ஆகியவைகள் எல்லாம் எப்படி இருந்தது இருக்கிறது. மற்ற நாடுகள் எப்படி இருந்தது இருக்கின்றது என்பவைகளை சிந்தித்துப்பாருங்கள். என்று சொல்லி ஒவ்வொன்றிலும் வெளி தேசத்தையும் இந்தியாவையும் ஒப்பிட்டு பார்க்கும்படி விளக்கிக்காண்பித்துவிட்டு உட்கார்ந்தார்.

### "உபசாரப்பத்திரம்"

இந்த சமயத்தில் ஒரு வாலிபர் "கடலூர் வாலிபர்கள் சார்பாக திரு இராமசாமி பெரியாருக்கு உபசாரப்பத்திரம் படிக்கவேண்டும்" என்று சொல்லி அதன் பிரதி ஒன்றை தலைவரிடம் கொடுத்தார். தலைவர் அதை வாங்கி தானே வாசித்துப்பார்த்தார் அவ்வுபசாரப்பத்திரத்தில் முதல் இரண்டு மூன்று வாக்கியங்களில் திரு இராமசாமியை பாராட்டும் பாவனையாகவும் பின் இரண்டு வாக்கியத்தில் கதரைப்பற்றிய அபிப்பிராயத்தை விளக்கவேண்டுமென்றும், தாலிகட்டுவது அடிமைத்தனத்திற்கு அறிகுறி என்று சொல்லும் தங்கள் மனைவியார் ஏன் தாலிகட்டி இருக்கின்றார் என்றும் கேள்வி கேட்கும் பாவனையாக எழுதப்பட்டிருந்தது. தலைவர் எழுந்து கதரைப்பற்றிய விபரம் தெரியவேண்டுமானால் தானே சொல்லுவதாகச்சொல்லி அதைப்பற்றி புள்ளிவிபரங்களுடன் 15 நிமிஷம் பேசினார். (அது ஒரு தனி வியாசமாக சீக்கிரத்தில் பிரசுரிக்கப்படும்) அதன் பேரில் கடலூர் திரு தேவநாயக அய்யா அவர்கள் பேச விரும்பியதின் மீது சில விஷயங்கள் பேச அனுமதிக்கப்பட்டார். அவர் கதரைப்பற்றி பேசினார்.

பின்னர் திரு இராமசாமி எழுந்து பதில் சொல்லும் முறையில் தாலி கட்டிக்கொண்டிருப்பது அடிமைத்தனத்திற்கு அறிகுறி என்று அநேக பெண்கள் இன்னமும் உணரவில்லையென்றும் உணர்ந்த பல பெண்களும் தாங்கள் அடிமைகளாய் இருப்பதைப்பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறார்கள் என்றும் சிலர் சமூகத்துறைக்கு பயந்து கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் எந்த எண்ணத்தின்மீது தனது மனைவியார் கட்டிக்கொண்டிருந்தாலும் அவர்களது இஷ்டத்திற்கு விரோதமாய் பலவந்தம் செய்யத்தான் துணியவில்லை என்றும் சொன்னார். ஒருவர் மத்தியில் எழுந்து "உங்கள் குடும்ப மனைவியையே நீங்கள் அடக்கி ஆள முடியவில்லையானால் மற்றவர்களை எப்படி திருத்தமுடியும்" என்றார். இதற்கு திரு இராமசாமி சமாதானம் சொல்லுகையில் மனைவியை அடக்கி ஆளவில்லை என்று சொன்ன நண்பர் மனைவி என்றால் அடிமை என்கின்ற நமது பழைய கொள்கையை மனதில் வைத்துக்கொண்டு பேசுகின்றாரே ஒழிய அவர்கள் இஷ்டப்படி நடக்க அவர்களுக்கு உரிமை உண்டு என்றும் சிறிதும் கவனியாமல் சொல்லுகிறார் என்றே கருதுகின்றேன் என்றும், பெண்களுக்கு கல்வியறிவும் சுதந்திர உணர்ச்சியும் சுயமரியாதையும் ஏற்பட்டால் தானாகவே தாலியை அறுத்தெறிந்து விடுவார்கள் என்றும் சுதந்திர உணர்ச்சி உள்ள பெண்கள் இனி தாலிகட்ட கழுத்தைக்கொடுக்கமாட்டார்கள் என்றும் இவ்விஷயங்களில் மற்ற வெளிஜனங்கள் என்பவர்களுக்கும் குடும்பத்தார் என்பவர்களுக்கும் பிரமாத வித்தியாசம் இல்லையென்றும் சொல்லிவிட்டு கடைசியாக இக்கூட்டத்தில் அரசியல் சம்மந்தமான பேச்சை தான் வேண்டுமென்றே பேசாமல் விட்டுவிட்டதாகவும் ஏனெனில் இதுவே முதல் கூட்டமானதால் அதிகமான விஷயங்களை ஜீரணம் செய்விக்க முடியாதென்று கருதியே அப்படிச் செய்ததாகவும் ஆனபோதிலும் காங்கிரசுக்காரர்கள் என்கின்ற முறையில் சிலர் அவர்களாகவே நம்மை பேசும்படி செய்ததால் தான் அதற்கு நன்றி செலுத்துவதாகவும் கூறி கதரைப்பற்றியும் அதற்கும் அரசியலிற்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும் அது எவ்வளவு தூரம் தொழில் முறையிலோ பொருளாதாரத் துறையிலோ உதவி இருக்கின்றதென்றும் அது சமதர்ம கொள்கைக்கும் மனிதனின் இயற்கையான ஆசாபாசங்களுக்கும் முன்னேற்றத்திற்கும் எவ்வளவு இடையூறென்றும் எடுத்துக் காட்டியதுடன் திரு காந்தியே மில்லை ஆதரிக்க வந்துவிட்டதுடன் புதிய யந்திரம் கண்டுபிடிக்க ஆசைப்பட்டு கண்டுபிடிப்பவருக்கு ரூ. 100000 சன்மானம் கொடுக்க முன்வந்துவிட்டார் என்றும், கதர் தற்கால சாந்திதான் என்பதாக திரு ராஜகோபாலாச்சாரியார் சொல்லியிருக்கும் அபிப்பிராயங்களையும் எடுத்துச் சொல்லிவிட்டு கதரை ஒரு தர்ம கைங்கரியமாக வைத்துக் கொண்டாலும்கூட ஏழைகள் பிழைக்க வென்று மக்களிடம் கதரின் பேரால் 4 அணா வசூலித்து அவர்களுக்கு ஒரு அணா போய்ச் சேரும்படியிருப்பது தர்மகைங்கரியம் ஆகாதென்றும் எப்படியெனில் ஒரு நாளைக்கு கால் ராத்தல் நூல் நூற்று ஒரு அணா கூலி அல்லது ஒன்னேகால் அணா கூலி பெருகின்றார்கள் என்றால் அந்த கால் ராத்தல் நூலால் நெய்யப்பட்ட கதரை வாங்க வேண்டியவர் 6 அணா கொடுக்கிறார். இந்த நீளமுள்ள துணியை, மில் துணியாக வாங்கினால் 0-2-6 அணாவுக்கு வாங்கலாம். ஆகவே ஒரு அணா தர்மம்செய்ய மற்றவனிடம் 3—6 தட்டிப்பறிக்கவேண்டி இருக்கின்றது என்று புள்ளிவிபரத்துடன் எடுத்துக்காட்டினார். பிறகு திரு. தேவநாயகய்யா பேச அனுமதிக்கப்பட்டார்.

அது சமயம் அவர் கதர் விலை இப்போது அதிகமாயிருந்தாலும் காளா

வட்டத்தில் குறைந்து விடும் என்றும் மூன்று நான்கு வருஷத்திற்கு முன் கதர் கஜம் 0-10-6 அணாவாகஇருந்தது இப்போது 0-9-6 அணாவாக இருக்கின்றதென்றும் சமதர்மம் ஆரம்பித்தால்நமக்குள் கலகம்வரும்போலிசார் கவர்மெண்டார் அனுகூலமாய் இருக்கமாட்டார் என்றும் சொன்னார். இதற்கு திரு. இராமசாமி எழுந்து கதர்விலை கெஜத்திற்கு ஒரு அணாகுறைந்ததற்குக் கதர் முன்னேற்றமடைந்ததால் அல்லவென்றும் பஞ்சுபாரம் 350 ரூ. இருக்கும்போது கெஜம் 0-10-6 அணாவுக்கு விற்றது இப்போது பஞ்சு பாரம் 116 ரூ.க்கு வந்த பிறகு அதாவது மூன்றில ஒரு பங்குக்கு பஞ்சு விலை வந்தபோது கதர் விலையில் 10ல் ஒரு பங்கு குறைந்துஒரு அணா மாத்திரம் குறைக்கப்பட்டிருக்கின்றது என்று கதரின் குணத்தில் பார்த்தாலும் கூட தான் கதர் இலாக்காவில் இருக்கும்போது 50 இஞ்சு 10கெஜம்மூன் றரையே அரைக்கால் மூன்றேமுக்கால் ரூத்தல்இடைதானிருந்தது இப்போது 4 ராத்தல் இடை ஆகிவிட்டது என்றும் எடுத்துச் சொல்லிவிட்டு திரு தேவநாயக அய்யா அவர்களை இனியும் ஏதாவது கேட்கின்றீர்களா என்று கேட்டார். அவர் இவ்வளவுதான் என்று சொன்னார், பிறகு இனியும் யாருக்காவது தான் பேசியதில் ஏதாவது சந்தேகம் உண்டா என்றார். மற்றொரு வாலிபர் ஒரு சந்தேகம் என்று சொல்லி வருணாச்சிரம தர்மத்தின் அவசியத்தையும் அர்ச்சகர் புரோகிதர்கள் அவசியத்தையும் பற்றி பேசினார். தலைவர் தாங்கள் சந்தேகங்களையோ கேழ்விகளையோ சொல்லுங்கள் என்றார். உடனே அவர் 1 கடவுள் உண்டா இல்லையா 2 கடவுளை அடையும் மார்க்கம் என்ன? 3 மனிதன் கடமை என்ன என்று கேட்டார்.

இதற்கு திரு இராமசாமி கடவுள் என்பதை தான் ஒரு அர்த்தமற்றவார்த்தை என்று கருதி யிருப்பதாகவும் ஆனால்கடவுளைப்பற்றிபேசுபவர்கள் அதற்கு தனித்தனி அர்த்தம் கற்பித்து கொள்ளுகிறார்கள் என்றும் கேழ்வி கேட்பவர் கடவுளுக்கு இன்ன வித மான அர்த்தம் கொண்டு இருக்கிறார் என்று தெரிந்தால் அது உண்டு இல்லை என்றும் எப்படி அடைவதென்றும் ஒரு வார்த்தையில் முடித்து விடலாம் என்று சொன்னார். இதற்கு கேள்வி கேட்டவர் ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

பிறகு மனிதனுடைய கடமைஎன்பது தனியாக ஒன்று இல்லை என்றும் அவரவர் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அனுபவத்திற்கும் சரி என்று பட்ட விஷயங்களின்படி அவரவர் நடந்து கொள்ளுவதை தான் கடமையாக கொள்ள வேண்டுமென்று சொன்னார். மீட்டிங்கு இனிது முடிந்தது.

பிறகு திரு தேவநாயக அய்யாஉள்பட காங்கிரஸ்காரர்கள் பலர் திரு இராமசாமியுடனும் இராமநாதனுடனும் பழய நட்பு முறையில் பேசிக் கொண்டு வந்ததோடு அவரவர்கள் அபிப்பிராயத்தில் எவ்வளவு வித்தியாசமிருந்தாலும் ஒழுங்கு முறையில் யாவரும் நடக்கவேண்டும் என்பது தங்கள் கொள்கையென்றும் தென் ஆர்காடு ஜில்லா காங்கிரஸ் தலைவர் திரு ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் கூட்டத்தை ஒழுங்காக நடத்திக்கொடுக்க வேதங்களை அனுப்பினார் என்றும் அதற்கு ஆகவே தாங்கள் வந்து இருந்து நடத்திக்கொடுத்ததாகவும் சொன்னார் திரு இராமசாமி இதற்கு நன்றிசெலுத்துவதாகவும் திரு இராமசாமி ரெட்டியாருக்கு தனது நன்றியறிதலை தெரிவிக்கும் படிக்கும் சொன்னார். பிறகு சாப்பாடு ஆனதும் ரயிலுக்கு புறப்பட்டார்கள். புறப்படும் சமயத்தில் சில முகமதிய கனவான்களும் மற்றும் சிலரும் அடுத்தநாள் தாங்கள் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருப்பதாகவும் அதற்கு இருக்கவேண்டுமென்றும் கேட்டார்கள். ஒரு நாள் சாவகாசத்தில்நான் தாங்கள் வந்ததாகவும் வேண்டு மானால் சமீபத்தில் வருவதாகவும் சொல்லி ரயிலுக்கு புறப்பட்டார்கள். அநேக கனவான்கள் ரயிலுக்கு வந்து பயணம் அனுப்பிக் கொடுத்தார்கள்.

---

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931 ௵ S. C. No. 340.

சி. என. வெங்கிட்டபதி நாயுடு—வாதி.

பலலடம் தாலூகா வாரப்பட்டி கிராமம் மஜரா சந்திராபுரத்திலிருக்கும் காளியப்ப கவுண்டன் மகன் அருணாசலக்கவுண்டன்—பிரதிவாதி.

ஷை நெ பர் வாதி பிராமிசெரி நோட்டின்படி ரூபாய் 83-12-8 வரவேணுமாய் தாவா செய்திருக்கிறபடியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆட்சேபணையிருந்தால் அதை நீர் நாளது 1931௵ செப்டம்பர் மாதம் 30-ௗ பகல் 10-மணிக்கு இந்தகோர்ட்டில் ஆஜராகி அரிவித்துக்கொள்ளவும் அப்படிக்கிலலாவிட்டால் ஷை விஷயமாய் ஒரு தலைப்பட்சமாய் தீர்மானிக்கபபடுமென்று அறியவும்.

சி. எஸ். குப்புசாமிஅய்யர்,வக்கீல்.

---

வேலையில்லையே என்று
கவலை வேண்டாம்!

## கைத்தொழிலே செல்வம்.

அநேக இந்திய முக்கிய கைத்தொழில்கள் செய்யும் வழிகளை தெரிந்து கொள்ளுங்கள். பிறர் உதவியின்றி சம்பாதியுங்கள். ஐந்து ஒரு அணா ஸ்டாம்புகள் அனுப்புவோருக்கு சில முக்கிய கைத்தொழில்களடங்கிய புத்தகம் அனுப்பப்படும்.

விலாசம்:-- எஸ். நாராயணசாமி,
பெரும்புகளூர்,
திருவாரூர் போஸ்டு, தஞ்சாவூர்

## மணவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத்துணைக்கு ஒரு பெண் தேவை. அக்கனவானின் யோக்கியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பென்ஷன் மாத்திரம் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர மற்றபடியான தகுந்த பெருமையும் சொத்தும் உடையவர். நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமும் உடையவர். நல்ல குணமும ஒழுக்கமும் உடையவர்.

பெண்ணுக்கு இருக்கவேண்டிய யோக்கியதைகளாவன வயது 30 முதல் 40க்குட்பட்டதாய் இருக்கவேண்டும். ஜாதி வேளாளர், நாயுடு, ரெட்டி, முதலியார், கவுண்டர், பிள்ளை ஆகிய ஜாதியார்களாய் இருந்தால் நலம். யோக்கியதை-தமிழ் கல்வி கற்றிருந்தால் போதும். தன்மை விதவையானாலும் குற்றமில்லை. நல்ல சரீரக்கட்டுடன் வியாதியில்லாமல் இருத்தல் வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்துடன் தங்கள் உருவப்படத்துடன் எழுதுக. மலேயா.

C/o "குடி அரசு" ஈரோடு.

---

நோட்டீஸ்.

## திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1931 ௵ O. S. No. 391.

மாணிக்க முதலியார் வாதி.

அவனாசி தாலூகா கருவலூர் கிராமம் கஸ்பாவிலிருக்கும் மாரப்பாசாரிமகன் அவனாசி ஆசாரி 1. ஷை யூரிலிருக்கும் 1ம் பிரதிவாதி மக்கள் பழனியப்பாசாரி 2. அவனாசி ஆசாரி 3. சின்னப்பாசாரி 4. ராமசாமி ஆசாரி5.—பிரதிவாதிகள்,

உங்கள் வகையரா பேரில் பிராமிசெரி நோட்டின்படி ரூபாய் 335-12-4 வரவேணுமாய் வாதி தாவா தொடர்ந்து வாய்தா 30-9-31 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தாவா விஷயமாய் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபணையிருந்தால் அதை நீங்கள் 30.9-31 தேதி பகல 10 மணிக்கு இந்தக்கோர்ட்டில நேராயாவது வக்கீல் மூலமாயாவது ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும் அப்படிக்கில்லா விட்டால் ஷை விஷயமாய் ஒருதலை பட்சமாய் தீர்மானிக்கப்படும்.

சி. எஸ். குப்புசாமி அய்யர்
வக்கீல், திருப்பூர்.

---


## கெந்தக பஸ்பம்.

மேகருஷ்ட ரோகத்திற்கு 52 வருடங்களாக கையாண்டுவந்தது, ஏராளமான சர்ட்டிபிக்கேட்டும், தங்கமெடல்களும் பெற்றது.

இந்த கெந்தக பஸ்பம் மஹான் ராமலிங்க சுவாமியால் உபதேசிக்கப்பட்டது. மேக குஷ்டரோகம், 48 நாளில் சொஸ்தமாகிவிடும். அவுஷதம் மழைகாலத்திலும், வெய்யிற்காலத்திலும் சாப்பிடலாம, அவுஷதம் சாப்பிடும் காலத்தில் எத்தொழிலும் செய்யலாம். இந்த அவுஷதத்தால் குஷ்டரோகம் தீராவிட்டால் பிறகு கடவுள்தான் தீர்க்கவேணும். இந்த அவுஷதத்தால் வியாதி தீராதென்கிற சந்தேகப்பட்டவர்கள் எக்ரிமெண்டு செய்து கொண்டால் அவுஷதம் இனமாய் அனுப்பப்படும். கீழ்கண்ட விலாசத்திற்கு விபரம் எழுதி தெரிந்துகொள்ளவும்.

48 நாள் சாப்பிடக்கூடிய அனுபான லேகியம், பஸ்பம், தைலம். விலை. ரூபா. 20—0—0

அவுஷதத்திற்கு ஆர்டர் செய்பவர் ரோகத்தின் விபரம் கண்டு எழுதவும். ஏழை ஜனங்கள் நேரில் வந்தால் அவுஷதம் இனாம்.

விலாசம்:—

ஆயுர்வேத வைத்திய பாஸ்கர
V. கலிவராயன்,
நிர்த்தன மங்கலம் போஸ்டு,
(வழி) சிக்கல், தஞ்சாவூர் ஜில்லா.

### கேள்வி.

#### மூன்று கன்றுக்குட்டிகள்.

மூன்று பசுவின் கன்றுக்குட்டிகள் ஒன்றாய் ஒரு காட்டில் மேய்ந்துகொண்டிருந்தன. அவற்றில் குடியானவர் வீட்டுக்கன்றுக்குட்டி:--

'நண்பர்களே வீட்டுக்குபோகலாம். பால் கரக்கும் நேரமாய் விட்டதால் நாம் போய் பால் குடிக்கலாம்' என்றது.

செட்டியார்வீட்டு கன்றுக்குட்டியானது 'பால் கரக்கின்ற நேரமானால்தான் என்ன முழுகிப் போய்விட்டது? வயிரார பால் கிடைக்கவாபோகின்றது?' என்றது.

மூன்றுவதான அய்யர்வீட்டுக் கன்றுக்குட்டியானது 'நீங்கள் என்னமோ பேசிக்கொள்ளுகின்றீர்களே. எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே.' என்றது.

ஒவ்வொன்றும் இந்தப்படி பேசியதின் கருத்து என்ன?

#### பதில்

குடியானவன், கன்றுக்குட்டிக்கு வயிராரப்பால் கொடுப்பது வழக்கம்.

செட்டியார், கன்றைஅவிழ்த்துவிட்டு முலைக்காம்பில் வாய்வைத்து முட்டி கொஞ்சம் பால் குடித்தவுடனே கன்றுக்குட்டியை பிடித்துக்கட்டி விடுவது வழக்கம்.

அய்யரோ, கன்றுக்குட்டியை மாட்டுக்கு எதிரில்காட்டுவதைத்தவிர பக்கத்தில்கட்டி இருக்கக்கூட சம்மதிக்காமல் பால் கரந்துகொள்ளுவார். ஆதலால் அவை தன் தன் அனுபவங்களையேபேசின.

---

சமத்துவம் ஆத்மாவுக்கேயொழிய சரீரத்திற்கல்ல. காந்தி.

ஃ ஃ

வருணாச்சிரம தர்மம் கெட்டுப் போனதாலேயே— சரியானபடி காக்கப்படாததாலேயே இந்தியா அன்னியருக்கு அடிமையாகி விட்டது. காந்தி

ஃ ஃ

பெண்கள் கற்பைக் காக்கப் புறப்பட்ட முண்டங்கள் ஆண்கள் கற்பைக் காக்க என் செய்தீர்? போக்கிரி.

ஃ ஃ

உலகத்தில் இராட்டினத்தால் பெண்களுடைய கற்பைக் காக்கமுடியுமென்றால் இப்படிப்பட்டப்பெண்களை உயிருடன் சேர்த்துக்கொளுத்திவிடுவது மேல் அல்லவா? போக்கிரி.

ஃ ஃ

பெண்களின் கற்பு கெடுவதற்குக்காரணமாயிருக்கும் கடவுளையோ, ஆண்களையோ விட்டுவிட்டு பெண்களைக் குறைகூறுவதும், அடைத்து வைப்பதும் அறிஞ் சாதர்மமா? போக்கிரி.

ஃ ஃ

கடவுள்மீதும் கடவுள் செயலிலும் நம்பிக்கை உள்ளவர்கள் ஏன் க்ஷவரம் செய்து கொள்ளுகிறார்கள்? என்பதுநமக்குத் தெரியவில்லை. கடவுளாகக் கொடுத்ததை பரிகாரியைக் கொண்டு ஏன் சிறைக்க வேண்டும்? இது கடவுளுடன் போடும் போட்டியல்லவா? தொலைந்து போகட்டும் என்றாலோ, அந்தக்கடவுளாவது "அவனுக்கு அது இஷ்டமில்லை" என்று கருதிநிறுத்தி விடலாமே? என் மறுபடியும் வளரச்செய்கிறார்? என்பதும் நமக்குப்புரியவில்லை. ஒருசந்தேகி.

---

### பறையாகளே!

[பறையன் எழுதுவது]

நீங்கள் தீண்டாமை இழிவிலிருந்து இன்றே விலக்கப்பட்டு விடுதலையும், மனிதத்தன்மையும் அடையவேண்டுமானால், இந்தக் களை நம்பாதீர்கள். மத நடுநிலைமை வகிக்கும் காங்கிரசை நம்பாதீர்கள்.

ஆத்மாவுக்குத்தான் சமத்துவமேயொழிய சரீரத்திற்கு சமத்துவம் இல்லை என்று சொல்லும் மகாத்மாக்களை நம்பாதீர்கள்.

அவனவன் ஜாதிமத ...ஆச்சார ......அனுஷ்டானம், பழக்கம் வழக்கம் தொழில் முறை, ஆகியவைகளை காப்பாற்றிக் கொடுப்பதாக வாக்களித்து ஜவாப்தாரித்தனத்தை ஏற்றுக்கொண்டிருக்கும் பிரஜா உரிமை சுயராஜியத்தை நம்பாதீர்கள்.

பறக்கிறிஸ்துவன், பாப்பாரக் கிறிஸ்துவன் என்பதாக வகுக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவர்களையும் நம்பாதீர்கள்.

மத நடுநிலைமையை ஒப்புக்கொண்டு அதற்கு உறுதிமொழி கொடுத்து அரசாட்சி நடத்திவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் நம்பாதீர்கள்.

மரியாதையாய் நமது மகாநாடுகளின் தீர்மானப்படி சாமிநாதன் சொற்படி முஸ்லீம்களை தஞ்சமடைந்து சமத்துவக் கொள்கைகளை ஏற்று இன்றே இழிவிலிருந்து விடுதலை பெறுங்கள்.

இந்திய மக்களுக்கும் விடுதலையை சம்பாதித்துக் கொடுங்கள், கடவுளைப் பற்றியும், மோட்சத்தைப்பற்றியும் உங்களுக்கு கவலை வேண்டாம்—முதலில் மனிதாகுங்கள். மானம் பெறுங்கள். 8 கோடி முஸ்லீம்களை சகோதரர்களாகக்கொண்டு அவர்களுடன் நாம் ஒரு ஏழுகோடி சேர்ந்தோமானால் ஆகமொத்தம் 15 கோடி மக்கள் ஒரே சமூகமாக ஆகிவிடவில்லையா?

இந்தியாவில் 15கோடி மக்கள் ஒரு சமூக சகோதரர்கள் போல் ஆனால் இந்தியாவுக்குச்சுயராஜியம் கிடைக்காமல் இருக்கமுடியுமா?

இர்வின் பிரபுவுடன் ராஜி பேசவேண்டிய அவசியம் ஏற்படுமா? வட்டமேஜை மகாநாடு லண்டனில் கூடுமா?

ஆகவே தீண்டாதார்கள் முஸ்லீம்களுடன் சேர்ந்தாலொழிய இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரமும் சுயமரியாதையும் ஏற்படப்போவதில்லை. வேண்டுமானால் இராமராஜியம் ஏற்படலாம், வருணாச்சிரம ராஜயம் ஏற்படலாம், பணக்கார ராஜியம், பார்ப்பன ராஜியம், மில் முதலாளிகள் ராஜியம் ஏற்படலாம்.

---

## கடவுளைக் கண்டால் கழுத்தை அறுப்போம்.

(K. R. சுவாமி எழுதுவது)

ஏனென்றால், நாங்களாகிய ஆறு கோடி மக்கள் படும் கஷ்டத்தை பார்த்தும் இதுவரையில் மனமிரங்கி இரட்சிக்காத அக்கல் நெஞ்சக் கடவுளைக் கண்டால் உடனே கழுத்தை அறுப்போம். இவ்வுலகில் மானிடர்களாக தோன்றியிருக்கும் மக்களில் பெருங்கஷ்டத்திலகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்படும் ஆதிதிராவிடர்களாகிய நாங்கள் கோவிலில் பிரவேசித்து கல் சுவாமியை தரிசனம் செய்யக்கூட யோக்கியதையில்லாமல் சுயமரியாதையும் சுதந்திரமும் அற்று குளம் கிணறு இவைகளில் தண்ணீர்எடுக்கக்கூடாமல் மற்றவர்களால் தடுக்கப்பட்டும், அம்பட்டன், வண்ணான் இவர்களது உதவி அற்றும் இருக்கிற நாங்கள் கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று சொல்லும் இவ்வுலகின் சில பாகங்களின் பொது ஸ்தலங்களில் நடக்கக்கூட சுதந்திரமற்று, கஷ்ட ஜீவனத்தினால் சம்பாதித்தியம் செய்து வாங்கின துணிகளை முழங்காலுக்குக் கீழ் தொங்கவிட்டுக்கட்டவிடாமலும் செருப்பு முதலியவற்றைக்காலில் போட விடாமலும், தெருக்களில் திண்ணையின் மீது உட்காரவிடாமலும் பொன்னினால் செய்த நகைகளை அணிய வொட்டாமல் தடுக்கப்பட்டும், மற்ற ஜாதிக்காரர்களின் வீட்டில் யாராவது மறித்து விட்டால், இறந்தவர் பொருட்டுச் செய்யும் கருமாதி காரியங்களுக்காக (சில கிராமங்களில்) ஆதிதிராவிடர்களான எங்களையும் மொட்டையடித்து, தாடி மீசை முதலியவற்றை சிரைக்கச் செய்து எங்களையும் அவர்களோடும் துக்கங் கொண்டாடும்படி செய்தும், கல், தட்டோடு போட்ட வீடு இவைகளில் வசிக்க ஒட்டாமல் தடுத்தும், எங்களை அடிமைகளாக வைத்துக்கொண்டு எங்கள் இரத்தத்தை உறுஞ்சிக்கொண்டும், எங்களில் எவனாவது இது என்ன அநியாயம் என்று வாய் திறந்தால் அவனைபத்தை தெரியாமல் வேலை சாய்த்து விடுவதும் தாழ்ந்தவர்கள், தாழ்ந்தவர்களென்று எங்கள் தலையின் மீது அடித்துக் கொண்டிருப்பதும், வாய் வேதாந்தம் பேசி எங்களை வாய் திறக்காமல் செய்வதும், எங்களை எலும்பும் தோலுமாக்கி நடைப்பிணங்களாக செய்துவருவதும், எங்களுக்குச் சொந்த நிலமும் வீடுமில்லாமல் சூழ்ச்சி செய்துக் கொண்டிருப்பதும், எங்களை அந்தகாரத்தில் முழுகவைத்து ஒட்டாண்டிகளாக்குவதும், எங்கள் காற்றுப்பட்டாலே தீட்டு ஒட்டிக்கொள்ளுமென்று எங்களை வெகு தூரம் ஓட்டுவதும், கிராமங்களில் சிறு குற்றத்திற்காக எங்களை தொழுமரத்தில் கட்டி அடித்து பயமுறுத்துவதும், அனாதைகளாகவும், ஆதரவுமற்று நாங்கள் அலைந்து கொண்டிருப்பதும், மூதாதைகளின் சொத்தின்றி முட்டாள்களாயிருப்பதும், பல மதஸ்தர் தெய்வங்களை வணங்கியும் பலனற்று கீழ் நிலைக்குப் போவதும், பாக்கியமில்லாமல் பக்கிரிகளாயிருப்பதும், கேட்பாரில்லாமல் கீழ் ஜாதியாகயிருப்பதும், பொதுயிடங்களிலும், இந்துக்கள் போஜனசாலைக்குள்ளும் போக கதியற்றுயிருப்பதும், நாங்கள் என்னதான் வேதாந்தம் படித்து வெளிவந்தாலும் தலை மீது காலைவைத்து தரையில் அழுக்குவதும் மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை, நந்தன் சரித்திரம் இவைகளைப் படித்தாலும் பலனற்று, பாழடைந்த கோட்டை விபூதி, நாமம், இவைகளைவிடாமல் அணிந்தும் பிரயோஜனமின்றிருப்பதும், சைவர்களாகவும், வீரசைவர்களாகவும், நாளொன்றுக்கு பத்து முறை குளித்தும் நாராயணா, சிவ, சிவா என்றாலும் நாசமடைந்து வருவது

## “வணிக வைசிய செட்டிமார்க”ளுக்கு
# ஓர் வேண்டுகோள்.

(கோபாலகிருஷ்ணன்.)

பழந்தமிழ் மக்களாகிய எனது வணிக வைசியச் சோதரர்களே! உங்களுக்கு மிக அன்புடன் தெரியப்படுத்திக்கொள்ளும் எனது தாழ்மையான விண்ணப்பம் என்னவென்றால்;-

பூர்வகாலமுதலே இந்நாட்டினில் வாழ்ந்த தமிழ் மக்கள் பலரும் பார்ப்பனன் சூழ்ச்சியில் அகப்பட்டு வெவ்வேறு பிரிவினராய் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்ரர், என்று பிரிக்கப்பட்டுப்பின்னர் பிராமணரில் வடகலே, தென்கலே சுமார்த்தர்என்ற மத பேதத்தால் ஆரியப்பிராமணர், திராவிடப்பிராமணர், விசுவப்பிராமணர், சௌராஷ்டிரப்பிராமணர், நாய்ப்பிராமணர், மராட்டியப்பிராமணர் என பிராமணப்பட்டம் தாங்கியும் க்ஷத்திரியரில் நாடார், மறவர், நாயக்கர், ரஜபுத்ரர், முதலியோரெல்லாம்க்ஷத்திரியப்பட்டம்தாங்கியும் வைசியரில் கோவைசியர், பூவைசியர், தனவைசியர், வணிக வைசியர் எனவும் வைசியப்பட்டம் தாங்கியும் அவ்வாறே ‘சூத்ரர்’ என்பவரிலும் பலபிரிவுகளாகவும் பெருகி ஒவ்வொரு பிரிவும் பல்லாயிரம் பிரிவுகளாகப்பிரிந்து நாளடைவில் மக்களுக்குள் வேற்றுமைபெருகி வலிமை கொண்ட சிறு எண்ணிக்கையினரான ஜாதியினர் வலிமையற்ற பெருஎண்ணிக்கை ஜனங்களை மிருகங்களிலும் கடையராய் மதித்து தெருவில் நடக்கவும் இறைவனை வணங்க ஆலயத்துள் செல்லமறுத்தும் பெண்மக்கள் படிக்கவும் ஆண்மக்களைப்போல் சொத்துரிமை, மறுமணம், விவாஹரத்து, முதலியனபெற்று இவ்வுலக வாழ்க்கையை இன்பவாழ்க்கையாய் விளங்கவிடாது துன்பமும், மனக்கவலையும் அடைந்து மாக்களாக வாழும்படிச்செய்த அநீதிகளை எல்லாம் பல்லாண்டாக அரசியல் கிளர்ச்சியில் உழைத்த அனுபோகத்தின் பயனாய் கண்ட ஈரோட்டுப்பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கங்கண்டு குடி அரசு பத்திரிகையின் வாயிலாகவும், சொற்பொழிவு வாயிலாகவும் நாடெங்கும் சென்று வீரகர்ஜனைபுரிந்து எல்லோரும்ஓர் குலம் என்றும் மக்கள் பிறப்பில் உயர்வு தாழ்வு பாராட்டுதல் அநீதி என்றும் ஆலயத்தில் எக்குலத்தாரும் ஏகமாய்ச்செல்லவேண்டுமென்றும் இறைவனுக்கும்மக்கும்இடையில்தரகர்கள் வேண்டாமென்றும்ஆண்டவன்பணத்திலும்தேங்காய்பழத்திலும்ஏமாறுகிறவன்அல்லென்றும் மக்களைமாக்களாய்க்கருதாது மக்களாய் எண்ணி அவர்களுக்குப்பணி புரிதலே இறைவனுக்குச்செய்யும் தொண்டும், வணக்கமும் ஆகுமென்றும் பெண்களை எல்லாவிஷயத்திலும் ஆண்களைப்போல் சமத்துவமும், சம உரிமையும் பெறச்செய்தல் வேண்டுமென்றும் மூட நம்பிக்கைகள், முரட்டுப்பிடிவாதங்களை எல்லாம் ஒழித்து மக்கள் பகுத்தறிவுக்காரர்களாய் விளங்கவேண்டுமென்றும் சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்னர் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். அவ்வமயம் அறிஞர்கள் ஐசுவரியவான்கள், முதலியோர்களின் ஆதரவின்றி ஆரம்பிக்கப்பட்ட அவ்வியக்கத்தை எண்ணிறந்தமக்கள் எள்ளி நகையாடினர். இவ்வியக்கம் நாட்டில் இயங்கப்போகின்றதோ? ஒன்றிரண்டு திங்களில் ஓய்ந்தொழியப்போகின்றது! ஆதரிப்பாரின்றி அவதிப்பட்டுமாயப்போகின்றது! என்றெல்லாம் எண்ணினர். இயம்பினர். எழுதினர். ஈ. வெ. இராமசாமியாரின் இடைவிடா உழைப்பின் பயனாய் மறுக்கமுடியாத மேலான கொள்கைகளைக்கொண்ட பேரியக்கத்தின் தன்மையால் நமது தமிழ்மக்களின் உள்ளம்கவரப்படவே ‘ஓஹோ! வந்தது மோசம்’மென்றெண்ணி வைதிகப்பார்ப்பனக்கூட்டங்களும், அவர்களின் வால்பிடித்துத் திரியும் ஆஸ்திகக்குழாங்களும் அவர் தம் ஆணை வழி நின்றோரும், தேசியப்போர்வையைப்போர்த்த வைதிகப்பத்திரிகைகளும் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் போர் தொடுத்ததில் சுயமரியாதை இயக்கப்பகைவர்களில் புறமுதுகிட்டோடியோர் பலர். பத்திரிகைகள் பலபேரில் அடிபட்டு ஊமையாய் போன மக்கள் பலர். பத்திரிகைகள் பல. உயிர் துறந்த மக்கள் பலர். எனவேமக்கள்பலரும் ‘பொய்யானதுஒழிந்துவிடும் மெய்மானது நிலைத்திருக்கும்’ என்றும் மெய்நெறிகண்டு நாளடைவில் சுயமரியாதைஇயக்கத்திற்சார்ந்துவருவதோடமையாது வட இந்தியாவிலும் மற்றயதேசங்களிலுங்கூட இவ்வியக்கம் பரவிவருகின்றது. அறிஞர்கள் பலரும் ஆதரவளித்துவருகின்றனர். மூன்று பெரிய மாகாண மகாநாடுகளும், பல ஜில்லா, தாலூகா மகாநாடுகளும் கூட்டி லட்சக்கணக்கான மக்கள் விஜயம் செய்து நாட்டின் நன்மைக்கான திட்டங்கள்வகுத்துத்தொண்டாற்றப் பெற்றுவருகின்றது. இவ்வியக்கத்தை திரு. ஈ. வெ. இராமசாமியாருக்கு அடுத்தபடியாக நடத்திக்கொண்டு போக முனைந்து நிற்பவர் அறிவும், ஆற்றலும் ஐசுவரியமும் ஏனைய எல்லாநலன்களும் ஒருங்கே வாய்ந்த நம் குலத்தோன்றலாம் இந்திய சட்டசபை உதவித்தலைவர் உயர் திரு ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ., அவர்கள் என்பதை நீங்கள் யாவரும் நன்கறிவீர்கள்.

அப்பெரியார் நம் குலத்தில் உதித்தவரென்றும் அவர் உலகம் போற்றக்கூடிய உயர் குணங்கள் பலவும் பெற்றுள்ளார் என்பதையும் கண்டு நாம் பெருமை அடையலாம். ஆனால் அவ்வறிஞர் நமது பழக்க வழக்கங்களுக்கு மாறாக என்ஜாதி வேண்டாம், சமயம் வேண்டாம், சாஸ்திரம்வேண்டாம், என்று கூறும் இச்சுயமரியாதைஇயக்கத்தில்சேர்ந்து உழைக்கின்றார் என்பதை நாம் ஒரு சிறிதாவது ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? ஆராய்ந்து பார்த்து அவர் தவறாக செல்வதாக தோன்றினால் அவர் கொள்கையைக்கண்டித்து நமது மக்களுக்கு வேண்டிய நல்ல கொள்கைகளை எடுத்தியம்புவோம். அஃதன்றி உலக நிலைமையை ஒரு சிறிதும் உணராது, நாம் சிறிது பொருள் சம்பாதிப்பதும் அதைக்கொண்டு நன்றாய் உண்டு, உடுத்து இருப்பதே நமது கடமை என்றெண்ணி நிற்கும் நாம் எங்ஙனம் நம் தலைவர் உயர்திரு ஷண்முகம் அவர்கள் கொள்கையை அறிதல் கூடும்?

முதலாவதாக நம் தலைவர் திரு ஆர். கே. எஸ். ஏன் ஜாதிப் பிட்டத்தை துறந்தார் என்பதைப்பற்றி நமது மக்கள் பலர் வினவுகின்றனர்? அவர்கள் அவ்வாறு வினவுவது நியாயமே. ஆனால், பார்ப்பனர்களால் வகுக்கப்பட்ட சாஸ்திரங்களிலே, வாணியர்களை சூத்திரர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. சூத்திரர் என்றால் தேவடியாள் மகன், ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன். என பல பொருள்களையுடையதென்பதை அறிந்த நம் முன்னோர்களில் சிலர் பார்ப்பன குருவாகிய சங்கராச்சாரியாரிடம்சென்று ஏராளமான பொருள்களைக் கொட்டி வாணியர்கள், வைசியர்களென்றும், அவர்கள் பூணூல் அணிவதற்கு, உரித்தானவர்கள் என்றும், அதிகாரப் பத்திரம் பெற்றிருக்கிறோம் என்று பெருமைப் பட்டாலும், நாம் பார்ப்பனர்களால், தீண்டப்படாத ஜாதியார் என்பதையும், பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், தாழ்ந்தவர் என்பதையும் அறிந்த, நம் தலைவர் ஷண்முகம் அவர்கள், நாம் எவருக்கும் தாழ்ந்த ஜாதியாரன்று எனும் உண்மையை ஸ்தாபிப்பதற்கு முயற்சிப்பதோடு ஜாதிப்பேர்கள், ஜாதிக்குறிகள், சமயக்குறிகள், முதலியவற்றைத் துறந்து “குலமும் ஒன்றே குடியும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே, இறப்பும் ஒன்றே” என்ற கபிலரின் அருள் மொழியின் உண்மையை உலகில் ஸ்தாபிக்க அரும்பாடுபட்டு வருகிறார் என்பதை ஆராய்தல் வேண்டும்.

இரண்டாவதாக, திருச்செந்தூரில் நம்மவர்களுக்கும், கோயில்காரர்களுக்கும் ஏற்பட்ட “ஆலய பிரவேச கேஸ்” விஷயமாய் திரு. ஷண்முகம் அவர்கள் எத்தகைய உதவியும் செய்ய மறந்து விட்டார்கள் என்பது நம் மக்களின் பலருள்ளும் தோன்றிக்கொண்டிருக்கும் ஒரு பெரிய வருத்தமாகும். நமது தலைவர் “எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும். இலங்கும் உயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்” என்னும் ஆன்றோர் மொழியைக்கடைப்பிடித்து ஒழுகுபவர். “வேசிகளின் இல்லத்தில் கடவுள் வீற்றிருந்தாலும் வீற்றிருப்பார், தற்காலத்திய கோயில்களில் இறைவன் வசிக்கமாட்டான்” என்று கூறிய மகாத்மா காந்தியடிகளின் அருள் வாக்குக்குப்பெருமதிப்பு கொடுப்பவர். அத்தகைய நோக்கமுடைய ஒருவர், நமது மக்களில் பலர் கல்வியின்றி பாமரர்களாய் விளங்கவும், எளியவர் பலர் உண்ண உணவும், உடுக்க உடையும், படுக்க வீடின்றி பரதவிக்கும் இக்காலத்தே இலட்சக்கணக்காய் பொருளை வாரி யிறைத்து, பாழான ஓர் கல்லைக் கண்டு தரிசிக்கவும் அதன் தலையில் அறிவின்றி பாலையும், பழத்தையும், தேனையும், நெய்யையும், ஊற்றி பார்ப்பன தக்ஷிணையும் கொடுக்கச்செல்லும் ஆலயப்பிரவேசமென்னும் நமது அறியாமைக்கும் எவ்வாறு ஷண்முகம் அவர்கள் ஆதரவு கூட்டமுடியும்? அஃதன்றி ஆலயப்பிரவேசமெனும் நமது உரிமையை ஸ்தாபிக்கவேண்டும். ஆங்குள்ள விக்கிரகங்களை சென்னை கண்காக்ஷிசாலைக்கு எடுத்தனுப்பவேண்டும். கோயிற்சொத்தை மக்கள் நன்மைக்கான வழியிற் பயன்படுத்த வேண்டும் என்று நீங்கள் முயற்சித்தால் அவர் ஒருபொழுதும் நமது வேண்டுகோளிற்கு பாராமுகமாய் இருத்தல் முடியாது. அத்தகைய விஷயத்தில் நம்

---

மான இக்காரியங்களுக்கு ஜவாப்புதாரி யார்? சோம்பேரியும் வஞ்சகனுமான கடவுளென்று சொல்லும் இம்மகாபாவியே இதற்கு ஜவாப்புதாரி. ஏனென்றால், மிருகாதிகளாகிய, பெருச்சாளி, யானை, பூனை, குதிரை, மாடு, கழுதை மலத்திலிருக்கும் வண்டு, புழு இவைகளுக்கு மோட்சம் கொடுத்த இவன், மானிடர்களான எங்கள் மீது கருணையற்று கொடும்பாவிகளான இந்துக்களால் அழுத்தப்பட்டும், அடிக்கப்பட்டும், துரத்தப்பட்டும், தாழ்த்தப்பட்டும் வருவதை இன்றும் எவ்வளவு நாள் பார்த்துக் கொண்டிருப்பான், ஆதலால் இவனும், இவனது மதமும், இவனைச் சேர்ந்தவர்களின் நாற்றமும் எங்களுக்கு வேண்ட வேவேண்டாம். பட்டது போதும். இனி இவ்வுலகில் பரவிவரும் சுயமரியாதை, சமதர்மம், பொதுவுடமை இவ்வியக்கங்களில் கலந்துகொண்டு இவனைக்கண்டால் கழுத்தை அறுப்போம்

# இராமநாதபுரம் ஜில்லா
# தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் துயரமும், சமரசக்கூட்டத்தாரின் நிபந்தனைகளும்.

திருவாளர்களான கோட்டையூர் நாகப்பர்செட்டியார் தேவகோட்டை டி. வி. அருணாசலம் செட்டியார் தேவகோட்டை டிவிஷன் பெரண்டவயல் பேயாடி நாச்சியப்பன் அம்பலம், ஈகரை கிராமத்திலிருக்கும் மு. பெ. ரி. சி. பெரியசாமி அம்பலம், நா. பெ. ரி. பொன்னையா அம்பலம், நா. பெரியஅய்யா அம்பலம், சி. வெள்ளைச்சாமி அம்பலம், மு. கருப்பையா அம்பலம், எழுவங்கோட்டை குருப் ஹெட்மென் கோட்டைவயல் மு. பெரியஅய்யா அம்பலம், க. ரு. உகலப்பன் அம்பலம், தொ. கருப்பையா அம்பலம், ம. கெ. சுப்பையா அம்பலம், ரு. ம. மாயழகு அம்பலம், ஆகியவர்களுடையவும் இன்னும் நாகாடி, சிறுமடை முதலிய கிராமங்களிலுள்ள கனவான்களின் முயற்சியாலும் நாளது 11-9-31ல் ஓர்சமரசக்கூட்டம் தேவகோட்டை வக்கீல் கனம் ஏப்பன் அவர்கள் ஆபீசில் நடைபெற்றது. அவ்வமயம் தாழ்த்தப்பட்டாரின் சார்பாக பலகிராமங்களிலுமிருந்து பிரதிநிதிகளும் அநுதாபிகளும் விஜயஞ்செய்திருந்தனர். நாட்டார்களில் திருவாளர்கள் நாகப்பச்செட்டியாரவர்களையும், டி. வி. அருணாசலம் செட்டியாரவர்களையும் தவிர சகலரும் இன்னும்பலரும் விஜயஞ் செய்திருந்தனர். திரு. ஏ. எஸ். ஜான் அவர்கள் இராமநாதபுரம் ஜில்லாவில் நாட்டார்களுக்கும் தாழ்த்தப்பட்டவகுப்பாருக்குமிடையே கடந்த ஓர்வருடக்காலமாக நடைபெற்று வரும் கோரசம்பவங்களை எடுத்துக் கூறி அதற்குல் இருசார்பாருக்கும் நேர்ந்துவரும் விவசாயப்பொருளாதார ஆபத்தையும் பொது ஜனசமாதானக்குறைவையும் சகலரும் மனங் கசிந்துருகும்படி எடுத்துக்கூறினர். விஜயஞ்செய்திருந்த சகல நாட்டார்களும் தாழ்த்தப்பட்டாருக்கு நேர்ந்த கஷ்டங்களைக்குறித்து மிக உருக்கமாகவும் இரக்கமாகவும் பேசி இத் தொல்லையை அதிவிரைவில் முடிவு செய்து சமாதானத்தை இருசாரார்களுக்குள்ளும் ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டுமெனவும் நாட்டார்களில் ஓர் சார்பார்தான் சமாதான முடிவிற்கு இடையூறாகவிருக்கிறார்களெனவும் அவர்களையும் மறுபடியும் கலந்து ஆலோசித்து சமாதானத்திற்குப்பின் குறிப்பிட்டுள்ளநிபந்தனைகளின் பேரில் உடன்பட முயற்சிப்பதென்றும் எவர்களாவது உடன்படாவிட்டால் அவர்களை நீக்கிவிட்டு சமாதான உடன்படிக்கையை நிறைவேற்றுகிறதென்றும் இந்தமாதம் 20ம் தேதி தேவகோட்டையில் மறுபடியும் இன்னும் பல நாட்டார் சமூகமேதாவிகளுடன் கூடி திட்டவட்டமாக முடிவுசெய்து அப்புறம் கனம் ஜில்லாக்கலெக்டர் அவர்களை அழைப்பித்து அவர்கள் முன்னிலையில் முடிவு செய்துகொள்வதென்றும், அவர்கள் முன்னிலையிலேயே பலமுக்கியஸ்தர்களடங்கிய ஓர் சமாதானக்கமிட்டி ஏற்படுத்திஜில்லா பூராவிலும் சமாதானத்தை நிலை நாட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகள்,

1. தாழ்த்தப்பட்டவகுப்பார் நாகரீகமாக உடை அணிதல், நகைகள் அணிதல், குடைபிடித்தல், செருப்புப் போடுதல், முதலிய விஷயங்களை நாட்டார் தடுக்கக்கூடாது.

2. பொதுக்கிணறுகள், ஆறு, குளங்களில் தண்ணீர் எடுப்பதைத் தடுக்கக்கூடாது.

3. கட்டாயப்படுத்தி ஆண்களையாவது பெண்களையாவது வயல்களில் அல்லது இதர இடங்களில்வேலை செய்யச்சொல்லக்கூடாது. பிள்ளைகளை ஆடுமாடுமேய்க்கவும் கட்டாயப்படுத்தக்கூடாது.

4. வழக்கம் என்றபேரால் தப்படிக்க பிணம்புதைக்க செத்தமிருகங்களைப்புதைக்கக்கட்டாயப்படுத்தக் கூடாது.

5. மதஉற்சவங்களிலும், வேறு பொதுஜன விழாக்களிலும் ஆலயப் பிரவேசத்தைத்தவிர மற்றும் விஷயங்களில் சமத்வமாக கலந்து கொள்வதைத்தடுக்கக்கூடாது.

6. தாழ்த்தப்பட்டவகுப்புத்தலைவர்களாவது சங்கங்களாவது விருப்பப்பட்டு போதிய கூலிக்குத்தப்படிக்கவும், பிணம்புதைக்கவும் செத்தமாடு புதைக்கவும், வேறுவேலைகள் செய்யவும் பிரியப்படுகிறவர்களை சமுதாயக் கட்டுப்பாட்டை உபயோகித்துத்தடங்கல் செய்யக்கூடாது என்பவைகளே யாகும்.

மேற்கூறிய நிபந்தனைகளை விஜயஞ்செய்திருந்த நாட்டார் பிரதிநிதிகளானகனவான்கள்ஏற்றுக்கொண்டார்கள்.

தாழ்த்தப்பட்டவகுப்பாரிடம் நாட்டார்கள் வாங்கிய அபராதங்களையும் வாபீஸ் செய்யச்சொல்லவேண்டுமெனவும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைத் திருப்பிக்கொடுப்பதோடு ஆடுமாடுகளின் கிரயத்தையும் கொடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டுமெனவற்புறுத்துகிறார்கள். அபராதத்தைப்பற்றியும் பொருள்கஷ்டத்தைப்பற்றியும் ஆலோசிக்கப்படவில்லை.

அடுத்த சமரசக்கூட்டம் இம்மாதம் 20ம் தேதி (20-9-31ல்) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் தேவகோட்டையில் கனம் அட்வகேட் எஸ். எஸ். லக்ஷிமிரதன்பாதி அவர்கள் இல்லத்தில் அவர்களின் தலைமையிலேயே நடைபெறும்.

சமாதான முயற்சியில் ஆர்வமுடைய நாட்டார் குலப்பெரியார்களும் இதரவகுப்பு அபிமானிகளான பெரியார்களும் விஜயஞ்செய்ய மிகத் தாழ்மையாகவேண்டிக்கொள்கிறேன்.

இவ்விஷயத்தை பத்திரிகைகளில் அறிக்கை செய்ய 11-9-31ல் கூடிய சமாதானக்கமிட்டிக்கூட்டத்தாராகிய நாட்டார்கள் எனக்கு உத்திரவு செய்திருக்கிறார்களென்பதை வாசகர்களுக்கும் நாட்டார்குலப்பிரமுகர்களுக்கும் அநுதாபிகளுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்புப்பிரமுகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன் என இராமநாதபுரம்ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சபை தலைவர் திரு ஏ. எஸ். ஜான் எழுதுகிறார்.

---

மால் துவக்கப்படும் சத்தியாக்கிரகத்திற்கு-ஏன்?---பலாத்கார இயக்கத்திற்கும் அவர் முன் வந்து தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்ய எச்சமயத்திலும் தயாராய் இருக்கிறார் என்பதை நாம் அறிதல் வேண்டும். நமது ஆர். கே. ஷண்முகம் அவர்கள், தலைமை வகித்து நடாத்தும் புனித சுயமரியாதை இயக்கத்தில் சேராவிடில் நமது மனித உரிமைகளை பெற முடியாதென்பதோடு, நம் பெண் மக்கள், கல்வி, அறிவு, சொத்துரிமை முதலியன பெற்று நமது சங்கத்தாலும், நமது முன்னேற்றத்திற்காக நடத்தப்பட்ட "வணிக நேயன" என்னும் சிறிய மாதப்பத்திரிகையிலும் பன்முறையும் ஆதரித்து எழுதப்பட்ட மறுமணம், கலப்பு மணம் முதலியன பெற்று முன்னேற்றமடைய நமது பெரியார்கள் இனியாவது முயற்சிக்கும்படி அவர்கள் பால் மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்மைப்போன்று, தம் பெற்றோர், மனைவி, மக்கள் முதலிய வற்றையும் துறந்து உலக நிலைமையையும், தமது ஸ்திதியையும் நினையாது இலங்கை, பர்மா, முதலிய நாடுகளில் போய்க் கஷ்டப்பட்டு பொருளைச்சம்பாதித்து தாமும் அனுபவியாது பிறருக்கும் கொடாது இல்லற இன்பத்தைக்கூட நன்றாய் அனுபவியாது, கனவிலும், பொருளீட்டுவதைத் தவிர்த்து ஏனைய எவ்விஷயத்திலும் கவலை கொள்ளாத நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகத்து யுவர்கள் பலர் முன் வந்து தங்கள் சமூக முன்னேற்றத்திற்காக பல பத்திரிகைகள் ஆரம்பித்தும், நாட்டின் விடுதலைக்கவசியமான சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து மூடப் பழக்கவழக்கங்களையொழித்து, கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம் முதலியன புரிந்து பார்ப்பனீயத்தையும். சமயபித்து, ஜாதிபித்து, முதலியவற்றையும் ஒழித்து, எத்தகைய முன்னேற்றச் செயல்களையும் புரிய முன் வந்து நிற்பதை நாம் உணர்ந்து சுயமரியாதைக்கொள்கைகளை ஆராய்ந்தறிந்து, ஆண், பெண், மக்கள் எல்லோரும் போதிய கல்வி கற்று, நமது சமூகத்தைப் பீடித்துள்ள பழங்கால வைதீகக் கட்டுப்பாடுகளனைத்தையும் ஒழித்து நம் தலைவர் உயர்திரு ஆர். கே. ஷண்முகம் அவர்களியற்றும் அருந்தொண்டிற்கு பக்கபலமாக நின்று நம் முனைந்து பாடுபடுவோமாக.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சில உதாரணங்களை மட்டும் தவிர்த்து, ஏனையவைகள் யாவும் ஆங்கிலத்திலேயே அச்சடிக்கப்பட்டன. மேலும், இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் யாவரும் சாதாரணமாக அறிந்து கொள்ளுவதற்காக வேண்டி தற்காலம் இந்தியாவில் வழங்கப்பட்டு வரும் 222 இந்திய பாஷைகளால் முதலில் கூறப்பட்ட சாக்ஷியங்களனைத்தும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்படியாக நேர்ந்தது.

"சமூக, மத சம்பந்தமான பழக்க வழக்கங்களையும், அவைகளைச்சார்ந்த அந்தரங்க விஷயங்களையும் அறிந்து கொள்ளுவதற்காக வேண்டி இதற்கு முன் எத்தகைய உத்தியோகப்பற்றற்றவர்களடங்கிய ஒரு கமிட்டியும் முயற்சி செய்யவேயில்லை. மேலும், இப்பொழுது நாடியது போல, பொது மக்களின் உதவியையும் இவ்வளவு தூரம் எந்தக்கமிட்டியும் நாடவில்லை" யென இக்கமிட்டியார் அறிக்கையிலும் காணப்படுகின்றது.

இக்கமிட்டியால் செய்யப்பட்ட வேலைகள் முழுவதும்—அதாவது அன்னியரின் உபயோகத்திற்காகத்தயாரிக்கப்படாததும், ஆலோசனையின் மீதும், எண்ணிக்கைகளின்மீதும்எழுதப்படாததும், பிறர் பார்த்தால் தெரிந்து கொள்ளக்கூடுமேயென யெண்ணி எழுதப்படாததுமானதும், ஆனால் நிதானமாகவும், சாந்தமாகவும், இரகசியமாகவும், இந்தியர்களால், இந்தியர்களுக்காக, இந்தியாவில், இந்தியர்களின் விஷயங்களைக் குறித்து கேட்கப்பட்டு, நிதானமாகவும், சாந்தமாகவும் இரகசியமாகவும், உரைக்கப்பட்டதுமானதும் உத்தியோகஸ்தர்களின் கூட்டுறவின்றி தயாரிக்கப்பட்டதுமான அந்த யோரானமான சாக்ஷியங்கள் யாவும் தற்காலமிருக்கக்கூடிய நிலைமையை, அவைகளின் எல்லைகளுக்குள்ளாகவே, மூலகாரணங்களுடன் புலப்படும்படியாகச் செய்கின்றது.

இந்திய சட்ட நிருபணர்களின்மனதிலேற்பட்டிருக்கும் உண்மையானதும், தாறுமாறானதுமான அபிப்பிராயங்களைக்குறித்தும், நாம் பலவிதமாகக்கேள்விப்படும் விஷயங்களைக்குறித்தும் உள்ளதையுள்ளவாறே, அவைகளின் மூலகாரணங்களைக் கொண்டே அறிந்து கொள்ளுவதற்கு இவ்வறிக்கை உதவிசெய்யுமாதலால், அவைகளை இப்பொழுது நாம் பரிசிலனை செய்து பார்க்கவேண்டுமென ஏற்படுகின்றது.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

ளைப்பற்றிக்கூறும் நிபுணனாகவும், வியாதியஸ்தனுக்கு வைத்தியம் செய்யும்வைத்தியனாகவும், மற்றும்சகுனம், குறி, கை ரேகை பலன்கள் ஆகியவை சொல்லவும், சாந்தி முதலியவைகள் செய்யவும், மந்திரங்களால் அநேக காரியங்கள் செய்யவுமான காரியங்களுக்குத்தன்னை அருகதையுடைய நிபுணனாகக்காட்டிக்கொண்டு எல்லாக்காரியங்களிலும் தாராளமாய் தலையிட்டு வந்திருக்கிறான். இவ்வளவு சக்தியும் ஒருவனுக்கே பொருந்துவதுஎன்பது சுலபத்தில் முடியாத காரியமாயிருந்தபோதிலும் கூட நம்நாட்டுப்பொதுஜனங்கள் படித்தவன் என்றுசொல்லப்பட்ட ஒவ்வொருவனுக்கும் இத்தனை யோக்கியதைகளும் இருக்கின்றன என்று தான் கருதிக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

கிராமத்திலுள்ள மற்ற உயர்ந்த ஜாதிக்காரர்கள்என்பவர்களும்,(அதாவது கல்வி கற்க அருகதையுடையவர்கள் என்பவர்களும்) கல்விகற்பது என்பதை எழுதப்படிக்க, கணக்குக்கூட்டப்பெருக்கி சொல்வதும் மத சம்பந்தமான பிரார்த்தனைகள் செய்ய அறிந்து கொள்வதையுமேதான் கல்வி என்று கருதி அந்த அளவிலேயே இருந்துவந்திருக்கின்றார்கள்.

இவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு விட்டபிறகும் தங்களது கல்வியைவிர்த்திசெய்து கொள்ளுவது என்பதெல்லாம் ஏதாவது ஒரு புராணத்தில் சற்று அதிகமான அறிவும், பழக்கமும் குருட்டு உருப்போட்டு மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் சக்தியைப் பெறுவது தான் என்று கருதி வந்திருக்கின்றார்கள்.

தொழில் பயிற்சி,

அன்றியும் மக்களுக்கு ஏற்படவேண்டிய பயிற்சிகள் என்பவை கூட மத சம்பந்தமான சடங்குகளை தீவிரமாகச் செய்யக்கற்றுக்கொள்வதாகவே இருந்து வந்தது. தொழில் பயிற்சி முறைகளிலும்கூட அவனவனுக்கு ஏற்பட்ட ஒரு குறிப்பிட்ட தொழிலில் மாத்திரம் அவனவன் தனது பயிற்சியை உபயோகப்படுத்த முடிந்ததே தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் மூட நம்பிக்கைகளுடன்கண் மூடித்தனமாய் பழைய பழக்க வழக்கங்களையேதான் பின்பற்றி வந்தார்கள்.

தங்களுக்குத்தெரியாத எந்தவிஷயத்திலும் பகுத்தறிவை உபயோகித்து ஆராய்ச்சி செய்யும் தன்மையிலீடுபட முயற்சிப்பதே கிடையது.

ஸ்தலயாத்திரை என்பதற்கு மாத்திரம் அல்லாமல் மற்றபடி வேறு எந்தக் காரியங்களையுத்தேசித்தும் பொது ஜனங்கள் தங்கள் தங்கள் ஊரை விட்டு வெளியூர்களுக்குப் போகின்ற வழக்கமேயில்லை. ஆகையால் அவர்களுடைய சொந்த நாட்டின் நடவடிக்கைகளைத் தவிர வேறு நாட்டின் நடவடிக்கைகளை அறிய அவர்களுக்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை.

எவ்வளவு பெரிய பிரச்சினையானாலும் புராண ஆதாரங்களைக்கொண்டும் நெடுநாளைய பழக்க வழக்கங்களைக்கொண்டுமேதான் நிர்ணயித்து விடுவதேயல்லாமல் அறிவோடு பரிசீலனைசெய்துபார்த்து முடிவுகாணமுயற்சிப்பது என்பதுகிடையாது.

அன்றியும் புதிய முறைகளாக காட்சிகளாகவும் காணப்படும் எதையும் வெறுப்பதும் கண்டிப்பதும் ஒதுக்கித்தள்ளுவதுமேதான் அவர்களின் முன்னேற்றத்தின் அறிகுறியாயிருந்து வந்திருக்கின்றது. (தொடரும்)

---

## திருமணம்.

மதுரை ஜில்லா நிலக்கோட்டைக்குத் தெற்கே சுமார் அரைமைல் தூரத்திற்கப்பால் இருக்கும் துரைச்சாமிபுரம் என்ற ஊரில் 14-9-31ந் தேதியில் மணமகன் திரு. கண்ணையாவுக்கும், மணமகள் மிஸ் காமாக்ஷி அம்மாளுக்கும் இவ்வூர் பிரபல வியாபாரியும் மாஜி யூனியன் போர்டு பிரசிடெண்டும் சுயமரியாதைத் தலைவருமான உயர்திரு கு. அ. காளியப்பன் அவர்கள் தலைமையின் கீழ் மூடப்பழக்க வழக்கங்களை அறவே ஒழித்து சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப்படியே திருமணம் சிறப்பாய் நடந்தேறியது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---


## பஞ்சமா பாதகங்கள்

எவை?

ஏன் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தக் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதாவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

---

வைத்திய பாஸ்கர பண்டித S. S. ஆனந்தரின்

மகா

# சந்தனாதித்தைலம்

(24 வருடங்களாக உலகத்தில் பிரசித்தி பெற்றது)

இத்தைலம் மூளை பலவீனத்தையும் நரம்புத்தளர்ச்சியையும் மிக விரைவில் நீக்கி புதிய சக்தியைத் தரவல்லது. கண்களுக்கு ஒளியையும், குளிர்ச்சியையும் அளிப்பதில் நிகரற்றது. ஞாபகசக்தியை அதிகப்படுத்துவதில் ஒப்புயர்வற்றது. இன்றே ஒரு புட்டி வாங்கி உபயோகித்துப்பயனடையுங்கள் வீணே போலித் தைலங்களுக்கு காசை யிரையாதீர்கள்.

6 அவுன்சு ரூ. 1-0-0. 12 அவுன்சு ரூ. 1-14-0.

## நரம்புத்தளர்ச்சியால் ஏற்பட்ட தலைநோயை குணப்படுத்தியது.

“பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களால் செய்யப்பட்ட மருந்துகளை சிலகாலமாக என்னுடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு மிக்க அனுகூலத்துடன் உபயோகித்து வந்திருக்கின்றேன். என் மகளுக்கு நரம்புத்தளர்ச்சியினால் ஏற்பட்ட தலைநோயை அவருடைய மகா சந்தனாதித் தைலம் குணப்படுத்தியது.........”

திவான்பகதூர் பி. கேசவப்பிள்ளை,
சி. ஐ. இ. எம. எல். சி.

இனாம்.

விலாசம் தெரிவிப்போருக்கு சுகவழி என்ற புத்தகமும் கேட்லாக்கும் இனாம்.

தந்திவிலாசம்:— ‘மருத்துவன்’ சென்னை. டெலிபோன்நெ. 2584 | தமிழ் வைத்தியசாலை, 221, தங்கசாலைத்தெரு, சென்னை

---

## சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

## புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அனைவர் ஆப்டோன் படங்கள், அரியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகள் அனைத்தும் இந்த அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்துள்ள நல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணா.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7-அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

---

அயர்லாண்ட் ஆஸ்பத்திரி குதிரைப்பந்தய லாட்டரி

மான்சேஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப் (நவம்பர் 28—1931)

1-வது பிரைஸ் 30000-பவுன்கள் 2-வது பிரைஸ் 15000-பவுன்கள், 3-வது பிரைஸ் 10000-பவுன்கள் வேறு 200 பிரைஸ்களுமுண்டு. டிக்கட் 1-க்கு ரூ. 7—8—0 டிக்கட்டுக்கு முன்பணத்துடன் முந்துங்கள்!

டிக்கட் கிடைக்குமிடம்:—

எஸ். கே. வரதராஜலு, ஏஜண்ட், திருச்செங்கோடு S.I.

---

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

## மாதர் சுதந்திரம் அல்லது

# பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 10. (பத்து)

கிடைக்குமிடங்கள்:- “குடி அரசு” புத்தகாலயம். ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்.

## குடி அரசு புத்தகாலயம்.

| | | |
|---|---|---|
| கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. | ... | 0—8—0 |
| மனு நீதி மருமம் | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... | 0—2—0 |
| சோதிடப் புரட்டு. | ... | 0—2—0 |
| திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) | ... | 0—2—0 |
| சுயமரியாதைப் பாடல் | ... | 0—2—0 |
| தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். | ... | 0—3—0 |
| பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை | ... | 0—4—0 |
| ஞானசூரியன் | ... | 0—4—0 |
| இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம் | | 0—4—0 |
| ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் | ... | 0—8—0 |
| மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு) | | 0—3—0 |
| அகத்தியர் ஆராய்ச்சி | ... | 0—2—0 |
| கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? | ... | 0—2—0 |
| *குறள் | ... | 0—8—0 |
| * இயற்கைமதம் | ... | 0—8—0 |
| * சிதம்பர ரகசியம் | ... | 0—8—0 |
| * சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை. | | 0—4—0 |
| * சுயமரியாதைத்தத்துவகீதங்கள் | ... | 0—4—0 |
| * பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] | ... | 0—6—0 |
| * ஈ. வெ. இராமசாமியின் போட்டோ படம் | | 0—8—0 |
| * மாதர் சுதந்திரம். | ... | 0--10--0 |
| * ஆராய்ச்சி அணிகலம் | | 0--12--0 |
| * சென்னை லோகல் போர்டு ஆக்ட் | ... | 2—0—0 |

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**

ஈரோடு

## 'சண்டமாருதம்'

### சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

நிறைந்த செய்தி! குறைந்த சந்தா!

ஆணித்தரமான அபிப்பிராயம்! அச்சமற்ற கண்டனம்!!

இன்றே சந்தாதாரராகுங்கள்.

சந்தா விபரம்.

உள் நாடு.

| | | | |
|---|---|---|---|
| வருடம் ஒன்றுக்கு | ... | ரூ. | 13—8—0 |
| மாதம் ஒன்றுக்கு | ... | ரூ. | 1—2—0 |
| தனிப்பிரதி ... | ... | ரூ. | 0—0—6 |

வெளி நாடு.

| | | | |
|---|---|---|---|
| வருடம் ஒன்றுக்கு | ... | ரூ. | 18—0—0 |
| ஆறுமாதம் | ... | ரூ. | 10—0—0 |

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சினாப்பள்ளி.

## கெந்தகமே—இந்தயுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-விந்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முரிந்த சீழ்) வெளியாகும் 217 வித வெட்டை வியாதிகள், 21 வித கிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத்தூரு, அண்டப்புத்து, பௌத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, க்ஷயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் கிறந்தியும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதுவேசமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினாலோ, தளர்ச்செய்துக கொண்டதினாலோ, சூதகம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊடுருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதற்கு சந்துகட்டு என்பதற்கும் துடையின் இரத்த நரம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கணடு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பிள்ளை வாதங்களையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, நாது என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக்கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பாக்கிங் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

**டாக்டர். B. A. எதிராஜ்,**

(கால்ராபைரி)

**கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.**

## குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85, Paul Street,
Seramban N. S

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu.

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்:
"முன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

## சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

### 'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சொ. முருகப்பா.

விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி.
ராமநாதபுரம் ஜில்லா

### 'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

### 'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

### "நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு „ 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

### 'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

## சுயமரியாதை தலைவர் போட்டோ படங்கள்.

சுயமரியாதைத்தலைவர் ஈ. வெ. இராமசாமி அவர்களின் போட்டோ படம்

| | |
|---|---|
| காப்பி 1-க்கு | 0—8—0 |
| டஜன் 1-க்கு | 6—0—0 |

ஒருகாப்பி வேண்டுவோர் 11 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வெளிநாட்டுக்காரர்கள் 12 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

யாலு & Co.,
ஓரியண்டல் போட்டோ ஹவுஸ்,
4நெ கோர்ட் வீதி, ஈரோடு.

## பெண்கள் தேவை.

விதவை, ஏழை, யாவரும், எக்குலத்திலும் தெரிவிக்கலாம்.

A. C/o
குடி அரசு, ஈரோடு.


அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம்.சாமி.

# குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் குஷ்டம், கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், கிரேகம் அழுகி துர்நாற்றமுடைய பவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. ஏழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.



இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள்

திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியுமடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் செந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினாங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்[illegible] பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற [illegible]தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.


உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டுத்[illegible] நாகம்மாளால் வெளியிடப்பட்டது